# காக்கைச் சிறகினிலே

அகிலா கோவிந்த்



இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

காக்கைச் சிறகினிலே ★ அகி...


காக்கைச் சிறகினிலே

அகிலா கோவிந்த்




...முடிவு கொண்ட
...மையான நாவல்

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | காக்கைச் சிறகினிலே... | 5 |
| 2. | காதல் மலர் | 61 |
| 3. | பனி மலர் | 142 |


# காக்கைச் சிறகினிலே...

## 1

அலாரம் வைத்து எழுந்தது போல் அதிகாலை மைதிலி எழுந்துவிட்டாள். நேற்று அவள் படுக்கும்போது இரவு பன்னிரண்டு மணி.

அத்தை அன்னபூரணி கொடுத்த ஒவ்வொரு வேலையையும் முகம் சுளிக்காமல் செய்தாள். அன்னபூரணி மகா கொடுமைக்காரி. தன் சொந்தத் தம்பியின் மகள், ஆதரவில்லாமல் இங்கு வந்திருக்கிறாள், தாயில்லாப் பெண் என்றெல்லாம் பாராது மைதிலியை விரட்டு விரட்டென விரட்டுவாள்.

மைதிலி எப்போதும் வாய் பேசுவதில்லை என்ன சொன்னாலும் ஒரு சிறு புன்னகை தோன்ற வாங்கிக் கொள்வாள். எதிர்த்து ஒரு வார்த்தை கேட்க மாட்டாள்.

ஆனால், இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் அன்னபூரணியின் கணவரான சதாசிவத்திற்குக் கோபம் கொப்பளிக்கும். 'பாவி, அந்தச் சின்னப் பெண்ணைப் போட்டு இந்தப் பாடு படுத்துகிறாளே?' என அங்கலாய்ப்பார்.

மைதிலிக்கு ஆதரவாய், பரிந்து பலமுறை பேச வருவார். அன்னபூரணியின் கடுமையான முறைப்பு அவரை அடக்கிவிடும். முப்பது, நாற்பது வருடங்கள் அவளுக்குக் குனிந்தே பழகியாயிற்று. இனியா மாற்ற முடியும்?

ஆனாலும் சதாசிவம் மைதிலி மேல் தனிப் பிரியம் கொண்டிருந்தார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் கனிவாய்ப் பேசி தன் பாசத்தைக் காட்டுவார்.

மைதிலி மளமளவென வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். கூடவே அவளுள் அப்பாவைப் பற்றிய நினைப்பு ஓடியது.

இந்த அப்பா என்ன ஆனார்?

'கொஞ்ச நாள் இங்கே இரு. வியாபார விஷயமாய் டெல்லி வரை செல்கிறேன்' என்று கூறிச் சென்றவர் இன்னும் வரவில்லை! ஒரு லெட்டர் கூடப் போட வில்லை ஏன்? அப்பா ஒருபோதும் அப்படி இருக்க மாட்டாரே!

என்னதான் ஆயிற்று அவருக்கு?'

''என்னடி செய்யற?'' என்றபடி டக்கென தலையை ஒரு கரம் தட்டியது. மைதிலி திடுக்கிட்டுப் பார்த்தாள்.

பூதாகாரமாய் கண்களை உருட்டியபடி அப்போதுதான் எழுந்து வந்து அன்னபூரணி நின்று கொண்டிருந்தாள்.



''அனாதைக் கழுதைக்கு யோசனையைப் பாரு!''

ஊசியாய் அன்னபூரணி வார்த்தைகள் ஏற்றியதும் மைதிலி துடித்துப்போனாள். அவளால் தாங்க முடிய வில்லை. பதிலுக்கு வெடுக்கென திரும்பினாள்.

''அத்தே...''

''என்னடி?''

''அப்படிச் சொல்லாதீங்க. நான் ஒண்ணும் அனாதை இல்ல. எனக்கு அப்பா இருக்கார்...''

''எங்க இருக்கான்?''

''அவரது ஏற்றுமதி வியாபார விஷயமாய் டெல்லிக் குப் போயிருக்கார். சீக்கிரம் வந்து என்னை அழைச்சிட்டு போவார்...!''

''அவன் ஒரு நாளும் வரமாட்டான். என் தம்பியை, அந்த தறுதலைப் பயலைப் பத்தி எனக்குத் தெரியாதா? அவன் வசமா உன்னை என் தலையில கட்டிட்டு, சனியன் ஒழிஞ்சதுன்னு நிம்மதியாய் போயிட்டான்...!''

மைதிலி காதைப் பொத்திக் கொண்டாள்.

அன்றைய பொழுது ஒருவாறு ஓடிற்று. அன்று இரவு மைதிலி கண்கள் நனைய அழுதாள். அப்பாவுக்காக ஏங்கினாள்.

மறுநாள் காலை பத்து மணி. மைதிலி அடுப்பில் குக்கரை ஏற்றிவிட்டு வழக்கம்போல் கூடையுடன் காய் கறி வாங்க கிளம்பினாள். அன்னபூரணி கறாராய் எண்ணிக் கொடுத்த இருபது ரூபாயை இறுகப் பிடித்துக் கொண்டு மார்க்கெட் பகுதி நோக்கி நடந்தாள்.

மார்க்கெட் பகுதியை நெருங்கும் போதுதான் மார்க் கெட்டை ஒட்டிய ஆலமரத்து நிழலில் அவளுக்காக

ஆனந்தன் காத்திருப்பது தெரிந்தது. ஆனந்தன் அவள் வரும் திசையை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். ஆனந்தன் பக்கத்து வீட்டுக்காரன். அவள் மீது அதீத அன்பு காட்டுபவன்.

மைதிலி கண்களில் பட்டதும் மின்சாரம் வந்தது போல் அவனது முகம் பிரகாசமானது. மைதிலிக்கும் அவனைப் பார்த்ததும் இனம் புரியாத பரபரப்பொன்று ஏற்பட்டது. அடக்கிக் கொண்டாள். சட்டென இமைக்க மறந்து அவனையே உற்று நோக்கிய கண்களை ஒரு கணம் தாழ்த்திக் கொண்டாள்.

''மைதிலி...''

அவனது குரல் கேட்டதும் அப்போதுதான் பார்ப்பது போன்ற முகபாவனையுடன் மைதிலி அவனைப் பார்த்தாள். செயற்கையாய் ஆச்சரியம் காட்டி ''ஓ... நீங்களா?'' என்பது போல் அவள் பார்த்ததும் ஆனந்தனுக்குச் சிரிப்புதான் வந்தது.

அடக்கிக் கொண்டவன் அவளது படபடத்த கருவிழிகளையே உற்றுப் பார்த்தான்.

''மைதிலி, உனக்காகத்தான் நின்று கொண்டிருக்கிறேன்.''

''எனக்காகவா?''

''உன்னிடம் பேச வேண்டும்.''

''என்னிடமா?''

''ஆம். முக்கியமான விஷயம் பேச வேண்டும். முதலில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு வா. உனக்காகக் காத்திருக்கிறேன்...''



மைதிலி பரபரப்பு அடங்காதவளாய் அவசரத்துடன், வேண்டிய காய்கறிகளை வாங்கினாள்.

கணக்குப் பார்த்து கடைக்காரனிடம் சரியான சில்லரைக் காசுகளை வாங்கிக் கொண்டு ஆனந்தனை நோக்கி நடந்தாள்.

ஆனந்தனோ.. கைகளைக் கட்டியவாறு அவளையே, அவளின் வருகையையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். மைதிலி அப்பா கொடுத்திருந்த பழைய ரிஸ்ட் வாட்ச்சை திருப்பி மணி பார்த்துக் கொண்டாள்.

பத்து முப்பது.

இன்னும் ஐந்து நிமிடத்தில் அவள் வீட்டில் இருந்தாக வேண்டும். இல்லையெனில் அன்னபூரணி ருத்ர தாண்டவமாடி விடுவாள்.

''எனக்கு சீக்கிரம் போக வேண்டும்...'' என்றாள் மைதிலி ஆனந்தனைப் பார்த்து. ஆனந்தன் கட்டிய கைகளை விடுவித்து புன்முறுவலைப் பெரிதாக்கினான். ''என்றுதான் உனக்கு அவசரமில்லை? எப்போதும் அவசரம்தான். அன்னபூரணிக்குப் பயப்படுவதுதான்! அதைத் தவிர உன் வாழ்வில் வேறு என்ன இருக்கிறது?''

''எல்லாம் சரியாகிவிடும். ஆனால் இப்போது எனக்கு வேறு வழி இல்லை!'' என்றாள். அவள் கவலையை ஆறுதல்படுத்துவது போல் ஆனந்தன் நின்று ஒரு வினாடி அவளையே உற்றுப் பார்த்தான்.

''வழி இருக்கிறது..'' என்றான் அமைதியாய்.

''வழி இருக்கிறதா?''

''உனது அடிமைத்தனத்திலிருந்து விடுபட வழி கிடைத்துவிட்டது.''

''என்ன வழி?''

''உனக்கொரு வேலை கிடைக்கப் போகிறது...''

''வேலையா? எனக்கா?''

மைதிலி அதிர்ந்துபோய் மூச்சு விடாமல் அவனைப் பார்த்தாள். ஆனந்தன் இதழ் விரிய சிரிக்க ஆரம்பித்தான்.

''ஆச்சரியப்படாதே. உனது டிகிரி, டைப்ரைட்டிங் சாட்டிபிகேட்டுகளை என்னிடம் கொடுத்திருந்தாய் அல்லவா; அதை வைத்து எனக்குத் தெரிந்த கம்பெனி ஒன்றில் வேலை தேடினேன். வேலையும் கிடைத்துவிட்டது...!''

''என்ன வேலை?''

''டைப்பிஸ்ட் வேலை. மாதம் மூன்றாயிரம் ரூபாய் சம்பளம்.''

''மூன்றாயிரம் ரூபாயா?''

நம்ப முடியாமல் மறுபடி வாய் பிளந்தவள், ஆச்சரியம் விலகாமலே அவனைப் பார்த்தாள்.

''நிஜம்.. நிஜம்தானே? நீங்கள் சொல்வது நிஜம் தானே?''

''உண்மைதான் மைதிலி...!'' ஆனந்தன் சத்தியம் செய்தான்.

கூடவே தயாராய் கையில் கொண்டு வந்திருந்த கவரை நீட்டினான்.

''மைதிலி, இதுதான் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர். நீ வேலைக்குச் சேர்வதற்கான உரிமைப் பத்திரம். நாளைக்கு இந்த அலுவலகம் சென்று நீ வேலைக்குச் சேர்ந்தாக வேண்டும்.''



''நாளைக்கேவா?''

''ஆமாம், அதில் என்ன தயக்கம்?''

''அத்தை என்னை விடுவாங்களா? எனக்கு பயமா இருக்கு!''

## 2

மைதிலிக்கு எப்படி அந்த தைரியம் வந்ததென்று தெரியவில்லை. அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. ஒரு வழியாய் துணிந்து அத்தை அன்னபூரணியிடம் 'நான் வேலைக்குப் போகணும்' என்று கேட்க முடிவெடுத்து விட்டாள்.

எல்லாம் ஆனந்தன் கொடுத்த தைரியம்தான். ஆனந்தனின் வார்த்தைகள்தான் அவளது காதுகளில் ரீங்காரித்தது.

''என்ன மைதிலி யோசிச்சிட்டிருக்கே?''

சட்டென குரல் கேட்டு மைதிலி கலைந்தாள்.

கேள்வியைக் கேட்டவாறு மாமா சதாசிவம் வந்து கொண்டிருந்தார்.

அவளுக்குச் சட்டென அந்த நினைப்பும் தோன்றியது. 'பேசாமல் மாமாவிடம் வேலை விஷயத்தைச் சொல்லி எப்படியாவது அதை பக்குவமாய் அன்னபூரணியிடம் எடுத்துக் கூறி சம்மதிக்கச் செய்யலாமே?'

"மாமா, உங்ககிட்ட ஒரு உதவி வேணும்..." மைதிலி இழுத்தபடி சதாசிவத்தைப் பார்த்தாள்.

"அது வேற ஒண்ணுமில்ல மாமா. வேலை விஷயம். நான் ஒரு வேலைக்குப் போகப் போறேன்."

"வேலைக்குப் போகப் போறியா?"

சதாசிவம் ஆச்சரியப்பட, மைதிலி ஆனந்தன் மூலமாய் கிடைத்த வேலை விஷயத்தை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தாள்.

கேட்ட சதாசிவம் உண்மையிலே சந்தோஷப்பட்டார்.

"மாமா நீங்கதான் எப்படியாவது எனக்கு உதவணும். அத்தை கிட்ட சொல்லி சம்மதிக்க வைக்கணும்..."

"செய்யறேன்ம்மா... கண்டிப்பா செய்யறேன். உனக்கு இந்த வேலை மூலமா நல்ல விடிவுகாலம் வந்திருக்கு. அதனால எப்படியாவது அன்னபூரணியை சம்மதிக்க வைக்கிறேன். அதுக்கான வழியைத்தான் யோசிக்கிறேன்..."

சதாசிவம் சொல்லியபடி நெற்றியைச் சுருக்கி யோசனையில் ஆழ்ந்தார்.

## 3

சதாசிவம் மாமா சொன்னதோடு நிற்கவில்லை. நேரம் பார்த்து அன்னபூரணியிடம் பேசினார். விஷயத்தைப் பக்குவமாய் எடுத்துச் சொன்னார். கடைசியில் சம்மதமும் வாங்கிவிட்டார்.



மைதிலிக்கு விஷயம் மாலை கிணற்றடியில் பாத்திரங் களை துலக்கிக் கொண்டிருந்த போதுதான் தெரிந்தது. அன்னபூரணி உள் கட்டிலிருந்து அவளை அழைக்கும் குரல் கேட்டது.

பயபக்தியோடு உள்ளே போனாள்.

"இப்படி நில்லு. மாமா சொன்னதைக் கேட்டியா?" அன்னபூரணி அதே அதிகார தோரணையில் கர்ஜிக்க.... மைதிலி திரும்பி பக்கத்தில் சாதுவாய் நிற்கும் மாமாவைப் பார்த்தாள்.

சதாசிவமும் நன்றாக நடித்தார்.

"என் ப்ரெண்டு ஒருத்தன் கம்பெனியில உனக்கு வேலைக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன் மைதிலி" புதுசாய் விஷயத்தைச் சொல்வது போல் சொன்னார். மைதிலி திரும்பி அன்னபூரணியைப் பார்த்தாள்.

"நாளையிலிருந்து நீ வேலைக்குப் போற, புரியுதா?" மைதிலி தலையாட்டினாள்.

"உனக்கு சம்பளம் எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு?" புரியாதவள் போல் மைதிலியும் நடித்து மாமாவைப் பார்த்தாள்.

"மூவாயிரம் ரூபாய்."

"ஆமா மூவாயிரம் ரூபா. மாசம் முடிஞ்சு சம்பளம் வாங்கினதும் சல்லிக்காசு குறையாம என்கிட்ட கொடுத்திரணும் புரியுதா?"

மைதிலி பெருமூச்சு விட்டாள். ஏதோ வேலைக்குப் போகவாவது அத்தை அனுமதி கிடைத்ததே... என நிம்மதி அடைந்தாள்.

மறுநாள் காலை உற்சாகமாய் மைதிலி கிளம்பி விட்டாள். கிளம்பும் முன் ஆனந்தன் அவளைத் தனியே சந்தித்தான்.

''மைதிலி...''

''ஆனந்தன், உங்களைத்தான் நினைத்தேன். எனக்கு பயமாக இருக்கிறது.''

''என்ன பயம்?''

''நான் இதுவரை எந்த அலுவலகத்திலும் வேலை பார்த்ததில்லை...''

''ஒன்றும் பயப்படாதே மைதிலி. எனக்குத் தெரிந்த கம்பெனிதான். அதன் மேனேஜர் எனக்கு வேண்டியவர் தான். அவரிடம் உன்னைப் பற்றிய எல்லா விவரங் களையும் சொல்லிவிட்டேன்...''

''சொல்லிவிட்டீர்களா?''

''ஆமாம். அதனால் நீ நேராக மேனேஜரை சென்று பார்த்தால் போதும். உடன் வேலைதான்.''

''என்னால் நம்பவே முடியவில்லை. ரொம்பவும் நன்றி ஆனந்தன்.''

''நன்றியெல்லாம் இருக்கட்டும். உன் அத்தை எப்படி... உடன் சம்மதித்து விட்டார்களா?''

மைதிலி மாமா செய்த உதவியை ஒன்றுவிடாமல் சொன்னாள்.

மைதிலி அந்த பிரம்மாண்டமான அலுவலகக் கட்ட டத்தை பிரமிப்பு நீங்காமல் பார்த்தாள்.

மேனேஜர் ரூமின் பளபளப்பான கதவைத் தட்டி அனுமதி பெற்று மைதிலி திறந்தாள். ஜில்லென ஏஸியின் குளிர் தாக்கியது.



அதைவிட கண்களை அந்த அதிர்ச்சி தாக்கியது.

மேனேஜர் சீட்டில் கம்பீரமாய் கால் மடித்து உட்கார்ந் திருந்தான் ஆனந்தன்.

## 4

மைதிலிக்கு ஒரே ஆச்சரியம். நம்பவே முடிய வில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடி பார்த்தாள். மேனேஜர் ஸீட்டில் ஆனந்தன். அதே பக்கத்து வீட்டு ஆனந்தன். அவள் மனங்கவர்ந்த ஆனந்தன்!

ஆனந்தன் குறும்புப் புன்னகையுடன் எழுந்து அவள் பக்கத்தில் வந்தான். ''ஆனந்தன் நீங்கள்.. நீங்கள்தான் மேனேஜரா?'' மைதிலி திக்கித் திணறி கேட்டாள்.

ஆனந்தன் சிரித்தான்.

''நம்ப முடியவில்லையா? நான்தான் மேனேஜர். இந்த ஸ்ரீராம் எக்ஸ்போர்ட்ஸில் ஐந்து வருடமாய் நான் வேலை பார்க்கிறேன்.''

''நான் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உங் களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை ஆனந்தன்...''

''எப்படியோ மைதிலி, உன்னை அந்த நரகத்திலிருந்து மீட்க முடியாமல் போய்விடுமோ என்றுதான் ரொம்பவும் பயந்தேன். நல்லவேளை என் அலுவலகத்தில் ஒரு வேலை காலியாக இருந்தது. பாஸிடம் பேசி சம்மதமும்

பெற்று விட்டேன்...'' என்றவன் சட்டென ஞாபகம் வந்தவனாய் அந்த அலுவலகத்தின் மற்ற ஊழியர்களை எல்லாம் அழைத்து மைதிலிக்கு அறிமுகப்படுத்தினான்.

மைதிலி அந்த நொடியிலிருந்து வேலை பார்க்கவும் ஆரம்பித்து விட்டாள்.

அன்று மாலை வேலை முடிந்து மைதிலி கிளம்பும் போது ஆனந்தன் ஆவலாய் அவளைப் பார்க்க வந்து விட்டான்.

இருவரும் பஸ் ஸ்டாப்பைத் தாண்டி நடந்து கொண்டிருந்தார்கள்.

மைதிலி திடுக்கிட்டவளாய், ''ஆனந்தன், பஸ் ஸ்டாப் அங்கு இருக்கிறது...'' என்றாள்.

''இருக்கட்டுமே...''

''இருக்கட்டுமா?''

''மைதிலி இங்கு பக்கத்தில் ஒரு பூங்கா இருக்கிறது. அங்கு சென்று கொஞ்ச நேரம் பேசிவிட்டுச் செல்வோம்...''

மைதிலி ஒரு நிமிடம் யோசித்தாள்.

''என்ன மைதிலி?''

''நேரம் ஆயிற்று. அத்தை தேடுவார்கள்...''

''ஆமாம். பொல்லாத அத்தை. அந்த அரக்கி உன்னை மாவாட்ட, பாத்திரம் கழுவ... என ஒவ்வொன்றுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்...'' ஆனந்தன் பற்களைக் கடித்துக் கோபம் கொண்டதை மைதிலி வெகுவாய் ரசித்தாள்.

பார்க் சென்றதும் மைதிலி கேட்டாள்.



''ஆனந்தன் உங்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது?''

''பின் வராதா?''

''அதான் ஏன்?''

''நான் உன்னை நேசிக்கிறேன் மைதிலி...''

''என்னது?''

''ஏய், சும்மா நடிக்காதே. உன் மனது எனக்குத் தெரியும்...'' என்றபடி அவளை இறுகக் கட்டி அணைத்தான் ஆனந்தன்.

மூச்சு முட்டாத குறையாய் நெருக்கினான். மைதிலி ஒன்றும் தடுக்கவில்லை. அவளுக்கும் அந்தச் சுகம் தேவையாயிருந்தது.

இருவரும் கொஞ்ச நேரம் மெய்மறந்து கட்டிப்பிடித்தபடி இருந்தார்கள். மைதிலிதான் உணர்வு வந்தவளாய் வாட்ச்சைப் பார்த்துப் பதறினாள்.

''ஆனந்தன் மணி ஆகிவிட்டது.''

ஆனந்தன் மெல்ல அவளை விடுவித்தான்.

''மைதிலி நீ இனி உன் அத்தைக்குப் பயப்படத் தேவையில்லை...''என்றான்.

''பயப்படத் தேவையில்லையா?''

''ஆமாம். நீதான் சொந்தக் காலில் நிற்க ஆரம்பித்து விட்டாய். சுயமாய் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டாயே!''

''புரியவில்லை ஆனந்தன்...''

''புரியும்படியே சொல்கிறேன். கம்பெனியில் மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் உனக்கு. இனி நீ பணத்திற்கோ

உன் தேவைகளுக்கோ யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தில்லை...''

''ஆனந்தன், என்ன சொல்கிறீர்கள்?''

''நிஜத்தைத்தான் சொல்கிறேன். நான் உனக்கு ஒரு திட்டம் கூட வைத்திருக்கிறேன்...''

''திட்டமா?''

''ஆமாம். உன் அத்தை உனக்குப் பூட்டி வைத்திருக் கும் அடிமை விலங்கை உடைக்கும் திட்டம்.''

''எப்படி ஆனந்தன்?''

''இனி உன் அத்தை வீட்டில் தங்கியிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அங்கிருந்து நீ வெளியேறிவிட வேண்டும்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம்... வெளியேற்றி.. உன்னை ஒரு லேடீஸ் ஹாஸ்டலில் தங்க வைக்கப் போகிறேன்.''

''லேடீஸ் ஹாஸ்டலா?''

''ஆமாம் மைதிலி. உன் அத்தையின் தொல்லையி லிருந்து தப்பிக்க அதுதான் வழி...''

''இதெல்லாம் நடக்கக் கூடியதா ஆனந்தன்?''

''ஏன் நடக்காது? நான் இருக்கிறேன் மைதிலி. மகளிர் விடுதியும் கொஞ்ச நாள்தான். என் தங்கைக்குத் திரு மணம் நடந்து முடிந்ததும் நம் திருமணம்தான்.''



# 5

மைதிலி ஒருவாறு ஆனந்தனிடம் விடைபெற்று வீடு வந்து சேர்ந்தாள். வீட்டில் அவள் வருகைக்காகத் தயாராய்க் காத்திருந்தாள் அன்னபூரணி.

''ஏண்டி இவ்வளவு லேட்டு?'' என்றாள் அன்னபூரணி, மைதிலி நுழைந்ததும் முதல் கேள்வியாய். மைதிலிக்குத் தெரியும் தயாராய் பதிலையும் யோசித்து வைத்திருந்தாள்.

''பஸ் கிடைக்கல. அதான் லேட்டாயிட்டுது!''

''சரி.. சரி.. மசமசன்னு நிக்காம போய் வேலையைக் கவனி... அரிசி களையணும்.. பாத்திரம் கழுவணும்... கிரைண்டர் போடணும்... ம்ம்... கடகடன்னு வேலையைப் பாரு.''

அன்னபூரணி அடிக்காத குறையாய் மைதிலியை வேலை செய்ய விரட்டினாள். மைதிலியும் அலுவலகக் களைப்பைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது வேலை களைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

சதாசிவம் மாமாதான் அன்னபூரணி பார்க்காத வண் ணம் கிணற்றடியில் பாத்திரங்களைக் கழுவிக் கொண் டிருந்த அவளைத் தேடி வந்தார்.

''மைதிலி...''

''வேலை எப்படி, பிடிச்சிருக்கா?''

''பிடிச்சிருக்கு.''

''ஒண்ணும் பிரச்சனை இல்லையே?''

''இல்ல...''

''மேனேஜர் எப்படி, நல்லவர்தானே?''

''ஐயோ, உங்களுக்கு விஷயம் தெரியாதா?''

''என்ன மைதிலி?''

''நான் வேலை பார்க்கிற எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு மேனேஜர் யாரு தெரியுமா?''

''யாரு?''

''நம்ம ஆனந்தன்தான். அவர்தான் அந்த கம்பெனியின் மேனேஜர்! ஆனந்தன் தன் கம்பெனியிலதான் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார். எனக்கு சர்ப்ப ரைஸா இருக்கட்டும்ன்னுதான் யாருகிட்டயும் அவர் சொல்லல...''

''நல்லது. ஆனால் இதை உன் அத்தைகிட்ட சொல் லாதே.''

''மறைச்சிரவா?''

''ஆமா மைதிலி. என் பொண்டாட்டிய பத்தி எனக்குத் தெரியாதா? அவளுக்கு உடம்பு பூரா விஷம்தான். நல்ல நினைப்பே கிடையாது. விஷயம் தெரிஞ்சா ஏதாவது கெடுதல் பண்ணத்தான் நினைப்பா...''

சதாசிவம் சொல்லி முடித்தார். மைதிலி தலையாட் டியபடி கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் பேச்சு முடியும் தருவாயில் தற்செயலாய் அங்கு வந்து விட்டாள் அன்னபூரணி. வந்தவள் இருவரும் மெதுவாகப் பேசுவதைப் பார்த்து காதைத் தீட்டினாள். ஒட்டு கேட்ட அவள் காதுகளில் அரைகுறையாய் சில வார்த்தைகள் விழவும் செய்தது.



# 6

அன்று இரவு முழுவதும் அதற்காகத் தூங்காமல் யோசித்தாள் அன்னபூரணி. அவள் மனதில் டக்கென அந்த மைதிலி வேலை விஷயம்தான் விசித்திரமாய்த் தோன்றியது.

அதெப்படி மைதிலிக்கு திடுதிப்பென்று வேலை கிடைக்க முடியும்? இந்தக் கலியுகத்தில் வேலை கிடைப்பது எவ்வளவு குதிரைக் கொம்பான விஷயம்? மைதிலிக்கு உடனடியாக வேலை கிடைக்கிறது. அதுவும் மூவாயிரம் ரூபாய் சம்பளத்தில்... என்றால் இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது.

மறுநாள் வழக்கம்போல் மைதிலி காலைச் சமையலை, வீட்டு வேலைகளை வியர்க்க விறுவிறுக்க முடித்து விட்டு அலுவலகத்திற்குக் கிளம்பினாள். அன்னபூரணி அவளது செய்கையையே கவனித்துக் கொண்டிருந்தவள், மைதிலி கிளம்பியதும் சட்டென அவளும் கிளம்பினாள்.

மைதிலி அறியா வண்ணம் தனது பெரிய கண்களை உருட்டியவாறு விஷமமாய் பின்தொடர்ந்தாள். மைதிலி பஸ் ஸ்டாப்பை அடைந்து பஸ்ஸில் ஏறி அலுவலக ஸ்டாப்பில் இறங்கினாள். அன்னபூரணியும் அப்படியே செய்தாள்.

மைதிலி அலுவலகத்தை நோக்கி நடந்தாள். நெருங் கும் போதுதான் அலுவலக வாசலில் ஆனந்தன் நின்று கொண்டு யாருக்கோ காத்திருப்பது போல் தெரிந்தது.

ஆனந்தனைக் கண்டதும் மைதிலியின் முகம் சந்தோஷத்தில் சென்னைவாசிகள் மழையைக் கண்டது போல் மலர்ந்தது.

மைதிலி ஆவலாய் அவனை நெருங்கினாள். தற்செயலாய் திரும்பிய ஆனந்தனும் அவளைப் பார்த்துவிட்டான். அவன் முகத்திலும் குப்பென அந்த சந்தோஷ மலர்ச்சி!

''ஐயோ, யாரும் பார்த்துவிடப் போகிறார்கள். முதலில் உள்ளே வாருங்கள்!'' என்றபடி மைதிலி அலுவலகத்தினுள் விறுவிறுவென நுழைந்தாள்.

''யார் பார்த்தால் என்ன மைதிலி? நாம் தான் விரைவில் கணவன் மனைவி ஆகப்போகிறோம். பின் யாருக்குப் பயப்பட வேண்டும்?'' எனச் செல்லமாய் முணுமுணுத்தபடி ஆனந்தன் பின்தொடர்ந்தான்.

நடக்கும் காட்சிகளை, சற்றுத் தள்ளி மறைவிலிருந்த அன்னபூரணி ஆங்காரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

## 7

ஆனந்தன் அவள் கண்ணுக்குத் தெரிந்ததும் அவளால் நம்பவே முடியவில்லை.

அட.. இதெல்லாம் இவன் வேலைதானா? அவளது சிறுமூளைக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் விஷயங்கள் புரிய ஆரம்பித்தது.

நினைத்துப் பார்த்த அன்னபூரணிக்கு அந்த விஷயத்தை கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை. ஆங்காரமாய் யோசித்தாள், மைதிலி மட்டும் ஆனந்தனோடு சேர்ந்து இருவருக்கும் கல்யாணம் நடந்துவிட்டால்.. அவ்வளவுதான்!



அதே துடிப்புடன் விறுவிறுவென வீடு நோக்கி நடந்தாள். வீட்டை நெருங்க நெருங்க.. அவளுள் அந்த யோசனை. அவளுக்கு ஆனந்தனின் தாய் சரோஜா ஞாபகம் வந்தது.

அன்னபூரணி தனது நினைப்பை செயலாக்க.. வீட்டிற்குச் செல்லாமல் நேராய் சரோஜாவின் வீடு நோக்கிச் சென்றாள்.

அவள் சென்ற நேரம் அதற்கு வாகாகவும் இருந்தது. ஆனந்தனின் தங்கை லதா டைப்பிங் கிளாஸுக்கு சென்றிருக்க. தாய் சரோஜா மட்டும் தனியே யாரிடம் வம்பளக்கலாம் என்பது போல் காத்துக் கொண்டிருந்தாள். அன்னபூரணியைப் பார்த்ததும் அத்தனைப் பற்களையும் காட்டிச் சிரித்தாள்.

''வா.. அன்னபூரணி என்ன விஷயம்?'' என்றாள் ஆவலாய்.

''உன் புள்ளையாண்டன் ஆனந்தன் என்ன காரியம் பண்ணியிருக்கான் தெரியுமா?''

சரோஜா புருவம் சுருக்கி புரியாதவளாய் அன்னபூரணியைப் பார்த்தாள்.

''அப்படி என்ன பண்ணிட்டான்?''

பதறியவளை சாந்தப்படுத்தி, ''இரு சொல்றேன்...'' என்றபடி ஆனந்தன்-மைதிலி வேலை விஷயத்தை, காதல் விஷயத்தை, கல்யாணம் வரை போய் விட்டதாக...

அத்தனையையும் ஒன்று விடாமல் சொல்ல ஆரம்பித்தாள் அன்னபூரணி.

# 8

சரோஜா அதிர்ந்துதான் போனாள்.

''அன்னபூரணி, என்னென்னமோ சொல்ற, எனக்கு ஒண்ணும் ஓடமாட்டேங்குது. எனக்கு வர்ற மருமக பெரிய பணக்காரியா உசந்த இடத்திலிருந்து நிறைய நகை, சீர் செனத்தியோடு வருவான்னு நான் கனவு கண்டுக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா பெரிய குண்டத் தூக்கி போடுற!''

பதறியவளை அன்னபூரணி மீண்டும் சாந்தப்படுத்தினாள். ''பயப்படாதே. எதுவும் நம்ம கையை மீறிப் போகல. ஆரம்பத்திலேயே கண்டுபிடிச்சிட்டேன். நாம நினைச்சா சரிப்படுத்திரலாம்!'' என்று ஆறுதல் படுத்தினாள்.

இருவரும் யோசித்தார்கள்.

''நம்ம ரெண்டு பேரும் அக்கா-தங்கச்சி மாதிரி எவ்வளவு வருஷமா பழகிட்டு வர்றோம். அதனாலதான் சொல்றேன். உன் பையனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும். அதனால...''

''அதனால?''

''உடனே எதாவது செஞ்சாகணும். எப்படியாவது ஆனந்தனையும் மைதிலியையும் பிரிச்சாகணும்.''



''அதுக்கு என்ன செய்ய?''

''நீ கவலைப்படாத சரோஜா. இன்னும் ஒரே வாரத்தில அவங்க காதலை உடைச்சு, ரெண்டு பேரையும் நான் பிரிச்சுக்காட்டுறேன். ஆனந்தன் மைதிலியை வெறுக்கும் படியா செய்யறேன்!''

அகங்காரம் பொங்க பேசினாள் அன்னபூரணி.

மைதிலிக்கு அன்று இரவு தூக்கம் வரவே இல்லை. இனம் புரியா உணர்வு தாக்கிற்று. புரண்டு புரண்டு படுத்தாள். மனம் முழுவதும் சந்தோஷ அலை. கண்களை இறுக மூடிக் கொண்டாள். மூடிய இமைகளுக்குள்ளும் ஆனந்தன்தான் தெரிந்தான். ஆனந்தன் அவளைப் பார்த்து ஓடி வந்தான்.

மைதிலி சிரிக்க, ஆனந்தன் இதுதான் சமயமென மெல்ல அவள் கன்னத்தில் முத்தமிட்டான். வெட்கம் பொங்க கண்களை மூடிக் கொண்டாள் மைதிலி.

கண்களை மூடிய மைதிலி திறந்து பார்த்தாள்.

நடந்ததை நினைத்துப் பார்த்த நிஜம் உரைத்தது.

உணர்வுக்கு வந்தவளாய் நிமிர்ந்து பார்த்தபோது எதிரில் மாமா சதாசிவம் அவளைப் பார்த்துச் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார்.

''என்னம்மா யோசனை?''

''ஒண்ணுமில்ல மாமா...''

மைதிலி நெளிந்தபடி சிரித்தாள். சதாசிவம் புரிந்தவராய் தலையசைத்தார்.

''எனக்குத் தெரியும் எல்லாம் அந்த ஆனந்தன் பண்ற வேலை!'' என்றபடி சிரித்தார்.

மைதிலியும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தாள்.

மறுகணமே ஆனந்தன் சொன்ன விஷயங்கள் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. சீரியஸானவளாய் சதாசிவத்தைப் பார்த்தாள்.

''மாமா...''

''சொல்லு மைதிலி...''

''ஆனந்தன் என்கிட்ட சில விஷயங்கள் சொன்னார். அதை நினைச்சா ஒரே குழப்பமா இருக்கு...''

''குழப்பமா இருக்கா.. அப்படி என்னம்மா விஷயம்?''

''அதாவது.. மாமா.. வந்து...''

''சும்மா தயங்காமச் சொல்லு மைதிலி...''

''நான் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டல்ல, தங்கிக்கணுமாம். அதான் எனக்கு நல்லதாம். அப்படிச் சொல்றார் அவர்...''

மைதிலி சொன்னதும் சதாசிவத்தின் முகம் அதிர்வுடன் மாறத்தான் செய்தது.

''என்ன மாமா யோசிக்கறீங்க?''

''அதுவும் சரிதான். ஆனந்தன் சொல்றதும் சரியான வழிதான்! ஆனந்தன் சொல்ற மாதிரி நீ ஏதாவது ஒரு லேடீஸ் ஹாஸ்டல்ல தங்குறது நல்லதுதான்.''

''என்ன மாமா, நீங்களும் இப்படிச் சொல்றீங்க?'' மைதிலி கேட்க, சதாசிவம் வெறுமையுடன் அவளைப் பார்த்து தலையாட்டினார்.

''வேற வழியில்லை மைதிலி. உனக்குத் தெரியாதா... இந்த வீட்டில் நான் ஒரு செல்லாக் காசுதான். அன்னபூரணியை எதிர்க்கிற துணிச்சல் எனக்குக் கிடையாது. என்னால முடியவும் முடியாது. உனக்கு எதிரா அன்னபூரணி எது செய்தாலும் என்னால தடுக்க முடியாது. அதனாலதான் சொல்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது யாரையும் எதிர்பார்க்காம நீயே ஒரு வாழ்க்கையை அமைச்சுக்கணும் மைதிலி...''

சதாசிவம் தெளிவாய் தீர்மானத்துடன் பேசுவது போல் பேசினார். மைதிலி ஒரு முடிவுக்கு வர முடியாதவளாய் திகைப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



## 9

மைதிலி அன்றும் வழக்கம்போல் உற்சாகமாய் வேலைக்குக் கிளம்பினாள். சாமியை வணங்கி பூஜைகளை முடித்துவிட்டு வெளியே வந்தாள். அப்பாவின் ஞாபகம் திடுமென அவளைத் தாக்கிற்று.

எவ்வளவு நாள் ஆயிற்று? இந்த அப்பா என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்? ஒரு லெட்டர் கூட போடாமல் அப்படி என்னதான் வேலை அவருக்கு?

சிந்தித்தபடி அப்பாவின் நினைவுகள் தாக்க.. ஹேண்ட் பேக்குடன் ஆபீசுக்குக் கிளம்பினாள். அன்னபூரணி அவள் போவதையே எரித்துவிடுவது போல் கதவு மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். 'இருடி! இன்றுதான் நீ வேலைக்குப் போகும் கடைசி நாள். இன்றோடு உன் வேலைக்கு வேட்டு வைக்கிறேன் பார்!'

அன்னபூரணி மனதில் கறுவியதோடு நிற்கவில்லை. உடனே செயலிலும் இறங்கினாள். நேராக எஸ்.டி.டி. பூத் ஒன்றை நோக்கி நடந்தாள்.

''ஹைதராபாத்திற்கு ஒரு எஸ்.டி.டி. கால் போடுப்பா'' என்றபடி சேலை முனையில் இடுக்கி வைத்திருந்த துண்டுச் சீட்டை - போன் நம்பரை பூத் பையனிடம் நீட்டினாள்.

அன்னபூரணியின் அக்காள் சொர்ணராணி அவள் கணவருடன் ஹைதராபாத்தில் வசித்து வருகிறாள். மைதிலிக்கு அன்னபூரணியைப் போலவே அவளும் அத்தை முறைதான். சொர்ணராணியும் அன்னபூரணியை உரித்து வைத்தாற்போல்தான் குணத்தில் இருப்பாள். சரியான கருமி. ஐந்து பைசாவைக் கூட விட மாட்டாள். பணம் என்றால் ஆலாய்ப் பறப்பாள். பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள்.

அன்னபூரணி, சொர்ணராணிதான் சரியான ஆள், தன் திட்டத்தை அவள் மூலமாகத்தான் செயல்படுத்த முடியும் எனத் தீர்மானித்திருந்தாள். அதனால் அவளுக்கு போன் போட்டு பேசினாள். தனது திட்டம் முழுவதையும் சொர்ண ராணியிடம் விவரித்தாள். தான் சொன்னபடி நடந்து கொண்டால் ஐந்தாயிரம் ரூபாய் பணமும் தருவதாக ஆசை காட்டினாள்.

பணம் என்றதும் சொர்ணராணி ஆவலாய் தலையாட்டி. ஒப்புக் கொண்டாள். அவளிடம் அன்னபூரணி தன் திட்டமான மைதிலி வேலைக்குப் போவதைத் தடுக்கும் திட்டத்தை நன்கு விளக்கினாள். அவளை சம்மதிக்க வைத்த திருப்தியுடன் டெலிபோன் பூத்தை விட்டு வெளியே வந்தாள்.

அன்று மாலை மைதிலி வழக்கம் போல் ஆனந்தனிடம் பேசிவிட்டு மனபாரம் நீங்கியவளாய் வீட்டிற்குள் நுழைந் தாள். அவள் வீட்டிற்குள் நுழைந்ததும்தான் தாமதம்.



அவள் முன் பதறியடித்துக் கொண்டு தோன்றினாள் அன்னபூரணி.

''மைதிலி உன்னை எங்கே எல்லாம் தேடுறது? எவ்வளவு நேரம் ஆச்சு?''

அன்னபூரணியின் பதற்றத்தைக் கண்டு மைதிலியே ஒரு கணம் ஆடித்தான் போய்விட்டாள்.

''என்ன அத்த.. என்ன ஆச்சு?''

''மொதல்ல இந்த தந்தியைப் பாரு...''

''தந்தியா?''

''ஆமா.. இதைப்படி உன்னோட அப்பா அடிச்சிருக் காரு...''

''அப்பாவா?'' என்றபடி மைதிலி ஆவல் பொங்க தந்தியை வாங்கிப் பிரித்து படித்தாள்.

''அத்தை வீட்டில் இருக்கிறேன். உடனே ஹைதராபாத் வரவும்'' என்று தந்தியில் ஆங்கிலத்தில் எழுதப்பட் டிருந்தது.

மைதிலி புரியாமல் விழித்தாள்.

''உன் அப்பா ராமனாதன்தான் உனக்கு தந்தி கொடுத் திருக்கான்...'' அன்னபூரணி கவனமாய் எடுத்துக் கொடுத் தாள்.

''அதான்.. திடீர்னு.. அங்க.. எப்படி...? ஒண்ணும் புரியலையே அத்தே..! அப்பா எப்படி ஹைதராபாத் போனார்? ஒரே குழப்பமாக இருக்கே!''

''அதில் என்னம்மா குழப்பம்? உங்கப்பா பணம் சம்பாதிக்கப் போனான். அப்படியே அங்க ஹைதராபாத்

வந்திருக்கான். உன்னோடசொர்ணராணி அத்தை வீட்ல தங்கியிருக்கான். உன்னை உடனே பார்க்கணும்னு வேற தந்தி அடிச்சிருக்கான். இப்போ என்ன செய்யப் போற நீ?''

''என்ன செய்யறதுன்னு தெரியல அத்த. அப்பா இப்படி மொட்டையா தந்தி கொடுத்திருக்கார்.''

''அவனுக்கு என்ன அவசரமோ.. நீ உடனே கிளம்பு.''

''கிளம்பவா?''

''ஆமா ஹைதராபாத்துக்கு உடனே கிளம்பு. ரயில் டிக்கெட் கூட உனக்காக எடுத்துட்டேன்...''

''டிக்கெட் எடுத்துட்டீங்களா?''

''ஆமா. இரவு பத்து மணிக்கு ட்ரெயின். நீ உடனே துணிகளை பெட்டியில எடுத்து வை.''

''அத்தை.. உடனே திடீர்னு ஹைதராபாத்துக்கு எப்படி நான்...'' - மைதிலி தயக்கமாய் இருக்க.. அன்னபூரணி மேலும் பயங்காட்டினாள். ''என்ன நீ.. உன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லையோ என்னவோ? அதனால நீ கொஞ்சமும் தாமதிக்காதே. உடனே கிளம்பு!''

மைதிலியும் உள்ளூர அப்பாவின் உடல்நிலை நினைத்து பயந்தாள். உடனே ஹைதராபாத் கிளம்ப முடிவெடுத் தாள்.

## 10

காலை பத்து மணி. ரெயில் ஹைதராபாத் ஸ்டேஷ னுக்குள் நுழைந்ததும் தான் மைதிலிக்கு உயிரே வந்தது.



அவசர அவசரமாய் தனது உடைமைகளைத் தூக்கிக் கொண்டு ட்ரெய்னை விட்டு இறங்கினாள்.

ஹைதராபாத் நகரின் புறப்பகுதியான லயன்ஸ் காலனியில்தான் சொர்ணராணி குடியிருந்தாள். மைதிலி அதை தேடிக் கண்டுபிடித்து அவள் வீட்டை அடைய ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

ஒருவழியாய் அவசர அவசரமாய் ஆட்டோவில் இருந்து இறங்கிய மைதிலி பரபரப்புடன் அத்தையின் வீட்டுக்குள் நுழைந்தாள்.

உள்ளிருந்து சாவகாசமாய் வெளிவந்தாள் அத்தை சொர்ணராணி. மைதிலியைப் பார்த்ததும் முகத்தில் திகைப்பு காட்டி வரவேற்றாள்.

''வந்துட்டியா? உன்னைத்தான் எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்!'' என்றாள்.

''ஆமா, எதுல வந்த? ட்ரெய்னா? பயணம் எப்படி இருந்துச்சு?''

''அது இருக்கட்டும். அப்பா எங்க, எப்படி இருக்கார் அத்தை?''

மைதிலி பரபரத்தாள்.

சொர்ணராணி சமாளித்தாள்.

''உங்க அப்பாதானே இதோ வந்துடுவான்...''

''வந்துடுவாரா?''

''ஆமா. எங்கோ காலையிலே வெளியே கிளம்பிப் போயிட்டான்.''

''வெளியே போனாரா?''

''ஆமா...''

''அத்த, தந்தி கொடுத்தது அப்பாதானே? அவருக்கு நான் இங்க வர்றது தெரியும்தானே?''

''அட... எல்லாம் அவன்தானம்மா செஞ்சான். அவசர அவசரமா ரெண்டு நாளைக்கு முன்னால திடுதிப்புன்னு வந்தான். என்னடா ஆச்சு? எங்க போனேன்னு கேட்டேன். ஒரு விவரமும் சொல்ல மறுத்துட்டான். உடனே மைதிலியைப் பார்க்கணும். அவளை தந்தி கொடுத்து வரவழைக்கப் போறேன்னான். உன் இஷ்டம் போல செய்யின்னுட்டேன். அதான் தந்தி கொடுத்தான். நீயும் வந்துட்ட. மற்றபடி எங்க போறான், வர்றான்னு எனக்குத் தெரியாது. அதையெல்லாம் நினைச்சா ஒரே மர்மமாத் தான் இருக்கு...''

''மர்மமா இருக்கா?''

''ஆமா.. அவனைத் தேடி யார் யாரெல்லாமோ பார்க்க வந்தாங்க. அவனும் நேரங்கெட்ட நேரத்தில எந்திரிச்சு வெளியே போயிர்றான். அதான் என்ன பண்றான்னு.. என்ன நடக்குதுன்னு ஒண்ணுமே புரியல.. போ!''

சொர்ணராணி சொல்லச் சொல்ல, மைதிலியால் நம்பவே முடியவில்லை!

மைதிலி தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

மணி ஒன்று, இரண்டு என கடந்து.. இரவும் வந்து விட்டது. கடைசிவரை அப்பா ராமனாதன் வரவேயில்லை.

மணி இரவு பத்து.

இன்னும் அப்பா வரவில்லை!



அன்று இரவு முழுக்க... தெருவோரம் சிறுசலனம் கேட்டாலும் எழுந்து ஓடிப் பார்த்தாள். ம்ஹூம்! ஏமாற்றம் தான் மிஞ்சியது. அப்பா வரவே இல்லை.

மறுநாள் சிவந்த கண்களுடன் மைதிலி அத்தையைத் தேடிப் போனாள். அத்தை சொர்ணராணி அந்த வயதிலும் மூக்குக் கண்ணாடியை இடுக்கிக் கொண்டு டி.வி. பார்ப்பதில் மும்முரமாயிருந்தாள்.

''அத்தே...'' என்றபடி மைதிலி இழுத்தாள்.

''என்னம்மா சொல்லு?'' தலையைத் திருப்பாமலே சொர்ணராணி கேட்டாள்.

''அப்பா இன்னும் வரலை. எனக்கு பயமா இருக்கு.''

''எனக்கும்தான் பயமா இருக்கு! என்ன செய்ய?''

கொஞ்சமும் டி.வி. நிகழ்ச்சியில் இருந்து தலையைத் திருப்பாமல் பேசிய சொர்ணராணியைக் கண்டு மைதிலிக்கு எரிச்சலாக இருந்தது.

ஒன்றும் தோன்றாதவளாய் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்படி மைதிலி தன்னையே பார்த்தது உறுத்தியதோ என்னவோ, சொர்ணராணி டக்கென டி.வி.யை அணைத்து விட்டு அவள் பக்கம் திரும்பினாள்.

''என்னம்மா யோசிக்கிற?''

மைதிலி திகைப்பு நீங்காமல் பார்த்தாள்.

''என்ன செய்யறதுன்னே தெரியல! ஊர்ல இருந்து அடிச்சுப் புரண்டு வந்துட்டேன். இங்க அப்பாவையும் பார்க்க முடியல. ஊருக்கும் போக முடியல. ஒரே குழப்பமா இருக்கு!''

''அட.. குழம்பாதம்மா.. அவனுக்கு என்ன சிக்கலோ பிரச்சனையோ? ஆனாலும் உன்னைப் பார்க்க வராம இருக்க மாட்டான். கொஞ்சம் பொறு!''

சொர்ணராணி சமாதானப்படுத்தினாள். கூடவே மைதிலியின் எண்ணத்தைப் படிக்கவும் முயன்றாள்.

அவளுக்கு ஏதோ ஒன்று தோன்றவும் செய்தது.

''மைதிலி எனக்கொரு யோசனை தோணுது.''

மைதிலி நிமிர்ந்தாள்.

''பேசாம எதுக்கும் போலீஸ் ஸ்டேஷன்ல உன் அப்பாவைப் பத்தி காணலைன்னு கம்ப்ளையிண்ட் கொடுத்திருவோமா? எனக்கு அதான் சரியாப்படுது!''

மைதிலிக்கு வேறு வழி தெரியவில்லை. சொர்ணராணி சொன்னதற்கெல்லாம் தலையாட்டினாள். இருவரும் அன்றே அவர்களது காலனி போலீஸ் நிலையம் சென்று புகார் மனு எழுதிக் கொடுத்துவிட்டு வந்தனர்.

அன்று இரவு எல்லாம் முடிந்து எட்டு மணி இருக்கும். மைதிலியிடம் ஏதோ சாக்கு சொல்லிவிட்டு சொர்ணராணி பூனையாய் கிளம்பினாள். விறுவிறுவென டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தாள்.

யாரும் தன்னைப் பார்க்கவில்லை. கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்துவிட்டு பூத் பையனிடம் சென்னையிலுள்ள அன்னபூரணி போன் நம்பரை டயல் செய்யச் சொன்னாள்.

மறுநிமிடம் அன்னபூரணி லைன் கிடைத்தது.

சொர்ணராணி ஆவலாய் ரிசீவரை வாங்கினாள்.



''அன்னபூரணி, நீ சொன்னபடியே எல்லாம் செஞ்சிட்டேன். நல்லா நாடகம் நடத்திட்டேன். மைதிலி எல்லாத்தையும் நம்பிட்டா. அவள் அப்பா வருவாருன்னு எதிர் பார்த்து தினம் தினம் காத்துக்கிட்டு இருக்கா. எப்படியும் நம்ம திட்டம் வெற்றியாயிரும்!''

சொர்ணராணி சொல்லச் சொல்ல, குஷி தாங்காதவளாய் கேட்டுக் கொண்டிருந்தாள் அன்னபூரணி.

## 11

சொர்ணராணி சொன்னவைகளைக் கேட்டதும் அன்னபூரணிக்கு சந்தோஷம் பொங்கிற்று.

கடைசியில் சொர்ணராணியிடம், ''இதோ பார் சொர்ணராணி, நீ எப்படியாவது ஏதாவது சாக்கு போக்கு சொல்லி மைதிலியை நம்ப வைத்து அவளை ஹைதராபாத்திலேயே தங்கவை. எக்காரணம் கொண்டும் அவளை இங்கு அனுப்பிவிடாதே. பின் நம் திட்டமெல்லாம் வீணாகப் போய்விடும். புரிகிறதா?'' என்று உரக்க சொல்லவும் செய்தாள்.

அன்னபூரணி தன் திட்டப்படி எல்லாம் நடக்க ஆரம்பித்தது குறித்து மகிழ்ச்சியடைய ஆரம்பித்தாள்.

அன்னபூரணியின் நினைப்பின் படியே முதலில் மைதிலியின் வேலைக்கு ஆபத்து வந்தது. ஆனந்தன் எவ்வளவோ கெஞ்சியும் அவனது உயர் அதிகாரி கேட்கவில்லை. மைதிலி இன்னும் வரவில்லை. அந்த

இடத்தில் வேறு ஒரு ஆளை வேலைக்கு நியமிக்கும்படி உத்தரவிட்டு விட்டார். ஆனந்தனும் அன்னபூரணியிடம் வந்து மைதிலியின் வேலை போய்விடும். உடனே ஹைதராபாத்திலிருந்து அவளை வரச்சொல்லுங்கள் எனச் சொல்லி பார்த்தான்.

அவனது பரபரப்பிற்கு அன்னபூரணியும் ''கொஞ்சம் பொறுத்துக் கொள். இந்த வாரம் வந்துவிடுவாள்'' எனக் கூறி சமாளிக்கவும் செய்தாள். கூடவே, மைதிலி வாரா வாரம் போட்ட லெட்டர்களை எல்லாம் ஆனந்தன் கைக்கு கிடைக்காமல் தபால்காரரை சரிக்கட்டி வாங்கினாள். சுக்கு நூறாய் கிழித்துப் போட்டாள்.

ஆனந்தன்தான் ரொம்பவும் தவித்துப் போனான். கஷ்டப்பட்டு மைதிலிக்கு வாங்கிக் கொடுத்த வேலை போன கவலை ஒரு புறம், மைதிலியைக்காணாத, பேச முடியாத கவலை மறுபுறமாய் ரொம்பவும் ஆடிப்போய் விட்டான்.

அன்று சமையல் வேலை முடிந்து பதினோரு மணி. அன்னபூரணி ஆவலாய் சரோஜாவைத் தேடிப் போனாள்.

''சரோஜா, பார்த்தாயா? எல்லாம் நம் திட்டப்படி நடக்க ஆரம்பித்து விட்டது...'' என்றாள்.

அன்னபூரணியின் உற்சாக குரலுக்கு சரோஜா சந்தோஷமாய் தலையாட்டினாள்.

கொஞ்ச நேரம் வாய்விட்டுச் சிரித்த சரோஜா சீரிய ஸானாள். ''ஆமாம் அன்னபூரணி உண்மையிலேயே மைதிலி அப்பா எங்குதான் இருக்கிறார் - ஏதாவது உனக்குத் தெரியுமா?'' என்றாள்.



அன்னபூரணி உதட்டைப் பிதுக்கினாள். ''அது யாருக்குத் தெரியும்? அவன் ஒரு ஓடுகாலி. எங்கோ எதற்கோ போய்விட்டான். அவன் எப்போது வருவான் என்பது அவனுக்குத்தான் வெளிச்சம்...!''

அன்னபூரணி சொல்லி முடிக்க, சரோஜாவின் முகம் மாறியது.

''அன்னபூரணி...''

''என்ன?''

''மைதிலியைப் பிரிந்தாலும் ஆனந்தன் அவள் நினைவாகவே அவளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக் கிறானே... அதற்கு என்ன செய்வது?''

சரோஜா கேட்டதும், அன்னபூரணியின் மூளை விஷம மாய் உயிர்பெற்று வேலை செய்து மறுகணமே பொறி தட்டியது போல் நிமிர்ந்தாள்.

''அதற்கும் ஒரு ஐடியா இருக்கிறது சரோஜா...''

''என்ன ஐடியா?''

''காதைக் கொடு சொல்கிறேன்...'' என்றபடி அன்ன பூரணி தனது ஐடியாவை ரகசியமாய் சரோஜாவின் காதில் கிசுகிசுத்தாள். கேட்ட சரோஜாவின் முகம் சந்தோஷத்தில் விரிந்தது.

## 12

மைதிலியும் சொர்ணராணியின் கபட நாடகத்தை அப்படியே நம்பிவிட்டாள். அது சொர்ணராணிக்கு

மேலும் குஷியைத் தந்தது. தினம் தினம் பேச்சு வாக்கில் எதையாவது சொல்ல ஆரம்பித்தாள். அன்றும் அப்படியே திட்டமிட்டாள்.

''மைதிலி இப்போது தான் ஞாபகம் வருகிறது...'' என்று பேச்சை ஆரம்பித்தாள். மைதிலி புரியாமல் அவளை விழித்துப் பார்த்தாள்.

''உன் அப்பா ஒன்று சொன்னான்...''

''அப்பாவா? என்ன சொன்னார்?''

மறுகணமே ஆவலாகி மைதிலி அவள் பக்கம் ஓடினாள்.

''மைதிலி வந்தால், இங்கு ஹைதராபாத்திலேயே இருக்கச் செய். எப்படியும் ஒரு மூன்று மாதத்தில் திரும்பி வந்துவிடுவேன்... என்று சொல்லியிருந்தார் மைதிலி.''

''அப்பா சொன்னார்களா? என்னிடம் இதுவரை நீங்கள் சொல்லவே இல்லையே?''

''அது.. மைதிலி.. பார்.. எனக்கு ஞாபக மறதி ஜாஸ்தி. வயசும் அதிகமாகி விட்டது. புத்தியில ஒண்ணும் சரியா நிக்க மாட்டேன்கிறது...'' சொல்லியபடி பெரிய கிழவி போல் தலையைப் பிடித்துக் கொண்டு சொர்ணராணி நடிப்பு நடித்தாள். மைதிலி அப்படியே நம்பினாள்.

உடனே தனது நிலையை விளக்கி ஆனந்தனுக்கு மளமளவென லெட்டர் எழுதினாள். கடிதம் அன்னபூரணி யின் கைகளுக்குச் சென்று கிழிபடப் போவதை உண ராமல் அன்றே லெட்டரை தபால் பெட்டியில் சேர்க்கவும் செய்தாள்.

ஆனந்தனின் நிலையும் அப்படித்தான் இருந்தது. முதலில், ''மைதிலி வந்து விடுவாள்.. சீக்கிரமே திரும்பி விடுவாள்''என்று நினைத்தவனின் நம்பிக்கை மெல்ல மெல்ல தகர்ந்தது.



மைதிலி பற்றி எவ்வித தகவலும் இல்லை. ஒரு லெட்டர் கூட வரவில்லை. ''சரி, நாமாவது லெட்டர் எழுது வோம்'' என அன்னபூரணியிடம் சென்று மைதிலியின் ஹைதராபாத் விலாசத்தைக் கேட்டான். மைதிலிக்கு லெட்டர் எழுதிப் போட இருப்பதாய் சொன்னான்.

அன்னபூரணி என்ன லேசுபட்டவளா? அவளுக்குத் தான் உடம்பு முழுவதும் விஷமாயிற்றே! உடனே அவள் சுதாரித்துவிட்டாள். வேண்டுமென்றே உண்மையான விலாசத்தைக் கொடுக்காமல் பொய்யான அட்ரஸைக் கொடுத்தாள். 'கடிதம் ஹைதராபாத்தில் யாருக்கோ, யார் கைகளுக்கோ போய் சேரப்போகிறது. கிழிபடப் போகிறது' என உள்ளுக்குள் கொக்கரித்தபடி நினைத்துக்கொண் டாள். ஆனந்தனும் பயபக்தியாய் ஒவ்வொரு வாரமும் லெட்டர் எழுதினான். ஆவலாய் காத்திருந்தான். மைதிலி யிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.

'அப்பா கிடைத்த சந்தோஷத்தில் மைதிலி தன்னை மறந்துவிட்டாளா...?' என்ற சந்தேகம் கூட அவனுள் தோன்றலாயிற்று.

அதே நேரம்... ஹைதராபாத்தில் மைதிலியும் தினம் தினம் ஆனந்தனுக்கு லெட்டர் எழுதினாள். போஸ்ட் செய்து ஆவலாய் காத்திருந்தாள். ம்ஹூம்! எவ்வித பதிலும் இல்லை!

அன்று வேலை முடிந்து திரும்பிய ஆனந்தனை பதறாத குறையாய் படபடவென அழைத்தாள் அன்ன பூரணி.

ஆனந்தனும் என்னவோ ஏதோ என்று ஓடி வந்தான்.

''ஆனந்தா! ஆனந்தா!'' மேலும் பதறினாள் அன்ன பூரணி.

''என்ன மாமி?''

''உனக்கு விஷயம் தெரியுமா?''

''என்ன விஷயம்?''

''நம்ம மைதிலியைப் பத்திதான்...''

''மைதிலியைப் பத்தியா?'' ஆனந்தன் உயிர் வந்தது போல் பிரகாசமாய் நிமிர்ந்தான். அவனது அந்த முகமலர்ச் சியைக் கூர்ந்து கவனித்த அன்னபூரணி முகத்தை மேலும் சோகமாக்கிக் கொண்டாள்.

''அதை ஏன் கேட்கிறாய்? பெரிய சோகம்!''

அன்னபூரணி ஏற்றி இறக்கிச் சொன்னாள். பெருமூச்சு விட்டாள். ஆனந்தனால் தாங்க முடியவில்லை. பதறியே போய்விட்டான்.

''சோகமா? என்ன, என்ன மாமி?''

''ஆனந்தா, மைதிலி இப்படிப் பண்ணிவிட்டாளே? மைதிலி கதை இப்படி ஆயிற்றே!''

''எப்படி ஆயிற்று?''

''சொல்கிறேன். அதாவது மைதிலி போய் அவள் அப்பாவைப் பார்த்தாள். பார்த்த மறுநாளே அவள் அப்பா அவளைக் கூட்டிக்கொண்டு போய் விட்டாராம்...''

''கூட்டிக் கொண்டு போய்விட்டாரா? என்ன சொல் கிறீர்கள்?''

''நிஜத்தைத்தான் சொல்கிறேன். எல்லாவற்றையும் என் அக்காள் சொர்ணராணி போனில் சொல்லிவிட்டாள்.



மைதிலியின் அப்பா வடநாட்டில் டெல்லி பக்கம் ஏதோ பிசினஸ் செய்கிறாராம். நிறைய சம்பாதிக்கிறாராம். அதனால் மைதிலியை தன் கூடவே வந்துவிடு என்று கூட்டிச் சென்று விட்டாராம். மைதிலியும் அப்பா பாசத் தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவர் பின்னா லேயே சென்று விட்டாளாம்...''

அன்னபூரணி சொல்லச் சொல்ல மயக்கம் வராத குறையாய் ஆனந்தன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''சரி, அப்பாவுடன் எங்கு சென்றாள்? எந்த ஊருக்கு?''

''அதான் தெரியவில்லை...''

''தெரியவில்லையா?''

''ஆமாம். டெல்லிப் பக்கம் ஏதோ கிராமம். போய் எல்லோருக்கும் லெட்டர் போடுகிறேன் என்று முகவரி கூட கொடுக்காமல் இருவரும் சென்று விட்டார்களாம். என்ன செய்ய?''

ஆனந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை சுற்று வதுபோல் இருந்தது. அன்னபூரணி சொன்னதை அப் படியே நம்பிவிட்டான். ''மைதிலி இப்படிச் செய்துவிட் டாளே?'' என்று தவித்தான்.

நாட்கள் ஓடியது. மைதிலியிடம் இருந்து எந்த லெட் டரும் இல்லை. தகவலும் இல்லை. மைதிலி, அப்பா கிடைத்த சந்தோஷத்தில் தன்னை ஒரேயடியாக மறந்து விட்டாள் என்ற முடிவிற்கு வந்துவிட்டான் ஆனந்தன். அந்த வெறுப்பான மனநிலையில் தாய் சரோஜா பார்த்து வைத்த பெரிய இடத்து சம்பந்தத்திற்கு பெண் பார்க்க சம்மதித்துவிட்டான்.

# 13

ஆனந்தனை ஒரு வழியாய் சம்மதிக்க வைத்தாயிற்று. ஆனந்தனும் சரியான முடிவுக்கு வராது நிலையில் தலையை ஆட்டிவிட்டான்.

சரோஜாவை விட அன்னபூரணிதான் தவிப்பாயிருந்தாள். ரொம்பவும் பரபரப்பு கொண்டிருந்தாள். ''ஆனந்தன் ஏதோ லேசாய் மனம் மாறியிருக்கிறான். இந்த மன நிலையிலேயே உடனே கல்யாணத்தை நடத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து...''என அவசரப் படுத்தினாள்.

சரோஜாவும் அன்னபூரணி இழுத்த இழுப்பிற்கெல்லாம் துணை போனாள். உடனே பெண் வீட்டுக்காரர்களைப் பார்த்து அவசரப்படுத்தினாள். சீக்கிரமே முகூர்த்த தேதி குறித்து கல்யாணத்தை நடத்திவிடும்படி விடாது நச்சரித்தாள்.

அன்னபூரணி அத்துடன் திருப்தியடையவில்லை. அன்று அவசர அவசரமாய் சரோஜாவைத் தேடிப் போனாள்.

''சரோஜா, ஒரு முக்கியமான விஷயம்...''

''முக்கியமான விஷயமா?''

''ஆமா. திடீர்ன்னு தோணிச்சு. அதான் பதறி ஓடி வந்துட்டேன்.''

சரோஜா நெற்றியைச் சுருக்கினாள்.



''அப்படி என்ன அன்னபூரணி?''

''நாம கல்யாண ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கோமே... இந்தச் சமயம் பார்த்து மைதிலி இங்க வந்துட்டா என்னாகும்? நம்ம திட்டம் பூரா பாழாயிருமே...?''

''அவள் எப்படி இங்க வருவா? அவளைத்தான் ஹைதராபாத்திலே ஒண்ணும் தெரியாதபடி மறைச்சி வைச்சிருக்கோமே...''

''இருந்தாலும் அந்த மைதிலியை நம்ப முடியாது. திடீர்ன்னு அவளுக்கு சந்தேகம் வந்திரும். கிளம்பி வந்தாலும் வந்திருவா...''

''என்ன அன்னபூரணி, திடீர்ன்னு இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுற?''

சரோஜா வியர்த்து விறுவிறுத்து விட்டாள்.

அன்னபூரணி சிரிக்க ஆரம்பித்தாள்.

''பயப்படாத.. அதுக்கும் ஒரு திட்டம் வைச்சிருக்கேன். அதைச் சொல்லத்தான் வந்தேன்...''

''திட்டமா?''

''ஆமா.. நீ ஒரு லெட்டர் மைதிலிக்கு எழுதணும். அதுவும் உடனடியா...''

''என்னது மைதிலிக்கு எழுதணுமா... என்ன சொல்ற நீ?''

''சரோஜா, புரியும்படியே சொல்றேன். ஆனந்தனுக்கு நாம கல்யாண ஏற்பாடு பண்ணுறோம். இந்தச் சமயத்தில கண்டிப்பா மைதிலி இங்க வந்திரக்கூடாது. அப்படி அவ இங்க வராம இருக்கணும்னா நாம ஒரு பொய்யை அவ கிட்ட புளுகணும். அப்பத்தான் அவ இங்க வராம இருப்பா..''

''பொய்யா?''

''ஆமா, ஆனந்தன் இங்க இல்ல. அவன் வெளிநாடு போயிருக்கான். வர ரெண்டு மாசம் ஆகும்ன்னு...''

''வெளிநாடா?''

''அதான். அவனது அலுவலகத்திலிருந்து அவசரமா ஆனந்தனை அமெரிக்காவிற்கு அனுப்பிருக்காங்க. புதுஸா கட்டுற பேக்டரிக்கு மெஷின் ஆர்டர் பண்ணனுமாம். மேனேஜரா இருக்கறதால ஆனந்தன்தான் போக வேண்டியதாயிடுச்சு. எப்படியும் ரெண்டு மாசத்தில திரும்பி வந்திருவான்னு ஒரு லெட்டர் போடணும்.''

''சரி லெட்டர் போட்டிரலாம். மைதிலி நம்பணுமே?''

''கண்டிப்பா நம்புவா. நம்பற மாதிரி நாம எழுதணும்.''

''புரியலையே அன்னபூரணி...''

அன்னபூரணி நெருங்கி வந்து சரோஜாவின் தோளைத் தட்டினாள். ''என்ன நீ? இன்னும் பத்தாம் பசலியாவே இருக்க. நீ யாரு? ஆனந்தனோட அம்மா. நீயே உன் கைப்பட எழுதிப்போட்டா அந்த மைதிலி நம்பாமலா போயிருவா. அந்த லெட்டருல, 'ஆனந்தன் உன்னைக் காதலிக்கிற விஷயத்தை என்கிட்ட சொல்லிட்டான். அவசரமா ஊருக்கு கிளம்பறதால என்னையே லெட்டர் எழுதி அனுப்பச் சொல்லிட்டான்'னு ரெண்டு வரி எழுதிரு. மைதிலி கண்டிப்பா நம்பிருவா...''

அன்னபூரணி மூச்சு வாங்க சொல்லி முடித்தாள். சரோஜா திகைப்பு பொங்க அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



# 14

சதாசிவம்தான் பதறிக் கொண்டிருந்தார். அவரால் நடப்பது ஒன்றையும் நம்ப முடியவில்லை. மைதிலி ஆனந்தனை உயிருக்குயிராய் காதலித்தது உண்மை. அப்படிப்பட்டவ எப்படி தன் அப்பாவுடன் டெல்லிக்கு சென்றிருப்பாள்? எப்படி ஆனந்தனை அடியோடு மறந்திருப்பாள்? மைதிலி அப்படிப்பட்ட பெண் இல்லையே?

சதாசிவம் யோசித்தார். அவரது சந்தேகம் முழுவதும் அன்னபூரணியின் பக்கம் திரும்பியது. அவரும் கொஞ்ச நாளாய் கவனித்து வருகிறார். வழக்கத்திற்கு மாறாய் அன்னபூரணி குஷி பொங்க நடமாடிக் கொண்டிருக்கிறாள். சில சமயங்களில் முகம் வெடித்துப் போகுமளவிற்கு சந்தோஷம்.. ஆனந்தம்.. என்னாயிற்று அன்னபூரணிக்கு?

அன்னபூரணியை கூர்ந்து கவனித்தார். அவள் அடிக்கடி ஆனந்தனின் தாய் சரோஜாவிடம் போய் குசுகுசுவென மணிக்கணக்காய் பேசிக்கொண்டு வருவது தெரிந்தது.

சதாசிவத்திற்கு அன்னபூரணியைப் பற்றி நன்கு தெரியும். விஷயமில்லாமல் அவள் யாரிடமும் அதிகம் பேசமாட்டாள். வீண் அரட்டையடிக்கமாட்டாள். அப்படிப்பட்டவள் பேசுகிறாள் என்றால் ஏதோ விஷயமிருக்கிறது.

சதாசிவம் சந்தேகப்பட்டவராய் அன்றே ஆனந்தனைத் தேடி அலுவலகத்திற்குப் போனார். அவரைக் கண்டதும் ஆனந்தன் ஆச்சரியத்துடன் ஓடிவந்தான்.

''என்ன மாமா இவ்வளவு தூரம்? மொதல்ல உட்காருங்க'' அன்புடன் உபசரித்து பதறியவனை பாசம் பொங்க சதாசிவம் பார்த்தார்.

''ஒரு முக்கியமான விஷயம்...''

''முக்கியமான விஷயமா?''

''ஆமா. மைதிலியைப் பற்றி...''

''மைதிலியைப் பற்றியா?''

மைதிலியின் பெயரைச் சொன்னதுமே ஆனந்தனின் முகம் மெர்க்குரிப் பிரகாசமாவதை சதாசிவம் கவனித்தார்.

''மைதிலியைப் பற்றி நீ என்ன நினைக்கிற? அதைச் சொல்லு...'' என்றார். ஆனந்தன் நெற்றியைச் சுருக்கினான். கேள்விக்குறியோடு அவரைப் பார்த்தான்.

''நீங்க கேட்கிறது புரியலையே மாமா...''

''சரி, நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லு..''

''கேளுங்க...''

''மைதிலியை நீ விரும்புறதான?''

''ஆமா...''

''அவளும் உன்னை மனப்பூர்வமா காதலிக்கறாதானே?''

''ஆமா.''

''அப்படிப்பட்டவ உன்னை மனப்பூர்வமா காதலிக்கிறவ எப்படி உன்னை மறக்க முடியும்? உன்னை மறந்துட்டு எங்கோ கண்காணா இடத்துக்கு எப்படிப் போக முடியும்?''

''அதான் எனக்கும் புரியலை மாமா. மைதிலி இப்படி செய்வான்னு என்னால கொஞ்சமும் நம்ப முடியல..''



''அதான் என்னோட பாயிண்ட். என்னாலயும் நம்ப முடியல. இதில ஏதோ சதி இருக்குன்னு நினைக்கிறேன்...''

''சதியா? என்ன சொல்றீங்க?''

''அன்னபூரணி அடிக்கடி உங்க அம்மாவோட குசுகுசுன்னு ரகசியம் பேசுற மாதிரி ரொம்ப நேரம் பேசறா. அவ அப்படி பேசற ஆள் இல்ல. அதெல்லாம் என் சந்தேகத்தை அதிகமாக்குது...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா என்னோட அம்மாவும் அத்தையும் சேர்ந்து ஏதோ சதி பண்ணிருப்பாங்கன்னு நினைக்கறீங்களா?''

''அதேதான்...''

சதாசிவம் பலமாய் தலையாட்டினார். ஆனந்தன் கோபமாய் அவரைப் பார்த்தான்.

''நான் ஒத்துக்கமாட்டேன். எங்கம்மாவை பற்றி எனக்குத் தெரியும். ஒரு போதும் கீழ்த்தரமா அவங்க நடந்துக்க மாட்டாங்க...''

''ஆனந்தா, அது எனக்கும் தெரியும். ஆனா அன்னபூரணி இருக்காளே... அவ சரியான விஷம். நச்சுப்பாம்பு மாதிரி.. அவளுக்குப் பிடிக்கலைன்னா எதையும் நடக்க விடமாட்டா. எப்படியாவது முட்டுக்கட்டை போட்டிருப்பா...''

ஆனந்தன் கொஞ்ச நேரம் பேசவில்லை. மௌனமாய் கண்களை மூடிக்கொண்டு யோசித்தான். கடைசியாய் நிமிர்ந்தான்.

''சரி நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க?''

''எனக்கென்னமோ மைதிலி காதலை இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிருப்பான்னு தோணல.

அவளோட உண்மையான நிலையை நாம அறியணும். அதுக்கு நீ உடனே ஹைதராபாத் போகணும்...''

''ஹைதராபாத்தா?''

''ஆமா.. ஹைதராபாத்தில இருக்கிற சொர்ணராணியைப் போய்ப் பார்க்கணும்...''

''ஹைதராபாத் போகலாம். சொர்ணராணியைப் பார்க்கலாம். ஆனா அங்கதான் மைதிலி இல்லையே?''

''இல்லைதான். ஆனா சொர்ணராணியை விசாரிச்சா மைதிலியைப் பற்றி எதுவும் உருப்படியான தகவல்கள் கிடைக்கும்ங்கிறது என்னோட நம்பிக்கை...''

சதாசிவம் விடவில்லை. திரும்பத் திரும்ப பேசினார். சூழ்நிலைகளை விளக்கி வாதாடினார். கடைசியில் ஆனந்தன் சம்மதித்தான்.

''சரி... உங்களுக்காக நாளைக்கே ஹைதராபாத் கிளம்பறேன்...''என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

# 15

விதி என்பது புயலைப் போன்றது. அது எங்கே எப்போது தாக்கும் என்பதை சொல்வது அரிது. அப்படித் தான் மைதிலி விஷயத்திலும் நடந்தது.

ஆனந்தனின் அம்மா லெட்டர் போட்டிருக்கிறார்கள் என்றதும் மைதிலிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. நாணிச் சிவந்த முகம் மேலும் சிவக்க.. பூரிப்புடன் லெட்டரைப் பார்த்தாள்.



ஒவ்வொரு வரியாய் கவனமாய்ப் படித்தாள். படித்து முடித்ததும் திரும்பவும் படித்தாள். மறுபடியும் படித்தாள். அப்படியும் அவளுக்கு ஆவல் அடங்கவில்லை. திரும் பத் திரும்ப லெட்டரைப் பிரித்து முப்பது முறையாவது படித்திருப்பாள்.

லெட்டரை சரோஜா எழுதியிருந்தாலும் ஆனந்தனே நேரில் வந்து பேசியது போல்தான் அவளுக்கு இருந்தது. நல்ல சமயத்தில் தனது விரக்தியான மனநிலைக்கு ஆதரவாய் இந்த லெட்டராவது வந்ததே என நினைத்து அடிக்கடி லெட்டரைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

அந்த அதீத சந்தோஷத்தில் ஆனந்தன் வெளிநாடு சென்றிருப்பதாக சரோஜா குறிப்பிட்டிருந்தது கூட அவளுக்கு பெரிதாய் தெரியவில்லை. அதை அப்படியே நம்பிவிட்டாள்.

அவளது கவனத்தை எல்லாம் சரோஜா லெட்டரில் கடைசியாய் எழுதிய வரிகள் தான் கவர்ந்தது. ''ஆனந்தன் உன்னைக் காதலிக்கும் விஷயத்தைச் சொல்லிவிட்டான். எனக்கு நீ மருமகளாய் வருவதில் பரிபூரண சம்மதம். ஆனந்தன் வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் கல்யாண வேலைகளை ஆரம்பித்து விட வேண்டியதுதான்...'' என்று பதவிசாக சரோஜா எழுதியிருக்க.. அதை அப் படியே நம்பிவிட்ட மைதிலி, துள்ளிக் குதிக்காத குறை யாய் ஆனந்தக் கூத்தாடினாள்.

சந்தோஷ பூரிப்புடன் உடனே விஷயத்தை ஓடிப்போய் சொர்ணராணியிடம் தெரிவித்தாள். சொர்ணராணியும் உள்ளுக்குள் பொங்கும் நகைப்பையெல்லாம் கட்டுப் படுத்திக் கொண்டு ஆச்சரியப்படுபவள் போல் நன்றாக நடித்தாள்.

மைதிலி எல்லாவற்றையும் அப்படியே நம்பினாள். அந்தக் கணமே கவலைகளை மறந்து ஆனந்தனைப் பற்றிய காதல் கனவுலகில் உற்சாகமாய் சஞ்சரிக்க ஆரம்பித்தாள்.

ஆனந்தன் தாமதிக்கவில்லை. மறுநாளே ஹைதராபாத் கிளம்பிவிட்டான். ஆனால் யாரிடமும் உண்மையைச் சொல்லவில்லை. வேலை விஷயமாகத் திருச்சி வரை செல்வதாய்க் கூறிவிட்டுக் கிளம்பியிருந்தான்.

பஸ்ஸில் ஹைதராபாத் நோக்கிச் செல்லும்போது மனம் முழுவதும் மைதிலியையே நினைத்துக் கொண்டிருந்தது. மைதிலியை அவனால் கொஞ்சமும் மறக்க முடியவில்லை. பழைய நினைவுகள், மனதை நெகிழ வைத்த சம்பவங்கள் என ஒவ்வொரு நினைப்பும் அவளைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது.

சதாசிவம் மாமா சொன்னது ரொம்பவும் சரி. எதையும் தீர விசாரிக்காமல் ஒரு முடிவிற்கு வரக்கூடாது. மைதிலியைப் பற்றிய தகவல் இல்லையென்றால் நான் அல்லவா நேரிடையாக ஹைதராபாத் சென்று விசாரித்திருக்க வேண்டும். ஏன் அப்படிச் செய்யாமல் இருந்துவிட்டேன்? எனக்கு ஏன் அந்த யோசனை தோன்றாமல் போயிற்று?

தன்னைத்தானே நொந்து கொண்டவனாய் ஆனந்தன் தவித்தான். உடனே மைதிலியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாகியது.

அதே நேரம் ஹைதராபாத்தில் - சரோஜாவின் பொய்யான கடிதத்தை உண்மையென அப்படியே நம்பினாள். மைதிலிக்கு ஆனந்தனைப் பற்றிய நினைப்பு பீறிட்டுக் கிளம்பியது. ஆனந்தனை நினைக்க நினைக்க சந்தோஷம் கரைபுரண்டு ஓடியது.



உடனே அவனைக் காண வேண்டும். ஆனால் ஆனந்தனை.. இப்போது பார்க்க முடியாது. அவன்தான் வெளிநாடு சென்றிருக்கிறானே? சரோஜா அத்தை மட்டும்தான் வீட்டில் இருக்கிறார்கள். அவர்களையாவது போய் பார்த்துவிட்டு வந்தால் என்ன? அவர்களது சமமதத்திற்கு நேரில் போய் நன்றி சொன்னால் சந்தோஷப்படுவார்கள்தானே? 'உடனே சென்னைக்குக் கிளம்பு' என மனம் ஆணையிட்டது.

மைதிலி அதற்கு மேல் தாமதிக்கவில்லை. சென்னைக்கு கிளம்பத் தயாரானாள். கூடவே சொர்ணராணியிடம் உண்மையைச் சொன்னால், 'சென்னைக்கு இப்போது வேண்டாம். பிறகு போய்க் கொள்ளலாம். போலீசில் உன் அப்பா பற்றி ஏதாவது சொல்ல வருவார்கள்...' அது இதுவென சொல்லி போக விடாமல் தடுத்து விடுவாள் என மைதிலி நினைத்தாள்.

அதனாலே சொர்ணராணியிடம் வேலை விஷயமாக யாரையோ பார்க்கப் போவதாய் சொல்லிவிட்டு சென்னைக்கு பஸ் ஏறினாள்.

மைதிலி ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு வந்து பாரிமுனை பஸ் ஸ்டாண்டில் இறங்கினாள். அதே நேரம்... விதிப்பயனாய் மைதிலி பற்றி விசாரிக்க ஹைதராபாத் பஸ் ஸ்டாண்டில் கால் பதித்திருந்தான் ஆனந்தன்.

## 16

வீட்டை நெருங்க.. நெருங்க... பொழுது போகாமல் வெளியே பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த அன்னபூரணி மைதிலியைக் கவனித்து விட்டாள்.

அவளுக்கு திக்கென்றது. 'இவள் எங்கே வந்தாள்?' என மூச்சே நின்று போகுமளவுக்கு அதிர்ச்சியுடன். கண்களை விரித்துப் பார்த்தாள். சந்தேகமில்லை! அது மைதிலி தான்!

யோசித்த அன்னபூரணி, மறுகணமே சுதாரித்துக் கொண்டாள். முகத்தை இயல்பாக்கி போலிப் புன்ன கையை வீசினாள். இனி நடிக்க வேண்டியதுதான்.. என முடிவும் பண்ணினாள்.

''அட.... மைதிலியா? வா.. வா!'' என வரவேற்றாள்.

அன்று மைதிலியின் கெட்ட நேரமோ என்னவோ சதா சிவம் வீட்டில் இல்லை. பக்கத்துத் தெருவில் ஆன்மீக சொற்பொழிவைக் கேட்க சென்றிருந்தார். வீட்டில் அன்னபூரணி மட்டும்தான்.

அது போதாதா அவளுக்கு? மைதிலி நம்பும்படி ஆனந்தன் பற்றி அவன் வெளிநாடு சென்றிருப்பதாய் புளுகி நல்ல கதையளந்தாள். சரோஜாவையும், உடனே அழைத்து, ''உன் மருமகள் வந்திருக்கிறாள்.. பார்...'' என்று சொல்லி மைதிலியை பரவசப்படுத்தினாள் உள்ளூர நகைத்துக் கொண்டாள்.

சரோஜாவும் மைதிலியைப் பார்த்து அதிர்ந்து, நொடி யில் நிலைமையைப் புரிந்து கொண்டாள். தன் பங்கிற்கு உடனே நடிக்கவும் ஆரம்பித்து விட்டாள். ''இரண்டு மாதத்தில் ஆனந்தன் வந்ததும் திருமணம்தான்'' என்று கூசாமல் பேசி மைதிலியைக் குளிரவைத்தாள்.

எதுவும் புரியாத வெகுளியாய் மைதிலி தலையாட்டி புன்னகை ததும்ப எல்லாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்தாள்.



கடைசியில் ஒரு வழியாய் மதிய உணவை முடித்துக் கொண்டு திரும்பவும் ஹைதராபாத்துக்கு பஸ் ஏறினாள் மைதிலி. அவளை உடனே ஹைதராபாத்துக்கு அனுப்பி யாக வேண்டும் என்ற தவிப்பில் பஸ் ஸ்டாண்ட் வரை கூடவே வந்து பஸ் ஏற்றினாள் அன்னபூரணி.

அதே நேரம் ஹைதராபாத்தில் ஆனந்தன் சொர்ண ராணியின் வீட்டைக் கண்டுபிடித்து மைதிலி பற்றி விசாரித்தான்.

''மைதிலியா, அவள்தான் அப்பாவுடன் டெல்லி பக்கம் சென்றுவிட்டாளே உங்களுக்கு விஷயம் தெரியாதா?''

சமயோசிதமாய் பொய் சொன்னாள் சொர்ணராணி.

அதை நம்பிய ஆனந்தன் வெறுத்து, விரக்தியான மனநிலையில் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தான்.

கூடவே, 'மைதிலி ஏமாற்றிவிட்டாள். அம்மா பார்த்த பெண்ணை உடனே கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதான்!' என்று மனதில் உறுதியும் எடுத்தான் ஆனந்தன்.

# 17

மணமகன்: ஆனந்தன். மணமகள்: லதா.

அந்த மஞ்சள் வண்ண பளபளப்பான கல்யாண இன் விடேஷன் தயாராகி ஆனந்தனின் கைகளுக்கு வந்தது.

முதலாவதாய் இன்விடேஷனை கொடுக்க சதாசிவத்தை தேடிப் போனான். சதாசிவம் சங்கடமாய் நெளிந்தார்.

''மைதிலி பேரு இருக்க வேண்டிய இடத்தில வேற ஒரு பொண்ணு பேரா? என்னால இதை ஜீரணிக்க முடியல...''

''மாமா, நீங்க இன்னும் அவளை நம்பறீங்களா? அவ நம்மையெல்லாம் மறந்துட்டா. தூக்கியெறிஞ்சிட்டுப் போயிட்டா...''

''இல்ல. என்னால அப்படி நினைக்க முடியல. மைதிலி அப்படிப்பட்ட பொண்ணு இல்ல... எனக்கென்னமோ நீ இன்னும் கொஞ்சம் அவளுக்காக காத்து இருக்...'' சதாசிவம் வார்த்தைகளை முடிக்கவில்லை.

''நோ! இனி மேலும் என்னால காத்திருக்க முடியாது. இந்தாங்க இன்விடேஷன்...'' கல்யாண பத்திரிகையை அவரது கைகளில் திணித்துவிட்டு விறுவிறுவென கோபமாய் அங்கிருந்து அகன்றான் ஆனந்தன்.

சட்டென அவரது வெறித்த பார்வையில் பொறி.

எதிர் சோபாவில் அது.. அந்த சிறிய பர்ஸ்! மைதிலி வந்தவள் மறதியாய் வைத்து விட்டுப் போனது!

ஆச்சரியம் தாங்காதவராய் ஓடிப்போய் அந்தப் பர்ஸை எடுத்தார். பிரித்துப் பார்த்தார். உள்ளே பழைய ஐந்து ரூபாயும் ஒரு சில நாணயங்களும். சந்தேகமில்லை. இது மைதிலியுடையதுதான்! முன்பு ஹைதராபாத்துக்கு அப்பாவைத் தேடி அவசரமாய் செல்கையில் அவர்தான் ஞாபகமாய் சில்லரைகளை போட்டு வைப்பதற்காக மைதிலிக்குக் கொடுத்திருந்தார். மைதிலியும் ஆர்வமாய் வாங்கிப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி எடுத்துச் சென்று விட்டாள். பின்.. எப்படி இது இங்கு வந்தது? யார் வைத்தது...? அப்படியானால்... ஒரு வேளை..?



மைதிலி இங்கு வந்தாளா?

நேற்று கூட நாம் வீட்டில் இல்லை. ஆனந்தனும் அவளைத் தேடி ஹைதராபாத் சென்றிருந்தான். ஒரு வேளை அந்த சமயத்தில் அவனைத் தேடி மைதிலி வந்திருப்பாளோ? அன்னபூரணி ஏதாவது சாக்கு போக்கு சொல்லி திரும்பவும் ஹைதராபாத் அனுப்பி இருப்பாளோ?

சதாசிவம் யோசித்தார். எழுபது வயதிலும் அவரது மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்தது.

ஐடியா பண்ணினார். அதன்படி அந்தப் பர்ஸை அன்னபூரணியின் பார்வையில் படும்படி ஹாலின் நடுவே இருந்த ட்ரேயில் வைத்தார். பழைய பேப்பர் ஒன்றை விரித்து தீவிரமாய் படிப்பது போல் ஈஸி சேரில் போய் உட்கார்ந்து கொண்டார்.

கொஞ்ச நேரத்தில் அவர் எதிர்பார்த்தபடியே அன்ன பூரணி அங்கு வந்தாள். சதாசிவம் தலையை மேலும் கவிழ வைத்தபடி ஓரக்கண்களால் நடப்பதைக் கவனித் தார்.

விடுவிடுவென வந்த அன்னபூரணியின் கண்களில் சதாசிவம் நினைத்தபடியே ட்ரேயில் இருந்த பர்ஸ் பட்டுவிட்டது.

மறுகணம் அவள் முகத்தில் அதிர்ச்சி! பதட்டம்!

சட்டென நிமிர்ந்து சதாசிவத்தைப் பார்த்தாள்.

சதாசிவம் தீவிரமாய் பேப்பரைப் படிப்பது போன்ற பாவனையைத் தொடர்ந்தார். அன்னபூரணி அவசர அவசரமாய் பர்ஸை எடுத்தாள். சட்டென தனது சேலைத் தலைப்பிற்குள் மறைத்தாள். திருட்டு முழி முழித்தபடி விறுவிறுவென அங்கிருந்து நடந்தாள்.

அன்னபூரணி அகல.. அகல.. சதாசிவம் உற்சாகமாய் நிமிர்ந்தார்.

# 18

திருமண மண்டபம் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது. அன்னபூரணியும், சரோஜாவும் பட்டுப்புடவைகள் சரசரக்க ஓடியாடி கல்யாண வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தனர். இருவர் முகத்திலும் ஒரே பூரிப்பு. சரோஜாவுக்குத் தனி குஷி. ''சரோஜா, லதா கழுத்தில் ஆனந்தன் தாலி கட்டிருவான். நம்ம திட்டப்படியே எல்லாம் நடந்தாச்சு. நாம ஜெயிச்சிட்டோம்...'' என்ற அன்ன பூரணியின் வார்த்தைகள் அவள் காதில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

மணமகன் அறையில் பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை பளபளப்பில் ஆனந்தன். அவன் முகத்தில் என்றுமில்லாத தாய் ஒருவித இறுக்கம். கண்கள் மட்டும் அடிக்கடி அலை பாய்ந்தது. யாரையோ தேடியது.

அங்கு மணமகள் அறையில் லதா சிரித்த முகத்துடன் மணப்பெண்ணுக்குரிய சர்வ அலங்காரங்களுடன் கா திருந்தாள்.

முகூர்த்த வேளை நெருங்கிக் கொண்டிருந்தது.

கல்யாண சடங்குகள் ஒவ்வொன்றாய் நடக்க ஆரம்பித்தன

மணமேடையில் ஆனந்தன் மாலையுடன் உட்கார்ந் விட்டான். மாப்பிள்ளைச் சடங்கு முடிந்து, ''பெண்ணை அழைத்து வாங்கோ...'' என்றார் புரோகிதர்.



இதோ மணப்பெண்... காஞ்சிபுர பட்டில் குனிந்த தலை நிமிராமல் நடந்து வருகிறாள். மெல்ல மண மேடையில் ஏறி ஆனந்தன் பக்கத்தில் உட்கார்கிறாள்.

மணப்பெண் உட்கார்ந்ததும் ஆனந்தன் அவள் பக்கம் திரும்பி வெட்கத்தால் குனிந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்துகிறான். எல்லோருக்கும் காட்டுகிறான்.

பார்த்த அனைவருக்கும் பயங்கர அதிர்ச்சி!

அங்கு மணப்பெண்ணாய் உட்கார்ந்திருந்தது லதா இல்லை.. மைதிலி!

''மைதிலி நீயா?''

சரோஜாவும் அன்னபூரணியும் ஷாக்கடித்தவர்கள் போல ஒருசேர அலறினர்.

கூட்டத்தை விலக்கியபடி சிரித்த முகத்துடன் சதா சிவம் முன் வந்தார். அவருடன் சிரித்தபடி லதா. இருவரும் ஆனந்தனைப் பார்த்து புன்னகை புரிய...

''முகூர்த்த நேரம் நெருங்கிடுச்சி, மொதல்ல தாலியைக் கட்டுங்க...'' நடப்பது புரியாமல் ஐயர் அவசரப்படுத் தினார்.

ஆனந்தனும் தாமதிக்கவில்லை.

சரியான முகூர்த்தத்தில மங்கள இசை முழங்க, மைதி லிக்குத் தாலி கட்டினான். மூன்று முடிச்சு போட்டுவிட்டு வெற்றிக் களிப்புடன் நிமிர்ந்தான்.

அவனையே எரித்துவிடுவதுபோல் பார்த்துக் கொண் டிருந்தனர் சரோஜாவும், அன்னபூரணியும்.

சதாசிவம் சிரிப்பு மாறாமல் அவர்கள் பக்கம் போனார். ''என்ன பார்க்கறீங்க? உங்க குட்டு எல்லாம் வெளிய

வந்தாச்சு. உங்க சதித் திட்டம் எல்லாம் அம்பலமாயிடுச்சி. மைதிலியை ஹைதராபாத்ல நீங்க மறைச்சு வச்சிருந்த விஷயத்தை நான்தான் துப்பறிஞ்சு கண்டு பிடிச்சேன். ஆனந்தன்கிட்ட சொல்லி, மைதிலியை அவசரமா ஹைதராபாத்திலிருந்து கூட்டி வந்து, மணப் பெண்ணா உட்கார்த்தி வைச்சதும் நான்தான்!''

''இருங்க மாமா, எல்லாத்தையும் நான் சொல்றேன்...'' விறுவிறுவென மணமேடையிலிருந்து ஆனந்தன் எழுந்து வந்தான். இருவரையும் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தான். மகனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் சரோஜா நெளிந்தாள்.

''அம்மா, கடைசியில நீங்களும் இந்த அன்னபூரணி கூட சேர்ந்துக்கிட்டு என்னோட வாழ்க்கையைப் பாழாக்க துணிஞ்சிட்டீங்க... அப்படித்தானே?''

சரோஜா தவித்தாள். வார்த்தைகள் வராமல் தடுமாறினாள். குனிந்தபடி கண் கலங்கினாள்.

ஆனந்தன் அன்னபூரணி பக்கம் போனான். ''ஆனாலும் நீங்க இவ்வளவு கொடுமைக்காரியா இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்ல. மைதிலிக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சிரக்கூடாதுன்னு என்னமா திட்டம் போட்டிருக்கீங்க. எப்படியெல்லாம் நாடகம் நடத்தியிருக்கீங்க. நீங்க ஒரு பெண்ணே இல்ல. மாமா சொல்ற மாதிரி ஒரு நச்சுப்பாம்பு...'' அத்தனைப் பேர் முன்னிலும் ஆனந்தன் ஆத்திரம் கொப்பளிக்கப் பேசினான். அன்னபூரணி அவமானத்தில் குனிந்தாள்.

ஆனந்தன் திரும்பினான். நேராய் லதாவின் தந்தை சோமசேகரிடம் வந்து கை கூப்பினான்.



''எல்லாத்துக்கும் மேல நான் உங்களுக்குத்தான் நன்றி சொல்லணும். எங்களோட உண்மையான காதலைப் புரிஞ்சுக்கிட்டு, உங்க பொண்ணோட கல்யாணம் நின்னாலும் பரவாயில்லைன்னு துணிச்சலா எங்களைச் சேர்த்து வைச்ச உங்களோட பெரிய மனசுக்கு நாங்க எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது. ரொம்ப நன்றிங்க...!''

ஆனந்தன் கண் கலங்கினான்.

லதாவின் தந்தை அவன் தோள்களைத் தட்டினார். சமாதானப்படுத்தினார். ஆனந்தன் திரும்பி மைதிலியைப் பார்த்தான். அவள் கைகளை இறுகப் பற்றினான். ''மைதிலி, இனிமே நாம இவங்க ரெண்டு பேர் முகத்திலும் முழிக்கவே கூடாது. நமக்குன்னு ஒரு தனி வாழ்க்கை தொடங்கிடணும். அதுக்கு முன்னால...'' ஆனந்தன் மைதிலியுடன் சதாசிவம் பக்கம் போனான்.

''மைதிலி, உனக்கொரு சந்தோஷமான விஷயம். உங்க அப்பா கிடைச்சிட்டார். டெல்லியிலிருந்து தந்தி அடிச்சிருக்கார்...''

''நிஜமாவா?''

மைதிலி ஆச்சரியப்பட, சதாசிவம் தந்தியை நீட்டினார்.

அதில் மைதிலியின் அப்பா அடுத்த வாரம் சென்னை வருவதாகவும் எதிர்பாராமல் ஏற்பட்ட வியாபாரச் சூழ்நிலைகளால் தொடர்பு கொள்ள முடியாமல் போய் விட்டதாகவும் விளக்கியிருக்க...

- படித்த மைதிலி சந்தோஷமாய் நிமிர்ந்தாள்.

ஆனந்தன் கரங்களோடு இறுக தன்னைப் பிணைத்துக் கொண்டாள் மைதிலி.

இருவரும் ஒரு நிமிடம் திரும்பினர்.

திகைத்து நிற்கும் அன்னபூரணியையும் சரோஜாவையும் அற்பப் புழுக்களைப் பார்ப்பது போல் பார்த்தனர்.

பின் விறுவிறுவென கைகோர்த்தபடி சுதந்தரப் பறவைகளாய் நடக்க ஆரம்பித்தனர். சதாசிவம் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

தங்களை உதறிவிட்டு அவர்கள் மூவரும் போவதை அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தனர் சரோஜாவும், அன்னபூரணியும்.

# காதல் மலர்

## 1

அது ஒரு அழகான உலகம். வெண்ணிலா அதன் நடுவில் வீற்றிருந்தாள். அவளைச் சுற்றி சின்னஞ்சிறு பொம்மைகள். அவளைப் போலவே அழகாய் நளினமாய் வேலைப்பாடுகளுடன் அமைந்த பொம்மைகள். கலை நயத்துடன் விதவிதமான உருவங்களில் செய்யப்பட்ட வடிவங்கள். இது ராஜா பொம்மை, இது ராணி பொம்மை, இது மந்திரி பொம்மை, இது குடியானவன் பொம்மை, இது சிற்பம் போல கால்களால் நர்த்தனமாடும் நடராஜா பொம்மை, என பல விதங்கள். விழிகள் விரிய பார்த்தவளுக்கு சிறு வயதில் செப்புச் சாமான்கள் வைத்து குழந்தைத் தனமாய் விளையாடியது ஞாபகத்திற்கு வந்து விட்டது.

என்ன ஒரு குறும்பு...! என்ன ஒரு துடுக்குத்தனம்...! வீட்டில் அம்மாவுக்குத் தெரியாமல் சில அரிசி மணிகளை எடுத்து வந்து செப்புப் பானையில் போட்டு தண்ணீர் ஊற்றி பக்கத்து வீட்டு மாலதி, மீனு, திவ்யாவுடன் விளையாடியது நிஜமாகவே சாதம் பொங்கி வடித்தது போல் இது சாதம் இது பருப்பு இது... பொங்கல் என எல்லோருக்கும் கொடுத்தது... எல்லோரும் சுவைபட போலியாய் சப்பு கொட்டிக் கொண்டது... ஒரு கணம் பழைய பால்ய நினைவுகளை ஓடவிட்டு வெண்ணிலா மெய் மறந்திருந்தவள் யாரோ தன்னை உலுக்குவதைக் கண்டு சட்டென உணர்வுக்கு வந்தாள்.

எதிரில் சிரித்தபடி புதுத் தோழி கவிதா.

''என்ன... மலைத்து விட்டாய்? புதிதாய் வேலைக்கு வந்தால்... முதல்ல இப்படித்தான் இருக்கும். எதைப் பார்த்தாலும் பிரமிப்பாய் தெரியும். பயந்து விடாதே. எல்லாம் போகப் போக சரியாகிவிடும்...'' என்றவள் விடாது, ''வெண்ணிலா, இது நம் அலுவலகத்தின் ஒரு பகுதிதான். இன்னுமொரு பகுதி இருக்கிறது... நீ... பார்க்கவில்லையே...? வா... காட்டுகிறேன்...'' என்றபடி கவிதா அழைத்துச் செல்ல, ''என்ன... இன்னுமொரு பகுதியா...?'' என்ற வியப்புடன் வெண்ணிலா பின் தொடர்ந்தாள்.

''ஆமாம்... இப்போது நாம் பார்வையிட்டது கைவினைப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு. பல குடிசைத் தொழில் கலைஞர்களின் நெடுநேர உழைப்பில் உருவான கலை நயமிக்க வேலைப்பாடுகளை வாங்கி சேகரித்து அப்படியே வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம். மற்றொரு பிரிவு நாமே வேலையாட்களை, பணி



நிபுணர்களைக் கொண்டு விதவிதமான டிசைன்களில் ரெடிமேடு துணிகளை உற்பத்தி செய்யும் பிரிவு. இப்பிரிவில் கவுன்கள், சிறுவர் சிறுமியருக்கான சட்டைகள் என பலதரப்பட்ட ரெடிமேட் பொருட்களை உருவாக்குகிறோம். வெளிநாடுகளில் இது போன்ற துணி வகைகளுக்கு நல்ல கிராக்கி. நம் முதலாளி நிறைய அப்படி ஏற்றுமதி செய்கிறார். கை நிறைய சம்பாதிக்கிறார். அவர் கைராசி அப்படி...''

உற்பத்திப் பிரிவைக் காட்டியபடி பேசிய கவிதா ஏதோ ஹாஸ்யம் ஏற்பட்டது போல் அத்தனை பற்களையும் காட்டிச் சிரித்தாள். வயது முப்பத்தைந்தை தொட்டிருந்தாலும் அவளது இயல்பான சுறுசுறுப்பு. கனிவு, துடுக்கான பேச்சு அவளது வயதை குறைத்துக் காட்டியது. வெண்ணிலா ஒருகணம் அவளையே பார்த்து அளவெடுக்க.. அது புரியாமல் அலுவலகத்தைக் கண்டு மிரண்டு விட்டாள்... என்று கவிதா நினைத்துக் கொண்டவள், ''எதையும் பார்த்து மிரண்டு விடாதே. இதிலெல்லாம் உனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. உனது பிரிவு அக்கவுண்டிங் செக்ஷன்தான். அங்குதான்... முதலாளி உனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்... வா...!'' என்றபடி கவிதா அழைத்துச் செல்ல முத்துப்பல் சிரிப்புடன் வெண்ணிலா அவளைப் பின் தொடர்ந்தாள்.

நடக்கும் வெண்ணிலாவின் இயற்கையான அழகைக் கண்டு பிரமிக்காமல் இருக்க முடியவில்லை. இருபது வயதிலும் பதினாறு வயது கவர்ச்சியாய் அந்த முகம், நளினமான உடலமைப்பு, செக்கச் செவேல் என்று சொல்லும்படி நிறம், ஒரு முறை பார்த்தாலே அகல விடாதபடி சிறை போட்டிடும் அந்த படபடக்கும் மான் விழிகள்...

நொடிக்கொரு தரம் தவழ்ந்தோடும். அந்த முத்துப்பல் வரிசையின் அழகுப் புன்னகை... அந்த அடக்கமான எளிமையான இயற்கை அழகைக் கண்டு வியந்தவள் நிச்சயம் இவள் பேரழகி தான் என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

பின் கவிதா அந்த அக்கவுண்டிங் செக்ஷனில் வெண்ணிலாவுக்கு வேலையைச் சொல்லி அவளது இருக்கையில் உட்கார்த்தி வைத்தாள். வெண்ணிலா வேலையைக் கண்டு மலைக்கவில்லை. சுளுவாய்தான் இருந்தது. வழக்கமாக முன்பு சில கம்பெனிகளில் தற் காலிகமாய் அவள் செய்த கணக்கு குமாஸ்தா வேலை தான். ஒவ்வொரு முறை கணக்கு முடிக்கும் போதும் ரூபாயின் மதிப்பு சரியாக 'டேலி' ஆகும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது என எல்லாம் அவளுக்கு அத்துப் படியாகிப் போன சமாச்சாரங்கள்தான்.

காது மடல்கள் அதிர, தான் சொல்லுவதற்கு படபட வென அழகாகத் தலையாட்டியவளைக் கவிதா புதிராய்ப் பார்த்தாள். ''என்ன இதெல்லாம் உனக்குத் தெரிந்து போன விஷயங்கள்தானா...?'' என்று வியந்தவளிடம், ''நான் முன்பு ஒரு ஆடிட்டரிடம் உதவியாளராய் கொஞ்ச நாட்கள் பணிபுரிந்திருக்கிறேன்... கவிதா...'' என்று கூறி மேலும் மலைக்க வைத்தாள் வெண்ணிலா.

அன்று ஒருவாறு வேலை கற்றுக் கொள்வதில், அலுவலகத்தைப் பிரமிப்பாய் பார்ப்பதிலே வெண்ணிலா வுக்கு பொழுது கழிந்து விட்டது. வேலையும் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அவளது அக்கவுண்டிங் செக்ஷ னில் கவிதாவும் இன்னும் இரண்டு சக பெண்களும்தான். அவர்களைவிட கவிதாதான் அவளுடன் நன்கு பழகி



னாள். அடிக்கடி பேச்சுக் கொடுத்தாள். ஒரு கணம் கவி தாவைப் பார்க்கையில் சிறு வயதில் பக்கத்து வீட்டி லிருந்த வேலம்மாள் டீச்சர் ஞாபகம் தான் வந்தது. அதே சாயல்... அதே சுறுசுறுப்புடன் அவளது நடை உடை பாவனை இருந்தது. ஒரு கணம் திரும்பவும் பழைய பால்ய நினைவுகளில் மூழ்கிப் போனவள் சட்டென சுதாரித்து உணர்வுக்கு வந்தாள். வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.

இரண்டு நாள் வெண்ணிலாவுக்கு எவ்வித பிரச் சினையுமில்லாமல் அலுவலகப் பொழுது கழிந்தது. மூன்றாம் நாம் தான் அந்த சம்பவம் நடந்தது. அன்று வழக்கம்போல் தீவிரமாய்க் குனிந்து கணக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்தாள் வெண்ணிலா. அப்போது திடும்மென ஒரு ஆணின் வலுவான கரம் உரிமையுடன் அவள் தோளில் விழுந்து அழுத்தியது. திடுக்கிட்டு நிமிர்ந்தவள் எதிரில் குறும்புப் புன்னகையுடன் வாட்ட சாட்டமாய் வாலிபனொருவன் அலட்சியமாய் அவள் தோளில் கை வைத்தபடி சிரிப்பதைக் கண்டு வெகுண்டு, ''டீ... அவர்... நம்... முதலாளிடி...'' என்று கவிதா சுதாரித்துச் சொல்வதற்குள் ஓங்கி அவனது செவிட்டில் அறைந்து விட்டாள் வெண்ணிலா.

## 2

வெண்ணிலா யோசிக்கவில்லை. தோளில் ஒரு ஆணின் கரம் உரிமையாய் விழுந்து அழுத்தியதும்

கொஞ்சமும் தாமதிக்கவில்லை. திரும்பி ஓங்கி செவிட்டில் ஒரு அறை கொடுத்திருந்தாள்.

''டீ... அவர்... நம்ம முதலாளிடி..'' பதறிப்போன கவிதாவின் குரல் அதற்குப் பின் தான் அவள் காதுகளில் விழுந்தது. கோபமாய் அடித்தவள் சுட்டெரிக்கும் கனல் வீச நின்றவளைப் பார்த்ததும் ஒரு கணம் சப்தநாடி ஒடுங்கிப் போய் விட்டான். தீச்சுடர் போல் பிரகாசிக்கும் களையான முகம். அவளை வேல் கொண்டு குத்தி விடுவது போல் சிவந்த கூர்மையான விழிகள் அடர்ந்த புருவம்... ஆத்திரத்தில் துடிக்கும் மீசை.. என்னையா நீ... அடித்தாய்..? என எரித்து விடுவது போல மிகக் கடுமையாய்ப் பார்த்த அவனது முகம் சட்டென மாறியது. சாந்தம் பரவியது. இயல்புக்கு வந்தது. பெருந்தவறைச் செய்து விட்டவளாய் உதடு பொத்தி நின்றவளை ஆழமாய் ஒரு பார்வை பார்த்தான். அது கனிவா? இரக்கமா? என்று வெண்ணிலா அறிவதற்குள் கர்ச்சீப் எடுத்து முகம் துடைத்தவன் திரும்பி விறுவிறுவென தனது பிரத்யேக ரூமை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

நிலை குத்தி பிரமை பிடித்தாற்போல் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த வெண்ணிலாவை நோக்கி விரைவாய் வந்தாள் கவிதா. ''அவசரப்பட்டுட்டியே... அவர்... நம் முதலாளி!'' என்றாள்.

''மு... முதலாளியா?''

''ஆமாம்.... அவர்தான்... நம்.. சின்ன முதலாளி. பெரியவருக்கு வயதாகி விட்டதால்... அடிக்கடி அவரால் வர முடியவில்லை. போன மாதத்திலிருந்துதான் பொறுப்பு முழுவதையும் வெளிநாடு சென்று மேற்படிப்



பெல்லாம் படித்துவிட்டுத் திரும்பிய இவரிடம் ஒப்படைத்து விட்டார். பெரியவரின் ஒரே மகனும்கூட...'' படபடத்துச் சொன்ன கவிதா இவள் வாய் பிளந்து நிற்பதைக் கண்டதும் விடாது, ''இவ்வளவு... ஏன் உனக்கு வேலை போட்டுத் தந்ததும் இவர்தான்...! உனது வேலைக்கான விண்ணப்பத்தைப் பார்த்து.. இந்தப் பெண்ணுக்கு வேலைக்கான ஆர்டரை அனுப்பி... வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று தன் அலுவலக உதவியாளரிடம் சொல்லிவிட்டு பிஸினஸ் டூர் கிளம்பியவர்.. பதினைந்து நாள் கழித்து இன்றுதான் திரும்பியிருக்கிறார்.. அவரைப் போய் அவசரப்பட்டு.. அடித்து விட்டாயே... வெண்ணிலா..?'' வருத்தம் தோய்ந்த குரலில் பேசும் கவிதாவுக்கு என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் வெண்ணிலா விழித்தாள்.

ஆனாலும்... அவள் தோளில் உரிமையாய் கை வைக்க என்ன உரிமை இருக்கிறது..? முதலாளி.. என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அவனும் ஓர் ஆண் மகன்தானே..? அந்நியன் ஒருவன் முன் பின் தெரியாத ஒருவன் உரிமையோடு தோளில் கை வைத்து அழுத்துவதை அவளால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்..? அவளது சுயமரியாதையை, தன்மானத்தை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்..? என்றெல்லாம் சிந்தித்தவளுக்குக் கூடவே கிலி பரவியது.

எவ்வளவோ முயற்சிகளுக்குப் பின் மனத்திற்குப் பிடித்த இந்த வேலை கிடைத்திருக்கிறது. இதையும் இப்படி 'அடித்து' கோட்டை விட்டு விட்டால்... பின் வேறு வினையே வேண்டாம்... வேலை தேடும் மகா சமுத்திர கூட்டத்தில் தானும் லட்சியத்தோடு லட்சமாய்

நீச்சல் அடிக்க வேண்டியதுதான். ஒவ்வொரு கம்பெனி யிலும் பிரயாசையுடன் அவள் பைலைத் தூக்கிக் கொண்டு நுழைந்து வேலை கேட்ட அனுபவம்.. அவர்கள் அவளைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல் முகம் சுழித்து விரட்டிய அனுபவம் எல்லாம் பூதாகரமாய் எழுந்து மனதில் பயங்காட்டியது.

'இதெல்லாம் வேலையில் சகஜம்டி... முதலாளி எங் களையெல்லாம் இப்படி அடிக்கடி தோளில் கைபோட்டு பேசுவார்... பேசியிருக்கார். இதுக்குப் போய் அடித்து விட்டாயே...?' என்று சக பெண்கள் வினவியது அவ ளுக்குப் புதிராயிருந்தது. 'அடிமாடு போல் வேலைக்கு வந்தாயிற்று. இனி வண்டிக்காரன் மூக்கணாங்கயிறுக் கேற்ப வளைந்து குனிந்து கொடுப்பதுதான் நம் பாடு...' என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இவர்களைச் சொல் லிப் பயனில்லை. அவனைச் சொல்ல வேண்டும். வேலை பார்ப்பவளை ஏதோ கட்டின பொண்டாட்டி போல் உரிமையாய்த் தொட்டுப் பேசுகிறானே.. எவ்வளவு திமிர் அவனுக்கு..? என்ன ஒரு கர்வம்? அதற்கு அந்த திமிருக்கு நாம் கொடுத்த சரியான சாட்டையடிதான் இந்த செவிட் டடி... இதற்கு நாம் ஏன் வருந்த வேண்டும்? வெண் ணிலா மனதுள் எண்ணி மனம் தேற்றினாள். ஆனால் பார்க்கிற சக பெண்கள் ஒவ்வொருத்தியும்... வேலைக்கு வந்த பத்தாவது நாளிலே முதலாளியை அடித்து விட் டாயா..? அவ்வளவுதான். உனக்கு சீட் கிழிந்ததுதான்! என்று இரக்கத்தோடு சூள் கொட்டிச் சொன்னபோது நிஜமாகவே அவளுக்கு வயிற்றைப் பிசைந்தது.

''பார்... இன்னும் சில நொடிகளில் உன்னை முதலாளி... கூப்பிடப் போகிறார்.. கூப்பிட்டு... அம்மா தாயே நீ போகலாம்... என்று கணக்கு தீர்க்கப் போகிறார்...''



சில பெண்களுக்கு அவள் நிலைமை கேலிப் பொரு ளாய்ப் போய் 'ரன்னிங் கமெண்டரி' வேறு அடித்தார்கள். வெண்ணிலாவும் கொஞ்சம் படபடப்பு அடைந்தவ ளாய்... ஒன்றும் ஓடாமல்.. அழைப்பு வருகிறதா என்று எம்.டி. ரூமைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நேரம் ஆயிற்று.

அவளுக்கு அழைப்பு ஏதும் வரவில்லை. பணியாள் யாரும் வந்து, 'உங்களை முதலாளி வரச் சொன்னார்' என்று சொல்லவில்லை. என்னாயிற்று..? ஒன்றும் நடக்கவில்லையே என்று வெண்ணிலா வியந்தாள். டக்கென அவனை அடித்தபோது... அந்த முகம் சட்டென கடுமையாய் சிடுசிடுவென கோபக் கனலாய் எரிப்பது போல் மாறியதை அவள் கண்கூடாகக் கண்டாளே...? அந்தக் கோபம் எங்கே போயிற்று? ஒருவேளை தான் செய்தது தவறுதான் என்பதை உணர்ந்து விட்டானா...? வருத்தம் கொள்கிறானா...? என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தவளைக் கவிதாவின் குரல் நினைவுக்கு இழுத்து வந்தது.

''வெண்ணிலா பேசாமல் நீ... போய்... முதலாளியிடம் மன்னிப்பு கேட்டு விடு. பிரச்சினை தீர்ந்து விடும்!''

கவிதா சொன்னதும்.. ''என்ன.. நான் மன்னிப்புக் கேட்பதா..?'' என்று கோபமாய் நிமிர்ந்தவளைக் கை பிடித்து அழுத்தி, ''பொறு சொல்கிறேன்...'' என்றபடி திரும்பவும் கவிதா சாந்தப் படுத்தினாள்.

''என்ன... சொல்லப் போகிறாய்?''

''நம்.. முதலாளி செய்தது தவறுதான். ஆனால் இதை பெரிசு படுத்தினால்... உன் வேலை நிச்சயம் பறி போய்விடும். அதையும் தெரிந்து கொள்...''

''அதற்காக... அவர் செய்த தவறுக்கு... நான் வருந்தி மன்னிப்பு கேட்க வேண்டுமா... என்ன ஒரு... முட்டாள் தனம்?''

வெகுண்டு எழுந்தவளைக் கவிதா அடக்கி விட்டாள்.

''முட்டாள்தனம்தான்.. உன் வேலை பிழைக்க வேறு வழியில்லை. வெறும் உதட்டளவில் பேசி செய்து விடு. நடித்து விடு. பின் எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில்.. இப்போது விட்டு விட்ட உன் தன்மானத்தை, சுய கௌரவத்தை காப்பாற்றிக் கொண்டால் போயிற்று...''

புத்திசாலித்தனமாய் பேசும் கவிதாவை ஆச்சரியமாய் பார்த்தாள் வெண்ணிலா. அவள் நிஜமாகப் பேசுகிறாளா... இல்லை.. 'எங்களுக்கெல்லாம் இல்லாத சுயகௌரவம் உனக்கு மட்டும் இருக்கிறதா.. பார்..' என்று குத்திக் காட்டுகிறாளா... என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை ஆனாலும் அவள் பேச்சில் இருந்த நிஜம் அவளுக்கே உறைத்தது. கவிதா சொல்வது போல் 'இப்போதைக்கு பிரச்சினையை தீர்க்க வேலையைக் காப்பாற்றிக் கொள்ள இது ஒன்றுதான் வழி' என்ற முடிவுக்கு வெண்ணிலாவும் வந்து விட்டாள்.

மதிய இடைவேளையை நெருங்கும் சமயம் ஸீட்டை விட்டு எழுந்து விட்டாள். படபடக்கும் இதயத்தோடு எம்.டி. ரூமை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அழைப்பு மணியை அழுத்தி கதவைத் திறந்து எம்.டி. ரூமினுள் நுழைந்தபோது அவள் கொண்டு வந்த தைரியம் அத்தனையும் தொலைந்து போயிற்று. மணப்பெண் போல் குனிந்திருந்தவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

அங்கு அவனது பளபளப்பான மேஜையில் ''ராஜா, மேனேஜிங் டைரக்டர்'' என்று மினுங்கும் வாசகம் அட...



இவன்.. பெயர் ராஜாவா..? என்றபடி பார்வையை உயர்த்தியவள் ஸ்டைலாய் படு கம்பீரத்துடன் ஒரு கையில் பைலும் மறு கையில் ரிசீவருமாய்.. புன் சிரிப்பு ததும்ப பேசிக் கொண்டிருந்த அவனது அழகைக் கண்டு நிஜமாகவே இவன் ராஜா தான் என்ற முடிவுக்கு வந்தாள். என்ன.. ஒரு காந்தம்..? என்ன.. ஒரு கவர்ச்சி... இந்த முகத்தையா போய் அடித்து விட்டோம்..? என்று வருந்திய வளை நோக்கி மின்னலாய் ரிசீவரை வைத்துவிட்டு ராஜா திரும்பினான்.

''எங்கே... என்னை.. அணைத்துக் கொள்ள வந்தாயா?'' என்றான் குறும்புச் சிரிப்புடன்.

# 3

''எங்கே.. என்னை அணைக்க வந்தாயாக்கும்?'' என்று குத்தலாய் அவன் குரல் எழும்பியது கண்டு ஒரு கணம் வெண்ணிலா திடுக்கிட்டு விட்டாள்.

அவன் சொன்னதன் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை. மிரள மிரள விழித்தாள்.

அதை ரொம்ப ரசிப்பவன் போல் முகத்தைச் சாய்த்துக் கொண்டு ராஜா பார்த்தான்.

''புரியவில்லை...? அடிக்கிற கைதான் அணைக்கும் என்று சொல்வார்கள். அது பழமொழி வேறு. அதன்படி முதலில் அடித்தாயிற்று. இனி அணைக்க வேண்டியது

தான் பாக்கி. அதான் எப்படி எப்போது என்னை அணைக்கப் போகிறீர்கள்.. சொல்லுங்கள்... சொல்லுங்கள் வெண்ணிலா...''

தொடர்ந்து கிண்டலாகச் சொல்லிவிட்டு குறும்புச் சிரிப்புடன் பார்த்தபோதுதான் அவன் குரலில் இருந்த கேலி அவளுக்குப் புரிந்தது. குழந்தைத் தனமாய் குழி விழும் அவனது பளபளப்புக் கன்னம் தெரிந்தது. கள்ளங்கபடமில்லாமல் பளீர் பளீரென சிரிக்கும் இவனைப் போயா அடித்து விட்டோம் என்ற நினைப்பும் வந்தது.

கூடவே வியப்பும் வெண்ணிலாவைத் தொற்றிக் கொண்டது.

கை நீட்டி சம்பளம் வாங்கும் முதலாளியையே அடித்து விட்டோம். இனி அவ்வளவுதான் சீட்டு கிழிந்து விடும் என்று நினைத்தால் இது என்ன புதிராய் இருக்கிறது. என்ன மனிதன் இவன்? நாம் அடித்தால் இவனுக்குக் கொஞ்சமும் கோபம் வரவில்லையா? எவ்வளவு 'ஸ்போர்டி'வ்வாக அடித்ததை எடுத்துக் கொண்டு கேலி செய்கிறான்?

ஆச்சரியத்தில் கண்கள் விரிய அவனைப் பார்த்தாள் வெண்ணிலா. அவனது ஸ்டைல் கண்ணாடியை மீறித் தெரிந்த குண்டு குண்டான கருவிழிகள், முன்புற நெற்றியில் அலட்சியமாய் விழுந்து புரளும் கேசம், அடர்ந்த முறுக்கேறிய மீசை. சிவப்பான அந்த முகத்தில் உணர்ச்சிகளை சடார் சடாரென மாற்றி தாண்டவமாட விடும் அவனது அந்த லாவகம் எல்லாம் வியப்பில் ஆழ்த்திற்று. சூழ்நிலை மறந்து அவனையே உற்று நோக்கினாள். திரும்பவும், அவளைக் கிண்டல் செய்ய ராஜாவுக்கு வசதியாய் போயிற்று.



''அடாடா..! என்ன... ஒரு பார்வை...? நன்றாக அப்படிப் பாருங்கள் அப்படியே என்னை. இதயத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்... மிஸ் வெண்ணிலா.. அழகான பெண்கள் பார்க்கப் பார்க்கத்தான் என் போன்ற ஆண்களும் அழகாய் மெருகேறுவார்களாம்... என்னவோ உங்கள் புண்ணியத்தில் எனக்கு அது நடந்தால் சரி..?!''

அவனது குறும்புச் சிரிப்பு அடக்க முடியாத புன்னகையாய் மாறிக் கொண்டது. ராஜா எள்ளி நகையாடுவது போல் சிரித்தான். வெண்ணிலா வெடுக்கென உதட்டைக் கடித்துக் கொண்டாள். ஒரு கணம் தான் கேலிப் பொருளாய் போய் விட்டதில் கோபம் பொங்கி முகத்தை சிவக்க வைத்து விட்டது.

''ஸார்... அதில்லை... வந்து...'' குரலை அதிகரித்துப் பேசிப் பார்த்தாள்.

ஆனால் அவனது கணீர் கணீரென்ற ஆண்குரலின் முன் அவளது மிருதுவான குரல் கொஞ்சமும் எடுபடவில்லை.

''அதில்லை..? அப்படியென்றால் வேறு என்ன பார்வை? என்ன.. அப்படியொரு கற்பனை..? ஒரு வேளை நான் அணைக்கச் சொன்னதும்.. சினிமா படங்களில் காட்டுவது போல் என்னுடன் ஓடியாடி முத்தமிட்டு டூயட் ஆடும் சமாச்சாரங்களில் மனதை கவனத்தில் விட்டு விட்டீர்களா. சொல்லுங்கள் மிஸ் வெண்ணிலா?''

அவனது பேச்சு அத்து மீறி செல்வது வெண்ணிலாவுக்கு மேலும் கோபத்தை அதிகப்படுத்தியது. அதற்கு மேலும் பொறுக்க முடியாதவள் போல், ''சார் உங்களது அசிங்கமான கற்பனையைக் கொஞ்சம் நிறுத்துகிறீர்

களா...?'' என்றாள் வெடுக்கென்று. பொங்கிய கோபத்தில் படபடவென மூச்சிழுத்து விம்மித் தாழும் விரைவான நெஞ்சுடன் பேசிய அவளைப் பார்த்து ராஜாவே கொஞ்சம் லேசாய் அதிர்ந்து விட்டான்.

மறுகணமே அவனது குரலில் இரக்கம் கனிந்தது. ''ஐ.. ஆம்... ஸாரி...!'' என்றவன் சட்டென முகத்தை இயல்பாக்கிக் கொண்டு, ''மிஸ் வெண்ணிலா நீங்கள் கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை. வேலையாள் என்றாலும் மதிப்பு கொடுத்து மரியாதையுடன் பழகுவதையே நான் விரும்புகிறேன். நம் கம்பெனி பாலிஸியும் அதுதான்... முதலில் ஸீட்டில் உட்காருங்கள்'' என்றான் சிரத்தையாய்.

தன்னை சீப்பாய் தெரு ரவுடி போல் அவள் நினைத்து விடக் கூடாது என்ற ஜாக்கிரதையோடு சட்டென சுபாவத்தை மாற்றிக் கொண்ட அவனது கெட்டிக்காரத் தனத்தை ஒரு கணம் வியந்து விட்டு வெண்ணிலா உட்கார்ந்து கொண்டாள். ஏ.ஸி. ரூமின் சன்னமான குளிரை மீறி அவளுள் ஒரு வித படபடப்பு ஏற்பட்டு விட்டது. சட்டென்று ஏற்பட்ட உணர்வு மாற்றங்களில் அவளது ரோஜா இதழ்கள் படபடக்க ஆரம்பித்து விட்டது. வந்தோம். வேலை பார்த்தோம். போனோம் என்றில்லாமல் வீண் பேச்சை வளர்ப்பானேன் என்ற எண்ணம் அசரீரியாய் அவளுள் உதயமாயிற்று.

''மன்னித்துக் கொள்ளுங்கள் ஸார். என் தோள் மீது அப்படி கை வைத்ததும் துடித்து விட்டேன். அதற்கு... ஸாரி சொல்லிவிட்டுப் போகவே உங்கள் ரூமிற்கு வந்தேன்...'' என்றவள் அத்தோடு நிறுத்தாமல், ''மேலும் உங்களை இப்போதுதான் முதன் முதலாய்ப் பார்க்கிறேன்.



நீங்கள்தான் முதலாளி என்றும் எனக்குத் தெரியாது...'' என்றாள் அப்பாவியாய்.

ராஜாவின் முகம் தூண்டிலுக்குக் கிடைத்த மீனாய் மாறிக் கொண்டது. ஓஹோ என்பது போல் புருவத்தை உயர்த்திக் கொண்டான்.

''அப்படியானால்... முதலாளி என்று முன்பே உங்களுக்குத் தெரிந்திருந்தால்.. அப்படி உங்கள் தோளில் கை வைக்க அனுமதித்திருப்பீர்கள் அப்படித்தானே...?''

திரும்பவும் பழைய பாணியில் அவன் கிண்டலாய் விளையாட ஆரம்பித்ததும் வெண்ணிலாவுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. என்னதான் இவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்? பெண்கள் என்றால் இவனுக்கு அவ்வளவு கேலிப் பொருளாய் போய்விட்டதா.. அடி வாங்கியும் புத்தி வரவில்லையே? என்று வெகுண்டவளாய், ''கண்டிப்பாய் அடித்திருப்பேன் சார்'' என்றாள் அழுத்தந் திருத்தமாய்.

''சார்... நீங்கள் சம்பளம் கொடுக்கிறீர்கள். நாங்கள் வேலை செய்கிறோம். வேலையைச் சொல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு. செய்ய வேண்டியது எங்கள் கடமை. நம் இருவருக்கும் உள்ள தொடர்பு அதுதான். அதை விட்டு நீங்கள் மீறுவதும் வேலை பார்ப்பவளை உரிமையோடு சொந்தம் கொண்டாட நினைப்பதும் என்றுமே ஆபத்துதான். பயங்கர விளைவுகளை உண்டாக்கக் கூடியதுதான். அதை இப்போதாவது நீங்கள் தெரிந்து கொள்வது நல்லது...''

பிரசங்கம் போல் உரையாற்றி விட்டு அவன் முகக் குறிப்பை அறிய ஆவலாய்ப் பார்த்தாள். எந்தவித சலனமு

மில்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தது அவனது முகம். என்னதான் இவன் நினைத்துக் கொண டிருக்கிறான்..? அப்படி தோளில் கை வைப்பது தவறு என்று உள்ளுக்குள் உணர்ந்து வருந்துகிறானா... இல்லை திரும்பவும் நம்மை கேலிப் பொருளாக்க வார்த்தைகளைத் தேடுகிறானா...?

சிந்தித்த வெண்ணிலா சட்டென வேறு கோணத் திற்குத் தாவினாள். ஆமாம்.. நாம் அடித்தோமே. இவ னுக்குக் கோபம் வரவில்லை? அடித்ததும் டக்கென ஒரு கணம் சிவந்து ஒரு முறை முறைத்தானே. அந்த கடுமை யான பார்வையை மறைக்க முடியுமா? அந்தக் கோபம் எங்கே போயிற்று? தன்னிடம் சம்பளம் வாங்கும் பணி யாள் ஒருத்தி அடித்து விட்டதை சகித்துக் கொள்ள ஒருவருக்கு எவ்வளவு பக்குவம் வேண்டும். இந்த இளவயதில் அவ்வளவு பக்குவம் இவனுக்கு வந்து விட்டதா? நாம் அடித்து விட்டதை சகித்துக் கொண்டு.. எப்படி இயல்பாய் பேசி கேலி செய்ய முடிகிறது.. ஒருவேளை வெளிநாடு எல்லாம் சென்றிருக்கிறான்.. பெரிய படிப்பெல்லாம் படித்திருக்கிறான்.. பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன், கம்பெனி மேனேஜிங், லேபர் டீலிங்ஸ் எத்தனையோ விதமான வகுப்புகள் இருக் கின்றன. அதெல்லாம் இவன் படித்திருக்கலாம். இப்படிப் பக்குவப்பட்டிருக்கலாம்.. மனதளவில் உயர்ந்திருக்கலாம்...

வெண்ணிலா தனக்குத்தானே அந்த முடிவிற்கு வந்து நிமிர்ந்து பார்த்தபோது அவன் கண்கள் விரிய அவளை விழுங்கிக் கொண்டிருந்தான்.

''இன்னும் உங்கள் கேள்விக்கு விடை கிடைக்க வில்லை அப்படித்தானே... வெண்ணிலா...?''



''கேள்வியா...?''

''ஆம்... நாம் ஓங்கி செவிட்டில் அடித்தோம்.. இவன் என்னவென்றால்... கொஞ்சம் கூட சொரணையே இல் லாமல் சிரித்து சிரித்துப் பேசுகிறானே என்ற கேள்வி...''

இம்முறை வெண்ணிலா தப்ப விரும்பவில்லை. அவன் யூகம் சரி என்பதற்கு அடையாளமாய் வேகமாய் தலையசைத்தாள்.

''அதற்கு.. காரணம் இருக்கிறது...'' என்றபடி பெரிய புதிரை விடுவிப்பது போல் இழுத்து மூச்சு விட்டுக் கொண டான் ராஜா.

''எல்லாம்... ஒரு வித கற்பு.. சைக்காலஜிதான்... உங்களுக்குப் புரியும்படி சொல்கிறேன். இதுவரை யாரிடமும் இந்த ரகசியத்தைச் சொல்லியதில்லை...''

பீடிகையுடன் பேசி அத்தனை பற்களையும் காட்டி அழகாய் டூத் பேஸ்ட் விளம்பரம் போல் சிரித்தவனைப் புதிருடன் நோக்கினாள் வெண்ணிலா. அந்த நிமிடத் திலும் அவனது முகத்தில் ஒரு வசீகரக் களை மற்றவர் களை சுலபமாய் கவர்ந்து விடும் அழகுச் சிரிப்பு இருப் பதைக் கண்டு வியந்தாள். மேலும் வியந்தவளாய், ''கற்பு சைக்காலஜியா?'' என்று உதடுகளுக்குள் முணுமுணுத் தாள்.

''கற்பு சைக்காலஜிதான்! பொதுவாய்.. நம் கம்பெனி யில் வேலை பார்க்கும். புதிதாய் வேலைக்குச் சேரும் இளம் அழகான பெண்களை இப்படி தோளில் இடுப்பில் கை வைத்துப் பேசிப் பார்ப்பது... பரிசோதித்துப் பார்ப்பது... என்னுடைய வழக்கம்... நிறைய பேர்களிடம் தோளில் கை வைத்துப் பேசியிருக்கிறேன். யாரும் என்னை

எதிர்த்ததில்லை. கை ஓங்கி அடித்ததில்லை. உடனே நானும் அந்த முடிவிற்கு வந்து விடுவேன்...''

வெண்ணிலாவால் அடக்க முடியவில்லை. ''என்ன முடிவு சார்?'' என்றாள் அவசர அவசரமாய்.

''இவைகள்... இந்தப் பெண்கள் எல்லாம்... கலியுக கற்புக் கரசிகள். நாம் கூப்பிட்டால் உடனே படுக்கைக்கு வர துடிக்கும் தயார் ரகங்கள்.. என்று.. ஆனால்.. நீங்கள்... கொஞ்சம்... மாறுபட்ட... ரகம்...'' நிதானமாய் பேசியவன் அவள் கண்களை ஊடுருவுவது போல் பார்த்துக் கொண்டே, ''ம்ம்.. ம்... எதற்கும்.. நான் இந்த ஒரு நிகழ்ச்சியை வைத்து ஒரு முடிவு எடுக்கப் போவதில்லை. இன்னும் நாட்கள் இருக்கிறதே.. பார்ப்போம். என் பரிசோதனையில் யாருக்கு வெற்றி கிட்டுகிறது என்று பார்த்து விடுவோம்.. ஆனால் ஒன்று எனக்கு நம்பிக்கையில்லை.. எல்லாப் பெண் களும் ஒரே குட்டையில் ஊறிய... பழைய மட்டைகள் தான். அதில் என் நினைப்பு கொஞ்சமும் பொய்த்ததில்லை.. என்றாவது ஒரு நாள் நீங்கள்.. கூட என் படுக்கைக்கு வரத் தயாராகலாம். யார் கண்டது?''

சர்வ சாதாரணமாய் ராஜா பேசி விட்டு ஓய வெண் ணிலா நெருப்புக் கனலாய் தகதகத்துக் கொண்டிருந்தாள். அரிசிப் பற்களை வேகமாய் அழுத்திக் கடித்துக் கொண் டாள். எவ்வளவு சீப்பாய் எவ்வளவு இளக்காரமாய் எடை போட்டு விட்டான். அவனைப் பொறுத்த வரையில்... நான் கூட ஒரு நாள் அவன் படுக்கைக்கு வந்து விடுவேனாம். இதைவிட வேறு கேவலம் உண்டோ? என்ன திமிர் இவ னுக்கு? பெண் என்றால், வேலை பார்ப்பவள் என்றால்... அவனது அகராதியில் 'படுக்கிற கேஸ்' என்று எழுதி வைத்திருக்கிறானோ.. இவனை சும்மா விடக்கூடாது.



நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்டு இவனது கோணல் புத்தியை சரி பண்ண வேண்டும்.

வெண்ணிலா ஆவேசமாய் ஆங்காரமாய் ஏதேதோ நினைத்து தயார் செய்து கொண்டு பேச முயற்சிக்கவும், ராஜாவின் பளபள மேஜையிலிருந்து சிவப்பு டெலிபோன் கிணுகிணுக்கவும் சரியாயிருந்தது.

அவளை நோக்கி அவசரமாய் கை உயர்த்தி பேசாமல் இருக்கும்படி சைகை செய்து விட்டு ராஜா ரிசீவரை எடுத்தான். மும்முரமாய் ஏதோ அவன் பாட்டுக்குப் பேச... ஆரம்பித்தான்.

எல்லா பாயிண்ட்டுகளையும் தயார் செய்து பட்டிமன்ற பேச்சை ஆரம்பிக்கும் போது... மைக் பிடுங்கப்பட்டது போல வெண்ணிலா தவித்தாள். கை மருதாணி விரல் களைப் பிசைந்தவள் அவனையே முறைப்போடு பார்த் தாள்.

ராஜா தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தவன் என்ன நினைத்தானோ டக்கென ரிசீவரை ஒரு கணம் மூடிக் கொண்டு அவளைப் பார்த்தான். ''ஏன்... நிற்கிறீர்கள்... போகலாம்... போய் வேலையைப் பாருங்கள்... வேலை நேரத் தில் அனாவசிய பேச்சு வேண்டாம்... ம்ம்... போங்கள்...!''

அதிகாரத் தோரணையில் சொல்லி கர்ஜித்தவன் சொல்லியபடியே அவளை விரட்டும் பார்வை பார்க்க.. வெண்ணிலா அந்தக் கணத்தில் சப்தநாடி ஒடுங்கி விட்டாள். முதலாளி புத்தியை காட்டுகிறான் என்ற ஆங்கார உணர்வு அவளை வெகுண்டு திமிறியெழச் செய்தது. ஆனாலும் அதற்கு இது இடமில்லை என்பதை சட்டென உணர்ந்தவள் போலியான பணிவுடன், ''சரி...

சார்...'' என்றபடி அகன்றாள். 'இவனுக்கு ஒரு கன்னத்தில் அடி போதாது. மறு கன்னத்திலும் அடித்திருக்க வேண்டும். அடிக்காமல் விட்டு விட்டோமே...? பெயரைப் பார்... ராஜாவாம்.. சரியான திமிர் ராஜா...!' கறுவியபடி தன் ஸீட்டிற்கு வந்தாள் வெண்ணிலா.

## 4

மறுநாள் அலுவலகத்திற்கு வந்த வெண்ணிலா இறுக்கமாய்த்தான் இருந்தாள். யாரிடமும் அதிகம் பேசாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்தவளை எம்.டி. ராஜா அழைத்தது ஆச்சரியப்படுத்தியது.

''என்ன சார்...?'' என்று பணிவுடன் நுழைந்தவளை,

''என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்... நீ....?'' என்ற ஒருமையில் கோபமாய் வீசிய ராஜாவின் குரல் தாக்கிற்று.

அதிர்ந்து போய் பார்த்தாள்.

கோபச் சிகரமாய் அவளை எரித்து விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடந்தது..? ஏன் இப்படி சிடுசிடுக்கிறான்? என்றபடி மேஜையில் பார்த்தவளுக்கு சட்டென எல்லாம் புரிந்து விட்டது.

மேஜையின் மீது கம்பெனியின் முக்கியமான அக்கவுண்டிங் லெட்ஜர். கணக்கு வரவு செலவு வகையறாக்கள்



அனைத்தும் அதில்தான் இருக்கும். ஒவ்வொரு முறை இன்கம்டாக்ஸ் கணக்குகளை ஆடிட் செய்ய அந்த லெட்ஜரைத்தான் உபயோகித்து ரிப்போர்ட் தயாரிக்க வேண்டும். இன்று... திறந்து கிடக்கும் அந்த லெட்ஜர் முழுக்க.. மை அபிஷேகத்தில் ப்ளூ கலரில் மாறியிருந்தது. லெட்ஜரின் நடுவே அந்த பழைய மாடல் பேனா, வெண்ணிலா நேற்று மறந்து லெட்ஜரில் வைத்து விட்ட பேனா...!'

ராஜா அந்தப் பேனாவை கையிலெடுத்தான். ''இது உன்னுடைய பேனா தானே...?'' என்றான் கடுமையாய்.

வெண்ணிலா பலியாடு போல் தலையாட்டினாள்.

''பார்... அப்படி.. என்ன அவசரம் உனக்கு? லெட்ஜரில் எழுதிவிட்டு பேனாவையும் திறந்தபடியே அதனுடன் வைத்து யாராவது மூடுவார்களா? நீ மூடியிருக்கிறாய். லெட்ஜரின் அழுத்தத்தில் உன்னுடைய ஓட்டைப் பேனா ஒழுகி... லெட்ஜர் முழுக்க மை அபிஷேகம் செய்து விட்டது. எவ்வளவு முக்கியமான கணக்குகள் இதில் எழுதி வருகிறோம் என்று உனக்குத் தெரியாதா...? கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாமல் இப்படி நடந்து கொண்டாயே.. உனக்கு வெட்கமாயில்லை...?''

நாக்கைப் பிடுங்குகிற மாதிரி ராஜா கேள்வி கேட்டான். வெண்ணிலாவால் ஒன்றும் பேச முடியவில்லை. தவறு புரிந்தது. எவ்வளவு அசட்டையாய் இருந்து விட்டோம். நேற்று வேலை முடிந்து ஹாண்ட் பேக்கை குடைந்து பேனாவைத் தேடியபோதும் லெட்ஜரில் வைத்து விட்ட ஞாபகம் வரவில்லையே. எங்காவது கீழே விழுந்திருக்கும் என்று நினைத்தாள்.

ஆனால்... அது.. இப்படி.. முழு பூசணிக்காயாய் லெட்ஜரில் ஒளிந்து.. லெட்ஜரை குளிப்பாட்டி... தன் மானத்தை வாங்கி விட்டதே... இப்போது.. என்ன செய்வது...?

வெண்ணிலாவால் நிமிரவே முடியவில்லை.

ராஜாவின் கோபமான அந்த முகத்தைப் பார்க்க திராணியற்றவளாய் தரை நோக்கி நன்கு குனிந்து கொண்டாள். குற்றம் குறுகுறுத்தது. கண்ணீர்த் துளிகள் கண்களை நிறைத்தது. போதாக் குறைக்கு அவன் பேசிய பேச்சு. அந்த கோபமான வார்த்தைகள் சாகும் வரை மறக்க முடியாமல் போல் தோன்றியது. அப்படியே செயலற்றுப் போனவளாய் நின்றாள் வெண்ணிலா.

மதியம் நான்கு மணி இருக்கும்.

வெண்ணிலா வேலைகளை ஏறக்குறைய முடித்து விட்ட சமயம். அலுவலகப் பையன் அவளிடம் ஓடி வந்து, ''அம்மா, உங்களை முதலாளி வரச் சொன்னார்...'' என்றான்.

வெண்ணிலா ஒன்றும் புரியாமல் எழுந்தாள். ராஜா எதற்கு கூப்பிடுகிறான்...? இன்னும் பாக்கி ஏதும் வைத்திருக்கிறானா...? அதான்... காலையில் பேச வேண்டிய அனைத்தையும் ஏசித் தீர்த்து விட்டானே...? பின். எதற்கு...?

யோசனை தாக்க ரூமினுள் நுழைந்தவளுக்கு அத்தனை பற்களையும் காட்டி அழகாய்ச் சிரித்தபடி இருந்த ராஜாவின் முகம் மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதைக் காட்டிலும் அவளைப் பார்த்ததும் காத்திருந்தவன் போல் ராஜாவும் ஸீட்டை விட்டு எழுந்து விட்டான்.



''உட்காருங்கள் வெண்ணிலா..'' என்று இருக்கையைக் காட்ட வெண்ணிலாவும் பவ்யத்துடன் உட்கார்ந்து அவனது மனநிலையை படம் பிடிக்க முயன்றாள்.

அது புதிராயிருந்தது. வழக்கமான குமிழ்ச்சிரிப்புடன் ஆழமாய் அவளைப் பார்த்தவன் சட்டென சிந்தினை தாக்க முகபாவனைகளை மாற்றிக் கொண்டான். எல்லாவற்றையும் மீறிய ஈர்ப்பு ஒன்று கிளம்பி அவனை கண் கொட்டாமல் வெண்ணிலாவைப் பார்க்கச் செய்தது.

''நான் காலையில் நடந்ததற்கு வருந்துகிறேன் வெண்ணிலா...'' என்றான் மெல்லிய குரலில், அவனால் இவ்வளவு கனிவாகக் கூட பேச முடியுமா என்று வெண்ணிலா வியந்தாள். காந்தக் கண்களை விரித்து அவனையே பார்த்தாள். ராஜா சங்கடப்படுபவன் போல் நெளிந்து கொண்டான்.

''காலையில் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. வந்த கோபத்தில் என்னவெல்லாமோ... ஏசிவிட்டேன். போதாக் குறைக்கு மரியாதையை வேறு குறைத்து உங்களை நீ... நான் என்று ஒருமையில் விரட்டி விட்டேன்.''

அவன் நிஜமாகவே வருந்துவது போலப் பேசினான். வெண்ணிலாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பேசுவது அவன் தானா என்ற சந்தேகமே வந்து விட்டது. அவன் ஒருமையில் திட்டியதைக் கூட அவள் மறந்திருந்தாள். இப்போது அவன் சொல்லும் போதுதான் ஞாபகத்திலே உறைத்தது. ராஜா அவளை ஆழமாய்ப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

''என் தந்தை எனக்குத் தொழிலில் எவ்வளவோ கற்றுத் தந்திருக்கிறார்கள். வேலை பார்ப்பவர்களிடம்

அதிகம் கோபத்தை காட்டக் கூடாது. கடுமையாகப் பேசக்கூடாது என்பது அவரது கட்டளையும் கூட. அதை யும் மீறி நான் பேசிவிட்டேன். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.''

ஸ்கூல் பையன் போல் பவ்யமாய்ப் பேசும் அவனைக் கண் கொட்டாமல் வெண்ணிலா பார்த்தாள்.

ராஜா கனைத்துக் கொண்டு சுதாரிப்பானான். ''வெண்ணிலா உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன்...'' என்றான்.

''கேளுங்கள்... சார்...''

''நீங்கள்... தனியாய்.. பெண்கள் விடுதியில் தங்கி வேலைக்கு வருவதாய் கேள்விப்பட்டேன். உண்மை தானா?''

''உண்மைதான் சார்...''

''அப்படியானால்... நீங்கள்... நீங்கள்...'' வார்த்தைகளை நிறுத்தி தடுமாற்றமாய்ப் பார்த்தான். வெண்ணிலாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''அனாதை இல்லை... ஸார்... அப்பா அம்மா.. சொந்த ஊரில் இருக்கிறார்கள். திருநெல்வேலிக்குப் பக்கத்தில் நாட்டரசன்பட்டி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதுதான் என் சொந்த ஊர். ஆனால் நான் காலேஜ் படித்ததெல்லாம் இங்கு சென்னையில்தான். என் மாமா ஒருவர் இங்கு ரயில்வேயில் குமாஸ்தாவாக பணிபுரி கிறார்கள்... அவர்கள் வீட்டில் தங்கிதான் படித்தேன். அவர்களுக்கு மேலும் சிரமம் கொடுக்கக் கூடாது என்று தான் இங்கு வேலைக்குச் சேர்ந்ததும் ஹாஸ்டல் ஒன்றில் தங்கிக் கொண்டேன். கூடிய சீக்கிரம் வீடு ஒன்று பார்த்



ஊரிலிருக்கும் அப்பா, அம்மா இருவரையும் கூட்டி வந்து... என்னுடனே தங்க வைத்துக் கொள்ள ஆசை. அதற் குத்தான் நேரமும் சமயமும் வரட்டுமென காத்திருக் கிறேன் சார்...''

விடாமல் அவள் சொல்லி முடித்ததும் அவனுள் ஆச்சரியம் அடங்கவில்லை. ''அப்படியானால்.. நீங்கள் வீட்டில் ஒரே... பிள்ளைதானா...? வேறு உடன் பிறப்புகள் யாரும் கிடையாதா... வெண்ணிலா..?'' என்றான்.

''ஆமாம்... எதற்கு... கேட்டீர்கள்... சார்...?'' என்றாள் ஆவலாய் அவன் முகக் குறிப்பை நோக்கியபடி.

ராஜா அதற்கு இடங் கொடுக்காமல் தலையைக் குலுக்கி கொண்டான். ''ஒன்றுமில்லை... சும்மாதான்..'' என்றான்.

## 5

அன்று அலுவலகத்திற்குள் நுழைந்தவளைப் புருவம் விரிய வரவேற்றாள் கவிதா. ''விஷயம் தெரியுமாடி?'' என்றாள்.

''என்ன விஷயம்?''

''மினுக்குக்காரி வந்து விட்டாள்..''

''மினுக்குக்காரியா?''

''உனக்கு அவளைப் பற்றி தெரியாதல்லவா? அதனால் தான் சொல்கிறேன். அவள் பெயர் லலிதா. ஆனால்

அலுவலகத்தில் அவளுக்கு நாங்கள் வைத்த பெயர். மினுக்குக்காரி. தளுக்கிக் குலுக்கி நடப்பாள். கர்வம் பொங்க அலைவாள். நீ பார்க்கத்தான் போகிறாய்...?''

''யாரவள் கவிதா...?'' என்றாள் வெண்ணிலா.

''காரியதரிசி...! நம் முதலாளி ராஜாவின் அந்தரங்க காரியதரிசி! ஒரு மாதம் விடுப்பில் சென்றவள் இன்று தான் வேலைக்குத் திரும்பியிருக்கிறாள். மகா கர்வக்காரி, முதலாளியையே தன் சேலை முடிப்பில் முடிந்து வைத்துக் கொண்டது போல்தான் பேசுவாள். நடந்து கொள்வாள்...'' கவிதா சொல்லச் சொல்ல ஏதோ சோகச் செய்தியை கேட்டது போல் வெண்ணிலா முகம் மாறி விட்டது. ''நிஜமாவா... நிஜமாவாச் சொல்கிறாய்?'' என்றபடி அதிர்ச்சியுடன் வாயைப் பிளந்தாள்.

தனது அக்கவுண்டிங் செக்ஷனில் தீவிரமாய் இருந்த வெண்ணிலா, பணியாள் எம்.டி. அவளை அழைப்பதாய்ச் சொன்னதும் ராஜா ரூமை நோக்கி நடந்தாள். ரூம் கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததுமே ஷாக் அடித்தது போல் இருந்தது. லலிதாவும் இவளைப் பார்த்து விட்டாள். அவளுக்கும் அதிர்ச்சி, இரண்டு எதிர் எதிர் துருவங்கள் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டது போல் மின்னல். நீயா...? நீ தானா...? என்று இருவரது பார்வைகளும் மோதிக் கொண்டன. மறுகணமே இருவரது முகத்திலும் பார்க்கக் கூடாத ஒன்றைப் பார்த்து விட்ட அசூயை, வெறுப்பு தோன்றி விட்டது. படாரென பார்வையை இழுத்து... முகத்தை சட்டென வேறு பக்கம் திருப்பி வைத்துக் கொள்ள... நடக்கும் 'மௌனப் போரை, கண்டு அதிசயித்து சுவாரஸ்யம் பொங்க ஸீட்டிலிருந்து எழுந்து விட்டான் ராஜா.



இருந்தும் அதைக் கொஞ்சமும் வெளிக்காட்டாதவளாய், ''உங்கள் இருவரையும் அறிமுகம் செய்யவில்லையே... செய்கிறேன் செய்யட்டுமா?'' என்றபடி, ''இது வெண்ணிலா புதுசாய் அக்கவுண்டிங் செக்ஷனில் சேர்ந்திருக்கும் செயலாளர்!... இது... லலிதா... என் அந்தரங்க... காரியதரிசி!'' அறிமுகம் செய்து வைத்ததும் வேறு வழியில்லாமல் புன்னகையைத் தவழவிட்டு, ஒப்புக்கு இருவரும் கை கூப்பிக் கொள்வதை ராஜா உன்னிப்பாய் கவனித்தான். இருவருக்கும் இடையே ஏதோ விஷயமிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டவன் அதை மேலும் சீண்டி விட்டு விளையாடும் நோக்கத்தில் குறும்புத்தனம் பொங்க இருவரையும் பார்த்தான். ''ஒரு.. நிமிஷம் இருவரும் அப்படி சேர்ந்து பக்கத்தில் பக்கத்தில், நில்லுங்கள் பார்ப்போம்...'' என்றான்.

இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். வேறு வழி தோன்றாதவர்களாய் பக்கம் பக்கம் நின்றனர். வெண்ணிலா அப்போது தான் கடைக்கண்ணால் லேசாய் திரும்பி 'லலிதா' என்று பெயரைச் சுருக்கிக் கொண்ட தனது கல்லூரி தோழி லலிதகுமாரியைப் பார்த்தாள். வெண்ணிலா பார்ப்பதை உணர்ந்ததும் அவள் சட்டென தனது கொண்டைத் தலையை வெட்டி மறுபுறம் அலட்டலாய் திரும்பிக் கொண்டாள். வெண்ணிலாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. சரிதான் லலிதகுமாரி மாறவே இல்லை. அதே அலட்டல். அதே உருட்டல். அவளது இந்த சுபாவத்திற்காகவே கல்லூரியில் 'அலட்டல் குமாரி' என்றுதான் கேலியாய் கூப்பிடுவது வழக்கம். கவிதா அந்தரங்க காரியதரிசி லலிதா என்று சொன்னபோது கூட வெண்ணிலாவுக்குத் தன்னுடன் படித்த இந்த லலிதகுமாரி ஞாபகம்

வரவில்லை. வேறு யாரோதான் இருக்கும் என்று நினைத்தாள். ஆனால்: யார்... கல்லூரி வாழ்க்கையில் முழுவதும் தன்னுடன் மோதிக் கொண்டு... வீண் வாதங்கள் செய்து கொண்டு... பொறாமை பிடித்து அலைந்தாளோ... அவளே... இன்று ராஜாவின் அந்தரங்க காரியதரிசியாய் இருக்கப் போகிறாள் என்பது அவள் கனவிலும் எதிர்பார்க்காதது.

அந்த நாள்... அவளுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. கல்லூரியில் சேர்ந்த முதலாண்டில் முதல் வாரத்திலே அவர்களுக்குள் போட்டி வந்துவிட்டது, பிடிக்காமல் போய்விட்டது. அன்று கல்லூரியில் கீதா மிஸ் ஆங்கில இலக்கிய கிளாஸ் நடத்தியபோது ஏற்பட்ட சண்டை அது. இலக்கியப் புகழ் பெற்ற தாமஸ் ஹார்டியின் காதல் காவியங்கள் பற்றிய உரையை மிஸ் நிகழ்த்திக் கொண்டிருக்க... மிஸ்ஸின் பேச்சை ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருந்த வெண்ணிலா எழுந்து, 'தாமஸ் ஹார்டி தனது மேயர் ஆஃப் கேஸ்டர் ஃபிரிட்ஜ் என்ற மற்றொரு நாவலில் கதாநாயகன் குடிபோதையில் தன் மனைவியை சூதாட்டத்தில் இழப்பது போல் கதைப் பாங்கை அமைத்து பெண்ணினத்தைத் தாழ்த்தியுள்ளாரே..?'' என்று தனக்கேற்பட்ட சந்தேகம் ஒன்றை வினவினாள். கீதா மிஸ் பதிலளிப்பதற்குள் முந்திரிக்கொட்டை போல் இந்த அலட்டல் லலிதகுமாரி எழுந்தாள். கேலி பொங்க வெண்ணிலாவைப் பார்த்து, ''அப்போது... மதுவிலக்கு கிடையாது இருந்திருந்தால் கதாநாயகன் குடித்திருக்க மாட்டார். குடிபோதையில் மனைவியை இழந்திருக்கவும் மாட்டார்,'' என்று அசட்டுத்தனமான பதில் ஒன்றைக் கூறி மொத்த வகுப்பே சிரிப்பலையில் அதிர்ந்தது. வெண்ணிலாவுக்கு சரியான கோபம் வந்துவிட்டது. நாம் எவ்வளவு சீரியஸாகக் கேட்கிறோம்... இவள் என்னடாவென்றால் விளையாட்டுத் தனமாய் உளறுகிறாளே என்ற வேகத்தில், ''உனது முட்டாள்தனத்தை பாடத்தில் காட்ட வேண்டாம்'' என்று கோபமாய் பதிலடி கொடுக்க... வகுப்பு முழுவதும் கேலியாய் லலிதாவைப் பார்த்தது. லலிதாவுக்கு ஒரே அவமானமாய்ப் போய் விட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்தாள். அன்று ஆரம்பித்தது வினை. அதற்குப் பின் இருவரும் எலியும் பூனயுமாய், கீரியும் பாம்புமாய் ஆகி விட்டார்கள். உடை விஷயத்தில்.... விதவிதமாய் சேலைகள் உடுத்துவதிலிருந்து படிப்பு, பாட்டு, டான்ஸ் கிளாஸ் என்று அனைத்திலுமே இருவருக்கும் போட்டிதான், வெண்ணிலா லலிதாவைப் போட்டியாய் எண்ணாவிட்டாலும், லலிதா அவளை சண்டைக்காரி போல், மட்டம் தட்ட சமயம் பார்த்து பொறாமை பிடித்து அலைந்தது வெண்ணிலாவுக்கு வருத்தத்தையே தந்தது. கல்லூரிப் படிப்பு முடிந்த கடைசி நாள், கல்லூரியின் 'ஃபேர் வெல் டே'யின்போது கூட வெண்ணிலாவே வலியப் போய் லலிதாவின் கைகளைப் பிடித்து அன்பாய் குலுக்கி, ''நடந்ததை மறந்து விடுவோம். நல்ல தோழிகளாகவே பிரிவோம்'' என்று கூறிய போது கைகளை உதறி முகத்தை ஓங்கி வெட்டி வெறுப்பாய் சென்றது இதே லலிதகுமாரிதான்.

அவள்தான் இன்று இப்படி ராஜாவின் அந்தரங்க காரியதரிசியாய் இன்னமும் அதே அலட்டல் சுந்தரியாய். விதி எப்படியெல்லாம் நம்மிடம் விளையாடுகிறது? என்று நினைத்து வியந்தபடி வெண்ணிலா தன்னைப் பார்த்து முகம் வெட்டி நின்ற லலிதகுமாரியை இன்னும் நன்றாய்ப் பார்த்தாள்.

அவளைப்போலவே லலிதாவுக்கும் இருபது வயது தான். முகத்தில் கொஞ்சம் சுருக்கம். லலிதகுமாரி சிவப்பு இல்லாவிட்டாலும் நல்ல மாநிறம்தான். ஆனால் அதற்கு வெள்ளை அடிப்பது போல் முகத்தில் ஒரு வண்டி பவுடரை, ஸ்நோ க்ரீம்களை தடவி வைத்திருந்தாள். காதுகளில் ஊசலாடும் சாவிகள், லேட்டஸ்ட் பேஷனாம். போதாக் குறைக்கு கண் இமைப் பகுதியில் புருவங்களில் தடவப்பட்ட ரோஸ் நிற மினுமினுப்பு லோஷன். லோ ஹிப்பில் ஷிபான் ஸேரி. சினிமா நடிகை போல் கட்டாயம் தொப்புள் சுழி தெரிய வேண்டும் என்பதில் சிரத்தை யெடுத்திருந்தாள். முந்தானையை ஏறக்குறைய விலக் கியே விட்டிருந்தாள். கடன்காரி... உடம்பு தெரிய உடுத்திக் கொண்டு வருவதற்கு உடுத்தாமலே வந்து எல்லோரையும் மயக்கலாமே... என்று வெண்ணிலா பழித்துக் கொண்டு மறுபுறம் கோபமாய் திரும்பிக் கொண்டாள்.

அவள் திரும்பி... அதை உணர்ந்து சொல்லி வைத் தாற்போல் லலிதா திரும்பினாள். வெண்ணிலாவை அளவெடுத்தாள். சாதாரணமான மேக்கப் நெற்றியில் சின்னத் திலகம். பளீரென சிரிக்கும் உதடுகள். அழகாய் பின்னிய கூந்தலில் ஒற்றை ரோஜா, அமர்த்தலாய் உடம்பைத் தழுவி கண்களுக்குக் குளுமையாய் அடக்க மாய் பச்சை நிற காட்டன் ஸேரி ஒன்று. இயற்கையாகவே உடம்போடு ஒட்டி விட்ட நளினம், இதமான பெண்மை, அமைதியான அழகு இதெல்லாம் பார்க்கப் பார்க்க... லலிதாவுக்கு ரொம்பவும் எரிச்சல் படுத்தியது. மேலும் வெண்ணிலாவைப் பார்த்து தனது வெந்த புண்ணில் வேல் ஏற்ற வேண்டாம் என்று படாரென அவளும்



வெட்டிக் கொண்டாள். அலட்டலாய் திரும்பிக் கொண் டாள்.

கண் முன் நடக்கும் அத்தனை கூத்தையும் திருவிழா கேளிக்கை போல் ராஜா ரசித்துப் பார்த்துக் கொண் டிருந்தவன் கூத்திற்கு மேலும் களை கட்ட விரும்பியவ னாய் இருவரையும் பார்த்து, ''உங்களை எதற்கு சேர்ந்து நிற்கச் சொன்னேன் தெரியுமா... உங்கள் இருவரில் யார் அழகு என்று கண்டு பிடிக்கத்தான். சொல்லுங்கள், உங்களில் யார் அழகு...?'' என்றான் அடக்க முடியாத குறும்புச் சிரிப்புடன்.

## 6

ராஜா அவர்கள் இருவரையும் நிற்க வைத்து, 'யார் அழகு..? சொல்லுங்கள்!' என்று குறும்பாய் கேட்டதுமே வெண்ணிலாவுக்குப் புரிந்து விட்டது. ராஜா கவனித்து விட்டான். அவர்கள் இருவருக்கும் ஏதோ ஒருவித ஊடல் இருப்பதை அறிந்து கொண்டான், அதான் இப்படிச் சீண்டி விளையாடுகிறான் என்று. அதனால் இந்த சூழ்நிலையில் இருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தாள்.

ஆனால் லலிதாவோ இதையெல்லாம் அறியாதவளாய் அவளது மரமண்டைக்குப் புரியாதது போல் உடம்பை ஒரு குலுக்கு குலுக்கி சேலைத் தலைப்பையெல்லாம் சரி செய்து கொண்டு பெரிய அழகு ராணி போல் இடுப்பை

ஒடித்துப் போஸ் கொடுத்தாள். தன் அத்தனை பற்களையும் வெளியே காட்டி ராஜாவை நோக்கிச் சிரித்தாள்.

''ராஜா... நீங்களே... சொல்லுங்கள்... யார் அழகு...?'' என்று கண் சிமிட்டினாள். நெஞ்சை நிமிர்த்திக் கொண்டாள்.

லலிதா ஏதோ அழகுப் போட்டி நடப்பது போலவும் அதற்கு ராஜாவை நடுவராய் வைத்துத் தீர்ப்பு வழங்கும் படி பேசியதைக் கண்டதும் வெண்ணிலாவுக்கு குப்பென்றாகி விட்டது. சரிதான் இந்த அலட்டல் லலிதாவுக்கு என்றுதான் மூளை இருந்தது. அவன் சீண்டி விளையாடுகிறான் என்பதைக்கூட தெரிந்து கொள்ள முடியாதவளாய் உடம்பை இந்தக் குலுக்கு குலுக்குகிறாளே...? என்று நினைத்தவள் ராஜா தன் காந்தக் கண்களால் தன்னையே ஊடுருவது போல் மேலிருந்து கீழ்வரை பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டாள். ராஜா உங்களில் யார் அழகு என்பதைச் சொல்லப் போகிறேன் என்பது போல் இருவரையும் உருட்ட உருட்டப் பார்த்தவன், ''சொல்லட்டுமா.. சொல்லிவிடட்டுமா..?'' என்றபடி இருவரையும் ஆழம் விடுவது போல் பார்த்தான். வெண்ணிலாவால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. ''வேண்டாம் சார்... நீங்கள் சொல்ல வேண்டாம். நானே... சொல்லி விடுகிறேன். எங்களில் லலிதாதான் அழகு! அழகு ராணி..! போதுமா..?'' என்றாள் படு அவசரத்துடன் ஒருவித படபடப்புடன்.

அவளுக்கு எங்கே, ராஜா தன் வாயால் லலிதாதான் அழகு... என்று சொல்லிவிடக் கூடாதே என்ற பயம். அப்படியொரு வார்த்தை அவன் வாயிலிருந்து வந்து



விட்டால்.. அதை வாழ்நாள் முழுவதும் அவளால் தாங்கிக் கொள்ள முடியாது போல் கூட வெண்ணிலாவுக்குத் தோன்றிற்று. அதனாலே முந்திக் கொண்டாள். அவன் ராஜா யார் அழகு என்பதைச் சொல்லுவதற்குள் தானே முந்திக் கொண்டு 'அழகு ராணி' பட்டத்திற்காக தலை சிரித்தாடும் இந்த அலட்டல் லலிதாவுக்கு அந்த அழகு கிரீடத்தை சூட்டி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் அல்லவா...? அப்படியே சூட்டி விட்டாள். ஆனால் கர்வக்காரி லலிதாவுக்கு அதெல்லாம் தெரிந்தால்தானே..? அவள் நிஜமாகவே நம்பி விட்டாள். தனது மேக்கப் மற்றும் மினுக்கு சமாச்சாரங்களுக்கு முன் வெண்ணிலாவின் இயற்கையான அழகு எடுபடாது என்ற அபார நம்பிக்கை அவளுக்கு. கர்வமான முகத்தை மேலும் தூக்கி வைத்துக் கொண்டாள். சந்தோஷத்தில் வெடித்து விடும் போல் அது இருந்தது. இதையெல்லாம் கண்ட வெண்ணிலாவுக்குத் திரும்பவும் சிரிப்பு வந்து விட்டது. அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டாள். ராஜாவும் லலிதாவின் செய்கை எல்லாவற்றையும் கண்டு பொறுக்க முடியாமல் சிரிப்பை ஆரம்பித்தான்.

அவர்கள் இருவரும் ஒரு சேர சிரிப்பதைக் கண்டு லலிதா திடுக்கிட்டாள். ''ஏன் சிரிக்கிறீர்கள்... நிஜமாகவே நான்தானே... அழகு...?'' என்றாள் அடங்காத அலட்டலுடன்.

''ஆமாம்... ஆமாம்... நீதான்... அழகு...! சந்தேகமில்லை... அழகு ராணி... நீதான்...!'' என்றபடி ராஜா லலிதாவை நோக்கிச் சொல்லியவன் திரும்பி திடுக்கிட்ட வெண்ணிலாவைப் பார்த்து கேலி பொங்க, ''என்ன வெண்ணிலா நான் சொன்னது சரிதானே...?'' என்று கண்

சிமிட்டலுடன் சொல்ல... வெண்ணிலா பயம் நீங்கி சிரித்தாள். லலிதாவும், இருவரும் தன்னைக் கேலிப் பொருளாய் ஆக்கிவிட்டதை கொஞ்சமும் உணராமல் நன்றி சொல்வது போல் கைகளைக் கூப்பிக் கொண்டாள்

''உண்மையைச் சொன்னதற்கு... ரொம்பவும் நன்றி ராஜா சார்...!'' என்றபடி திரும்பவும் ஒரு தளுக்கு குலுக்கு நடை போட்டு நடந்தவள் வெண்ணிலா பக்கம் வந்ததும் வேண்டுமென்றே ஒரு அலட்டல் வெட்டு வெட்டி அந்த ரூமை விட்டு வெளியேறினாள்.

அவள் வெளியேறும்வரை சிரித்துக் கொண்டிருந்த ராஜாவும் வெண்ணிலாவும் லலிதா வெளியேறியதும் டக்கென சிரிப்பை நிறுத்தி விட்டனர். மௌனம் நிலவியது.

ஒருவரையொருவர் ஆழமாய் விழுங்கும் பார்வை பார்த்தனர்.

ராஜாவின் காந்தக் கண்களின் சக்தியைத் தாங்க முடியாதவளாய் முகம் சிவக்க வெண்ணிலா குனிந்து கொண்டாள். அவளை மேலும் குங்குமமாய்ச் சிவக்க வைத்தது ராஜாவின் குரல்.

''வெண்ணிலா நிஜமாகவே சொல்கிறேன்... அழகு நீதான்.. பேரழகி நீதான்...!'' என்றான் மெலிதாய் தேன் தடவிய குரலில். ராஜா நிதானமாய்ச் சொன்னான். வெண்ணிலாவுக்கு ஜிவ்வென பறப்பது போல் இருந்தது. இருந்தும் காது கேளாதவள் போல் அவனது வார்த்தை களைத் திரும்பவும் கேட்க விரும்புபவளாய் ''என்ன.. சொன்னீர்கள்.. சார்...?'' என்றாள் அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு.



ராஜா உடன் பதில் சொல்லவில்லை. குறுகுறுப்பு பொங்க அவளையே பார்த்தான். ''நான்... சொன்னது... கேட்கவில்லை.... காதில்... விழவில்லை... அப்படித் தானே?''

அவன் தனது காது கேளாதது போல் நடித்ததைப் புரிந்து கொண்டான் என்பதை வெண்ணிலா உணர்ந்தாலும் நடிப்பைத் தொடர்ந்தவளாய், ''கேட்கவில்லை.. சார்'' என்றாள் முகத்தைக் கேள்விக் குறியாக்கியபடி.

ராஜா மர்மமான சிரிப்பொன்றை உதிர விட்டவன், ''கேட்காவிட்டால் பரவாயில்லை. இப்போது வேண்டாம். இன்னொரு முறை சமயம் வரட்டும். சொல்கிறேன்... நீ... போகலாம்...!'' என்றான் வந்த சிரிப்பை அடக்கியபடி. அவள் தவிப்பை ரசித்துப் பார்த்தபடி.

## 7

அன்று காலையில் வந்ததில் இருந்தே வெண்ணிலா வுக்கு உற்சாகமாய் இருந்தது. ஏன் என்று தெரியவில்லை. ஒரே குஷி. மனதில் இனம் புரியா உணர்வு. கவிதா அவளையே பார்த்துக் கண்டு பிடித்தவள் ''என்னடி விஷயம்...?'' என்றாள்.

''எது..?'' என்று கேட்டவள் அவசரமாய், ''ஒன்று மில்லை...!'' என்று அவளே பதிலும் சொல்லிக் கொண் டாள். கவிதா ஆச்சரியப்பட்டுக் கொண்டவள், ''போகட்

டும். மினுக்குக்காரியைப் பார்த்தாயா...? பேசினாயா...?'' என்றாள்.

ஓ...! என்றபடி வெண்ணிலா சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

''கவிதா எனக்கு அவளை முன்பே தெரியும்...!'' என்றாள்.

''முன்பே தெரியுமா...?''

''ஆம்... நானும்... அவளும் ஒரே கல்லூரியில்... ஒரே வகுப்பில்.. ஒன்றாய்ப் படித்தவர்கள்...''

''என்ன... உன் கல்லூரித் தோழியா?''

''கல்லூரித் தோழிதான்! நான் அப்படித்தான் அவளை நினைக்கிறேன். எண்ணுகிறேன். ஆனால் அவள் தான் என்னை எதிரி போல் பாவித்துக் கொண்டிருக்கிறாள்...''

''புரியவில்லை...! என்ன சொல்கிறாய்... எதிரியாகவா...?''

என்று வியந்த கவிதாவிடம் வெண்ணிலா கல்லூரி விவரங்களை, முன்பு அவர்களுக்குள் நடந்த சண்டைகளை விவரமாய்ச் சொல்லி முடித்தாள். ''என்னை அவளுடைய சண்டைக்காரி போல் எண்ணுவதே அவளது குறிக்கோள். இங்கும் அதை நிரூபித்து விட்டாள் கவிதா...'' என்றபடி ராஜாவின் ரூமில் நடந்த 'அழகு ராணி' போட்டியைப் பற்றியும் வெண்ணிலா விவரித்தாள்.

கவிதாவின் ஆச்சரியம் பன்மடங்காகியது. ''அப்படியானால் உனக்கு... ரொம்பவும் ஆபத்து காத்திருக்கிறது வெண்ணிலா...'' என்றாள் கவிதா வருத்தம் தோய்ந்த குரலில்.

''ஆபத்தா...? என்ன சொல்கிறாய் கவிதா...?''



''ஆபத்துதான்...! இந்த லலிதா நம் முதலாளி ராஜாவின் அந்தரங்க காரியதரிசி மட்டுமல்ல. 'அந்தரங்கக் காதலியும்' கூட!''

வாழைப்பழத்தில் ஊசியாய் வார்த்தைகளைக் கவிதா ஏத்தினாள்.

''என்ன... அந்தரங்க... காதலியா?'' அழாதக் குறையாய்க் கேட்டாள் வெண்ணிலா. அவள் முகம் அப்படியே கூம்பி விட்டது. அவள் சந்தோஷம் போன இடம் தெரியவில்லை. தலையில் இடி விழுந்து விட்ட சோகத்தோடு இருந்தவளை மேலும் சோகமாக்கியது கவிதாவின் வார்த்தைகள்.

''காதலிதான்...! அதில் சந்தேகமில்லை... வெண்ணிலா!'' என்றபடி கவிதா நீளமாய் மூச்சிழுத்துப் பிடித்தவள் தொடர்ந்து,

''இந்த லலிதா வேலைக்குச் சேர்ந்தே மூன்றே மாதத்தில் எப்படியோ நம் முதலாளியின் அந்தரங்கக் காரியதரிசி ஆகிவிட்டாள். அது முதல் அவள் போக்கே மாறி விட்டது. தினம் விதவிதமாய் உடுத்தி வருவாள். கவர்ச்சி பொங்க பாதி உடம்பு தெரியும்படி அலட்டலாய் அவளது அலங்காரம் இருக்கும். இது போதாது நம் முதலாளிக்கு..? வெகு சுளுவில் இவள் விரித்த வலையில் விழுந்து விட்டார். இவளைக் காதலிக்க ஆரம்பித்து விட்டார்...''

''நிஜமாகவா...? ராஜா காதலிக்க ஆரம்பித்து விட்டாரா...?''

அடங்காத குரலில் கேட்டவளை அமர்த்தலாய்ப் பார்த்தாள் கவிதா.

''பிறகென்ன...? நானே... எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன். மணிக்கணக்காய் பேசுவார்கள்.

சிரிப்பார்கள். சேர்ந்தே சினிமா நாடகம் என்று செல்வார்கள். ஒவ்வொரு முறையும் ராஜாவே வலியப் போய் லலிதாவைத் தன் காரிலேற்றிக் கொண்டு ஊர் சுற்றுவதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன்.''

அலுவலகப் பணியாளர், ''உங்களை எம்.டி. வரச் சொன்னார் அம்மா...'' என்றார்.

வெண்ணிலா சுதாரித்து முகத்தை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டு பவ்யமாய் ராஜாவின் அறைக்குள் நுழைந்தாள். நுழைந்தவளை... அவள் கண்ட முதல் காட்சியே முகம் கோண வைத்தது. ஸ்டைலான ராஜாவின் குஷன் சேருக்குப் பக்கத்தில் அவனுக்கு வெகு அருகில் அவனை இடிக்காத குறையாய் லலிதா! கொஞ்சம் விட்டால் அவன் மடியில் உட்கார்ந்து விடுவாள் போல் இருந்தது. சாகசக்காரி என்னமாய் மயக்கி விட்டாள்? எவ்வளவு சுளுவாய்... உடம்பைக் குலுக்கி மினுக்கி காரியத்தைச் சாதித்து விட்டாள்...? இவளையெல்லாம் அப்படியே... கொண்டு போய்... கொதிக்கும் உலையில் அல்லவா வீசியெறிய வேண்டும்...? மின்னலாய் சினம் தாக்கக் கோபப்பட்டவள் தன்னைத் தானே நொந்து கொண்டு குனிந்து கொண்டாள். நான் ஏன் இப்படிச் சிந்திக்க வேண்டும்...? யார் எப்படிப் போனால் எனக்கென்ன? யார் யாரைக் காதலித்தால் எனக்கென்ன...? நாம் நம் கடமையைச் செய்வோம்...! என்றபடி வெண்ணிலா நிமிர்ந்தவள், ''கூப்பிட்டீங்களா... சார்...?'' என்றாள் இயந்திர கதியாய் ராஜாவைப் பார்த்தபடி.

மனதில் பலவாறான எண்ணங்கள் ஓட ஆச்சரியமாகப் பார்த்தவளை அவனும் ஆச்சரியமாகப் பார்த்தான். அந்த ஆச்சரியத்தில் அவளை ரசித்துக் கொண்டே, ''வெண்ணிலா மறந்தே போய்விட்டது எதற்காக உங்களை அழைத்தேன்?'' என்றான் ஞாபகமறதிக்காரன் போல்.



அவன் அப்படிச் சொன்னதும் வெண்ணிலாவுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. கோவைப் பழமாய் சிவந்து விட்ட முகத்துடன் சின்ன பிஞ்சு உதடுகள் படபடக்க அவனைப் பார்த்தாள். அவளையறியாமல் வார்த்தைகள் வெளிவந்துவிட்டது. ''பக்கத்தில் காதலி இருந்தால்... எல்லாம் மறந்துதான் போகும் சார்...!'' என்றாள் அனல் பறக்கும் பெருமூச்சோடு.

உதடு துடித்துச் சொன்னவளை அடங்காத அதிசயத்துடன் பார்த்தான் ராஜா. 'ஓ...!' என்றபடி வாய் பிளந்து விட்டான். அதுதானா... விஷயம்...? அதுதானா... சங்கதி...? அதற்குத்தானா இந்தக் கோபம்...? என்றெல்லாம் நினைப்பு ஓட அவனையறியாமல் சிரிப்பு வந்து விட்டது. கடகடவெனச் சிரித்தான்.

அவன் அப்படிச் சிரிப்பதைப் பார்த்ததும் வெண்ணிலாவுக்கே சந்தேகம் வந்து விட்டது. ஒருவேளை லலிதா அவள் நினைப்பது போல் அவனது காதலி இல்லையோ? லலிதாதான் இருவர் பழக்கத்தை வைத்து காதலர்கள் என்று சொல்லிவிட்டாளோ? என்றெல்லாம் சந்தேகம் பொங்க அவன் மறுத்து விடுவானோ? என்ற நப்பாசையில் அவன் முகத்தையே ஆவலாய்ப் பார்த்தாள்.

ராஜாவே, ''வெண்ணிலா, நீ.. லலிதாவைத்தானே சொல்கிறாய். அவள்... என் காதலிதான்...!'' என்றான் அழுத்தந்திருத்தமான குரலில்.

# 8

அடுத்து வந்த ஒரு வாரம் வெண்ணிலாவின் போக்கே சரியில்லை. எதிலும் பற்றில்லாதவளாய் அலுவலகம் போனாள். வந்தாள். கூம்பிய மலராய் அவள் முகம் வாடிப் போய் விட்டது. அன்று அலுவலகத்தில் நுழைந்தவளை உடனடியாய் ராஜா அழைத்தான்.

ராஜா வெண்ணிலாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே வைத்திருந்த பார்வையை விலக்காமலே சொன்னான்.

''லலிதா நான் கட்டிக்கொள்ளப் போகிற காதலி அல்ல...'' என்று சொன்னதும் வார்த்தைகள் வெண்ணிலாவை ஒரு உலுக்கு உலுக்கி அவள் முகத்தில் திடீர் பிரகாசம் ஒன்று தோன்றுவதைக் கூர்ந்து கவனித்தான். ''எனக்கு உன்னைத் தெரியும் நான் கண்டு பிடித்து விட்டேன்!'' என்கிற பூரண உணர்வு அவன் முகத்தில் சந்தோஷமாய் அரும்பத் தொடங்கியது.

இது எதுவும் புரியாதவளாய் வெண்ணிலா அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தவள், ''என்ன சொல்கிறீர்கள் சார்?'' நம்ப முடியாதவளாய் கேட்டாள். ராஜா சிரித்தான். திரும்பவும் உறுதியான குரலில், ''லலிதா நான் கட்டிக் கொள்ளப் போகிற காதலி அல்ல. வெறும் பொழுது போக்கு காதலி... அவ்வளவுதான்!'' என்றான் பெரிய விளக்கம் கொடுத்தது போல்.



''பொழுதுபோக்குக் காதலியா...?''

ராஜா திரும்பி தலை சாய்ந்து படபடத்த கண்களுடன் தவிப்பாய் இருந்தவளைப் பார்த்தான். ''புரியும்படியே சொல்கிறேன்... வெண்ணிலா... நான் முன்பு ஒருமுறை அலுவலகப் பெண்களை... குறிப்பிட்டுப் பேசியது உனக்கு ஞாபகம் இருக்கிறதா..?'' என்றான்.

''ஞாபகம் இருக்கிறது... சார்... கலியுகக் கற்புக்கரசிகள் என்று பட்டமெல்லாம் வேறு கொடுத்தீர்களே...?''

''ரொம்பவும் சரி...! அதேதான்!'' கரெக்டான விஷயத்தை அவள் பிடித்து விட்டது போல் ராஜா மலர்ந்தவன்,

''வெண்ணிலா நான் குறிப்பிட்ட இந்த 'கலியுகக் கற்புக்கரசிகள்' ரகம்தான் இந்த லலிதா. அதனால்தான் காதல் செய்கிறேன். ஆனால் இந்தக் காதல் காதலாய்த்தான் இருக்கும். நிச்சயம் கல்யாணத்தில் போய் முடியாது... அது நிச்சயம் வெண்ணிலா...!''

''அப்படியானால்... லலிதாவை... காதலித்து கல்யாணம் செய்யாமல் ஏமாற்றப் போகிறீர்கள்... அப்படித்தானே?'' உரத்த குரலில் கேட்டவளைப் பார்த்து அடக்க முடியாமல் ராஜா சிரித்தான்.

''ஆமாம் ஏமாற்றப் போகிறேன். காதலிப்பது போல், அவளைக் காதல் செய்வது போல் நடித்து, ஏமாற்றப் போகிறேன்...!'' என்ற அவனது பதில் வெண்ணிலாவுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

''எதற்கு.. சார்... இந்த நாடகம்? ஏன் இப்படி நீங்கள் நடக்க வேண்டும்? ஒரு கம்பெனியின் முதலாளி செய்கிற காரியமா இது...?'' துடித்துப் போய் கேட்டவளை மேலே பேச விடாது கைகளை உயர்த்தி அவசரமாய்த் தடுத்தான் ராஜா.

''பொறு... பொறு... வெண்ணிலா...!'' என்றவன், ''நான் அப்படிச் செய்யக் காரணமிருக்கிறது. அதற்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது... சமயம்... வரட்டும்... உன்னிடம் விளக்கமாகச் சொல்கிறேன்... இப்போது வேண்டாம்...!'' என்றபடி அவசரமாய் பேச்சை முடித்தான்.

கொஞ்ச நேரம் அமைதி காத்தவன், ''சரி... வெண் ணிலா நீ... போகலாம்!'' என்றான் சர்வ சாதாரணமாய்.

வெண்ணிலாவுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. ஒரு வித வித்தியாசமான சுழற்சி அவளை ஆட்கொண்டு விட்டது. குழப்பமாகவும் இருந்தது. எதையும் வெளிக்காட்டாதவளாய் ''சரி... சார்!'' என்று பயத்துடன் வெளிவந்தாள். இருக்கையில் வந்து உட்கார்ந் தவள் நிதானமாய் யோசிக்க ஆரம்பித்தாள்.

லலிதாவைக் காதலிப்பது போல் நடிக்கிறாராம்... எவ் வளவு பெரிய விஷயம்...? எவ்வளவு பெரிய குற்றம்...? எல்லாவற்றையும் செய்துவிட்டு அதற்கு ஒரு விளக்கம் வேறு கொடுக்கிறானே...? இவனை என்ன வகையில் சேர்ப்பது...? லலிதாவின் மேல் அவனுக்கு ஆசை இல்லையா? அவளைக் காதலிப்பது வெறும் நடிப்பா? இதில் எப்படி எந்த அர்த்தம் கொள்வது?

நினைத்து நினைத்து வெண்ணிலா குழம்பினாள். அவளுக்கு ராஜாவைப் பற்றி ராஜாவின் குணத்தைப் பற்றி ஒரு முடிவிற்கு வர முடியவில்லை. ஒரு கணம் அவன் மீது அளவு கடந்த வெறுப்பு கூட தோன்றியது. மறுகணமே அவனது குழிச்சிரிப்பும், காந்தமான பார்வையும் அந்த குறும்பான உற்சாகமும் மின்னலாய்த் தோன்றி அவளைத் தடுமாற வைத்தது. ஒருவேளை லலிதாவின் அகம்பாவ குணத்தை மினுக்குத்தனத்தை



அடக்க இப்படிக் காதலிப்பது போல் ராஜா நடிக்கலாமோ? என்று கூட எண்ணம் வந்தது. ஆனால் அதற்கு போயும் போயும் காதல் வழியையா காதல் வேஷத்தையா ராஜா போட வேண்டும்...? என்று நினைத்தாள்.

அன்று இரவு ரூமிற்கு வந்தவளுக்கும் தூக்கம் வந்த பாடில்லை. நினைவலைகள் சுற்றிச் சுற்றி வந்தன. ராஜாவின் 'காதல்' செயல் அவளை ரொம்பவும் யோசிக்க வைத்தது. அவன் வாயாலே சொல்லிவிட்டான். லலிதாவை என்னவோ... எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். ஆனால்... அவன்... காதலிப்பது... காதலிக்க தேர்ந்தெடுத் திருப்பது லலிதாவைத்தானே..? ஏமாற்றப் போகிறேன் என்று சொன்னாலும்... லலிதாவைத்தானே நினைத்து மனத்தில் காதலித்துக் கொண்டிருக்கிறான்? அப்படி அவன் மனதில் இன்னொரு பெண்ணுக்கு இடம் கொடுத்து விட்ட பிறகு... அவனை.. நினைத்து.. என்ன பயன்? அவனுக்காக மனதில்... கோட்டை கட்டி... காதலித்து.. அவனையே மணக்க நினைப்பது... எவ்வளவு பைத்தியக் காரத்தனம்...? வெண்ணிலாவினுள் வலுவாய் சில எண் ணங்கள் வலுப்பெற ஆரம்பித்தது. வெண்ணிலா தீர்மான மாய் ஒரு முடிவிற்கு வர ஆரம்பித்தாள்.

## 9

அடுத்த நாள் முதல் அலுவலகத்திற்கு வந்த வெண் ணிலா முற்றிலும் மாறியிருந்தாள். ராஜாவைச் சந்திப்பதை

அவன் ரூமிற்குச் செல்வதைக் கூடுமானவரை தவிர்த்தாள். போக வேண்டிய அவசியம் வந்தபோது கூட கவிதாவை அழைத்து, "கொஞ்சம் வேலை இருக்கிறது... நீயே முதலாளியிடம் இந்த பைலை கொடுத்து விடேன்..." சொல்லி நழுவி விட்டாள். மூன்று நான்கு நாட்கள் இப்படியே தொடர்ந்தது. ராஜாவும் வெண்ணிலாவின் இந்த 'அதிரடி நடவடிக்கையைப்' புரிந்து கொண்டான். அவனும் அவளைச் சந்திக்க... அவளுடன் பேச எந்த வலுக்கட்டாயச் சந்தர்ப்பம் சூழ்நிலை ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

லலிதா முன்பு போலவே மினுக்கிக் குலுக்கிக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தாள். அந்த அலட்டல் கூடிய மாதிரியே தெரிந்தது தவிர குறைந்த மாதிரி தெரியவில்லை. மேலும் முதலாளிக்கு தான் ரொம்ப நெருங்கியவளாய் இருப்பதாலோ என்னவோ வெண்ணிலாவுடனோ சக பெண் ஊழியர்களுடனோ பேசுவதைக் 'கௌரவக்' குறைச்சலாய் கருதினாள். அதனாலே அவள் ரெண்டு வார்த்தை பேசினாலும் அதிகார தோரணையாய் ஆணவக் கர்ஜனையாகத்தான் ஒலித்தது. வெண்ணிலாவுக்கு அவளை, அவள் பண்ணும் அலட்டல்களைப் பார்க்கும் போது அடக்க முடியாத சிரிப்புதான் வரும். மறுகணம் ராஜாவை காதலிக்கிறாள். அவன் இவளை ஏமாற்றப் போகிறான் என்ற எண்ணம் வந்து கழிவிரக்கத்தையும் உண்டு பண்ணும். என்ன இருந்தாலும் லலிதா பாவம் தான் என்று எண்ணுவாள். அவள் அப்படி எண்ணிய மறுகணமே ராஜாவின் நினைப்பு அவளுள் வந்து விடும். அந்தக் குழிச் சிரிப்பு, காந்தக் கண்கள், குறும்புப் புன்னகை திரும்பத் திரும்ப அவளுள் தோன்றும். என்னையா மறக்க நினைக்கிறாய்? என்னையா ஒதுக்கப்



பார்க்கிறாய்..? என்று அவள் நினைவலைகளைச் சீண்டும். கேலி பேசும். செய்வதறியாமல்... நினைப்புகளை மாற்ற முடியாமல் தவிக்க ஆரம்பிப்பாள் வெண்ணிலா.

இரவு ஹாஸ்டல் வந்து படுத்தாலும் அதே கதைதான். அவள் மறந்திருந்தாலும் பக்கத்து ரூம் டிரான்ஸிஸ்டர் வழியாக 'இரவின் மடியில்' பாடல் நிகழ்ச்சி ஒலித்து அவளைத் தவிக்க வைத்துவிடும். நேற்று கூட இப்படித்தான்! கவலைகள் எல்லாம் மறந்து படுத்தவளை அந்த டிரான்ஸிஸ்டர் பாடல் சீண்டி விட்டது.

"உன்னைக் காணாத.. கண்ணும்... கண்ணல்ல...
உன்னை... எண்ணாத நெஞ்சும்... நெஞ்சல்ல...

நீ சொல்லாத சொல்லும்... சொல்லல்...ல....

நீயில்லாத... நானும்... நானல்ல!"

சுசீலாவின் பிசிறில்லாத கம்பீரக்குரல் அவள் இதயத்தைத் துளைத்து ராஜாவை அவள் கண்களுக்குள் கொண்டு வந்து விட்டது. அதற்குப் பின் பாட்டு ஒலித்து முடிந்து விட்டது. ஆனால் வெண்ணிலா விடவில்லை,. அந்தப் பாட்டை அவளது உதடுகள் முணுமுணுத்துக் கொண்டே இருந்தன. கண்களில் அவளையறியாமலே நீர் கோர்த்துக் கொண்டு வழிய ஆரம்பித்தது. எவ்வளவு நேரம் அப்படியிருந்தாள்... எப்போது தூங்கிப் போனாள் என்று அவளுக்கே தெரியாது. காலையில் எழுந்ததும் லேசான தலைவலியை உணர்ந்து இரவு தான் நெடு நேரம் தூங்கவில்லை என்பது அவள் ஞாபகத்திற்கு வந்தது. தயாராய் ஷெல்பில் வைத்திருக்கும் தலைவலி மாத்திரையொன்றைப் போட்டவாறு அலுவலகத்திற்குக் கிளம்ப ஆரம்பித்தாள்.

அலுவலகத்திலும் அவளால் முன்பு போல் ஈடுபாட்டுடன் இருக்க முடியவில்லை. எதைப் பார்த்தாலும் எந்த வேலையைச் செய்தாலும் ஒருவித எரிச்சல் உணர்வே அவளுள் ஏற்பட்டது. முன்பு அவள் விரும்பிச் செய்தவைகள் எல்லாம் அவள் ரசித்துப் பார்த்தவைகள் எல்லாம் எதிரான உணர்வுகளையே ஏற்படுத்தியது. கவிதாவுடன் கூட வழக்கம் போல் அவளால் சரிவர பேசவில்லை. கவனித்த கவிதாவும் பொறுக்க முடியாமல் கேட்டு விட்டாள்.

''என்னடி... ஆச்சு...'' திடீர்ன்னு எதையோ பறி கொடுத்தவ மாதிரி இருக்கிற..?'' என்றவளை, ''ஒன்றுமில்லை! கவிதா, கொஞ்சம் தலைவலி அவ்வளவுதான்'' என்று கூறிச் சிரித்து சமாளித்தாள்.

தொடர்ந்து ஒரு வாரம் ஓடியது. வெண்ணிலாவின் நிலைமையில் போக்கில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. மனதிற்குள் ஒன்றை நினைத்து வருத்தப்படுவதும் வெளியே எதையும் காட்டாமல் இறுக்கமாய் இருப்பதுமாகவே சுபாவத்தை வைத்திருந்தாள். ராஜாவை அவள் பார்த்துப் பத்து நாட்கள் ஆகிவிட்டது. எப்படியோ சந்தர்ப்பங்களையெல்லாம் வேண்டுமென்றே தவிர்த்து அவன் முகத்தைப் பார்க்கவே கூடாது என்ற கொள்கையை சாதித்தும் விட்டாள். அதில் அவளுக்கு ஒரு ஆச்சரியமும் ஏற்பட்டது. நாம்தான் தவிர்த்து விட்டோம். ராஜாவாவது முயற்சித்திருக்கலாம் அல்லவா...? அவன் நினைத்தால்... 'சூபர்வைசிங்' செய்வது போல் அவளது செக்ஷனுக்கு வந்தால் போதும்... எளிதில் அவளைப் பார்த்து விடலாம்.

ஆனால்... அவனும் முயற்சி செய்யவில்லையே? அவளைப் பார்க்க நினைக்கவில்லையே...? என்ற சந்தேகம் எழுந்து அவளுக்கு திடீர் வருத்தத்தையும் உண்டு பண்ணியது. நம்மை எப்ப பார்த்தாலும் 'அழகு! அழகு!' என்று வாய்கிழியப் பேசிய ராஜா அசடு வழிந்ததெல்லாம் வெறும் வார்த்தைகள்தானா...?



அந்த மினுக்குக்காரி லலிதா முன்... என்னைப் பற்றிய நினைப்புகள் எல்லாம் மறந்து போயிற்றா..? என்ற கவலையும் அவளுள் அதிகமாகியது.

அவளது கவலைகளுக்கெல்லாம் சிகரம் வைப்பது போல் கவிதா விஷயமொன்றைப் போட்டு உடைத்தாள். ''உனக்கு விஷயம் தெரியாதா வெண்ணிலா?'' என்றாள்.

''என்ன கவிதா...?''

''நம்... முதலாளி ராஜா... பிசினஸ் டூர் போயிருக்கிறார்... வர... இன்னும் இருபது நாள் ஆகுமாம். அதனால்தான் நம் 'அலட்டல்' லலிதாவுக்கு வேலையில்லை. பாவம்... அவள் தவிப்பால் என்னமாய் வாடியிருக்கிறது பார்...!'' சொன்ன கவிதா விஷயத்தைக் கேட்டு டக்கென வாடும் வெண்ணிலாவின் முகத்தைக் கவனிக்கவில்லை. என்ன இதுபது நாளா...? பெருமூச்சு விட்டவள், 'பத்து நாளுக்கே... இவ்வளவு... தவித்துப் போய் ஆடிவிட்டோம்...! பார்க்காமல் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்!' என்று நினைத்து பயந்தும் போனாள். கூடவே, 'ராஜா என்னை கட்டிய கணவனா நினைத்து உருகுவதற்கு, கண்கண்ட காதலனா பார்த்து மகிழ்வதற்கு..?' என்ற சினமும் வந்தது. ஆனால் நாளாக நாளாக அவள் கோபம் போன இடம் தெரியவில்லை. அவனைப் பார்க்க மாட்டோமா என்ற ஏக்கம் அவளுள் அதிகமாயிற்று.

அவளது ஏக்கத்தை உள்ளூர இருந்த ஆசையை ராஜா சரியாய் புரிந்து கொண்டானோ... என்னவோ... டூர் முடிந்து

அலுவலகம் திரும்பியவன் முதற்காரியமாய் அவளை ரூமிற்கு அழைத்தான். கண் விரித்து இமைக்க மறந்து பார்த்தவளை... அப்படியே இறுகக் கட்டியணைத்துக் கொண்டான்.

# 10

ராஜா வந்ததும் வராததுமாய், முதற்காரியமாய், ரூமிற்கு வந்தவளை இறுகக் கட்டியணைத்துக் கொண்டான். அவனது கைகள் மலைப் பாம்பாய் அவளைச் சுற்றி மேனியோடு இறுக்கின. வெண்ணிலாவும் அந்த அணைப்பில் ஒரு கணம் மெய்மறந்து போனாள். சுயநினைவு அற்றுப் போயிற்று. அழுது அடம் பிடித்த குழந்தைக்கு ஆசைப்பட்ட பொருள் கிடைத்து விட்டது போல் அவன் கரங்களில் தன்னிலை மறந்து துவண்டாள். ராஜாவும் விடவில்லை. அவளை அப்படியே அணைத்துத் தன்னோடு ஐக்கியப்படுத்தியவன்... அவள் மலர் முகத்தை நிமிர்த்தி முகம் வைத்து உரச ஆரம்பித்தான். அவனது உதடுகள் படபடக்கும் அவளது ரோஜா இதழ்களைத் தேடி கண்டுபிடித்து முத்தமிட்டு, 'பார்! என்னமாய் தவித்து விட்டாய்?' என்று முணங்கவும் செய்தது.

அந்த அழுத்தமான முத்தத்தில் சிலிர்த்துப் போன வெண்ணிலாவுக்கு... அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் சுயநினைவு வர ஆரம்பித்தது. மெல்ல தன் உணர்வுக்குத் திரும்பியவள் திடுக்கிட்டும் போனாள். காதல் ரசம்



சொட்டச் சொட்ட... இறுக்கமாய்... காதலன் அணைப்பில்... மெய் மறந்து கொண்டு... அவன்... என்ன காதலனா...? சினமாய் எண்ணம் தோன்றியவளாய் சுதாரித்துக் கொண்டு மீண்டாள். அவனது கரங்களை விலக்கினாள். ராஜாவும் அவளது நினைவு திரும்பியதைக் கண்டு பிடிகளைத் தளர்த்தியவன் உடனே அவளை வெளியே விட்டான். திகைத்து, கொஞ்சம் அவமானமும் கோபமுமாய் பார்த்தவளை நோக்கி குறும்புச் சிரிப்பு சிரித்தான். 'உணர்ச்சிகளில் ஒருகணம் தன் வசம் இழந்து விட்டோமே..' என்று அவள் தவித்து வருந்துவதை வெகுவாய் ரசித்தான். பின் மெல்லிய குரலில், ''வருந்தாதே வெண்ணிலா... நடந்தது எல்லாம் சரிதான்!'' என்று சமாதானமும் சொன்னான்.

''எது... சரி... என்ன... இது நாகரிகம்...? இப்படியா... வேலை... பார்க்கும்... ஒருத்தியை... அணைத்துக் கொள்வது...?'' தட்டுத் தடுமாறிக் கேட்டவளைப் பார்த்து விடாமல் சிரித்தான்.

வெண்ணிலா விடாது திரும்பவும் கேட்டு சினம் பொங்க பார்க்கவே... அவள் பக்கத்தில் வந்து நேருக்கு நேர் பார்த்துக் கண்களை ஊடுருவினான்.

''நான் வேறு யாரையும் அணைக்கவில்லை... என்... மனதில் இடம் பிடித்திருப்பவளை... என் காதலியைத் தானே... அணைத்தேன்... இதில் தவறு ஒன்றும் இல்லையே...?''

என்றான் சர்வ சாதாரணமாய்.

'காதலி!' என்று அவன் சொன்ன வார்த்தை வெண்ணிலாவுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. சினத்தையே அதிகப்படுத்தியது. ''யார்... காதலி... நானா... நான் ஒன்றும்

லலிதா... இல்லையே... உங்களை மினுக்கிக் குலுக்
காதலிப்பதற்கு...? காதலித்து ஏமாறுவதற்கு?''

வெண்ணிலா வெடுக்கென கொட்டுவது போல கே
டாள். ஒரு கணம் தன் வசம் இழந்து அவன் கரங்களி
சிக்குண்டு விட்ட அவமான உணர்ச்சி. கோபமாய் மா
அவளுள் ஆத்திரத்தைக் கிளப்பியது. எரித்து விடுவ
போல் தன்னைப் பார்த்தவளைக் கண்டு கொஞ்சமு
அசராமல் குழிச்சிரிப்பு சிரித்தான் ராஜா, ''ஓ..! அதுவா
சமாச்சாரம்...? லலிதா உனக்கு போட்டிக்காரி என
நினைத்து பயந்து விட்டாய் அப்படித்தானே..?'' என்றவ
சட்டென முகம் மாறி அவள் பக்கம் வந்தான்.

ஏதேதோ உணர்ச்சிகளில் தவித்துக் கொண்டிருந்
வளின் தோள்களில் இரண்டு கரங்களையும் மால
போல் உறுதியாய் வைத்தான். ''வெண்ணிலா... நேரா
என்னை... என் கண்களைப் பார். நமக்குள் எந்தப் பாச
கும் வேண்டாம். சொல்...! என்னை... நீ விரும்புகிறாய
இல்லையா...? எனக்கு உடன் பதில் தெரிந்தாக வே
டும்...'' கொஞ்சம் அதிகாரத்துடன் ஆணித்தரமாய் அவ
குரல் ஒலித்தது.

வெண்ணிலா இதை எதிர்பார்க்காமல் ஒரு கண
மேலும் தடுமாறிப் போனாள். யார்.. யாரை... மனதில்
நினைத்து நினைத்து உருகி.. உருகி... கனவு கண்
காதல் கோலம் போட்டுக் கொண்டிருந்தாளோ... அவ
கேட்கிறான்? உடன் பதில் அவனுக்கு வேண்டுமா
எவ்வளவு துல்லியமாய் எடை போட்டிருக்கிறான்? எ
வியப்பு அவளைத் திகைக்க வைத்தது. கூடவே லலி
வின் ஞாபகம் அன்று இதே உதடுகள்தானே வார்த்
களை வீசியது. லலிதா எனது காதலிதான்... என்



அழுந்தச் சொல்லி கேலி பேசியது. பின்... எப்படி இன்று..? விளையாடுகிறானா? இப்படி காதல் கொள்வது... பெண்களுடன் சீண்டி விளையாடுவது இவனுக்கு பொழுது போக்காய், ஆகிவிட்டதா.? காதலியாய் லலிதா சலித்துப் போனதும் காதலிக்க வேறு நபரை தேடு கிறானா? வண்டு போல் வித விதமான மலர்களை நுகரத் துடிக்கும் ஏமாற்றுக்காரனா? வெண்ணிலா ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்த்து குழம்புவது கண்டு அவள் முகத்தில் அதிக குழப்ப ரேகைகள் ஓடுவது கண்டு ராஜா அழுத்த மாய் அவள் தோள்களைப் பற்றியபடி இருந்தவன் டக்கென விடுவித்தான். எதையோ டக்கென யோசித்தவன் போல், ''உனது குழப்பம் புரிகிறது வெண்ணிலா...!'' என்றபடி மேலும் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தான்.

அவன் தோள்களை விடுவித்த விநாடியில்தான் வெண் ணிலா உணர்வுக்கு வந்து கோபமும் மூண்டாள். கட்டிய மனைவி போல் உரிமையாய் தொட்டுப் பேசி அதிகாரம் செய்து கொண்டு.. இவன் என்னதான் நினைத்துக் கொண் டிருக்கிறான்? இவனது அதிகார கர்ஜனைக்கு அடங்கிப் போவார் கள் என்ற மமதையா..? சினம் கொண்டு பார்த்தவளை நோக்கம் புரிந்தது போல் சாந்தமாய்ப் பார்த்தான் ராஜா.

''வெண்ணிலா... லலிதாவைப் பற்றிச் சொல்கிறேன். அவளை ஏமாற்றுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. பின்னணியில் ஒரு கதை இருக்கிறது... என்றெல்லாம் அன்று உன்னிடம் சொல்லியிருந்தேன் அல்லவா...? அந்தக் கதையைச் சொல்வதற்கான நேரம் வந்துவிட்டது. சொல்லட்டுமா...?'' என்றான் கனிவு பொங்க.

வெண்ணிலா அடங்கும் நிலையில் இல்லை. சினம் குறையாதவளாய், ''தேவையில்லை சார், எனக்கு வேலை

நிறைய இருக்கிறது வருகிறேன்!'' என்றபடி அவனை திகைக்க வைத்துவிட்டு விறுவிறுவென ரூமிலிருந்து வெளியேறினாள். ராஜாவும் முதலில் திகைத்தவன் பிறகு ஏதோ தோன்றினவனாய் லலிதாவை அழைத்து வர பணியாளை அனுப்பினான்.

## 11

அன்று இரவு முழுவதும் வெண்ணிலா தூக்கம் வராமல் தவித்தாள். காரணம் சொல்லப் போகிறாராம். கதை சொல்லப் போகிறாராம். நல்ல கட்டுக்கதை! முணுமுணுத்துக் கொண்டவள் கோபம் விலகாமலே காலையில் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தாள். ராஜா அவளது உள் மனதை, அவனை விரும்புவதை மிகச் சரியாய்க் கண்டு பிடித்து விட்டான் என்பதை உணர்ந்த போது அவமான உணர்ச்சி அவளுள் தலைதூக்கியது. நான் ஒரு கணம் அவனது இறுக்கமான அணைப்பில் அப்படியே மெய்மறந்து கட்டுண்டு போனேன்... என்ற அதிசயம் அவளைப் பிடித்து ஆட்டியது. எப்படி நான் சுய நினைவு இழந்து போனேன் என வியந்தாள்.

நினைக்கும்போதே அவளையறியாமல் ஒருவித வினோத உணர்வுகள் அவளுள் எழும்பிக் கொண்டன. ராஜா அவனது கரங்களால் வேகமாய் அவளது இடுப்பை வளைத்து அணைத்த சில நிமிடங்கள் மறுபடியும் தோன்றி அவளுள் சிலிர்ப்பு ஊட்டின. அந்தக் கணத்தில்



வாழ்வே அவன்தான் என்பதுபோல் உருகி ஒரு கணம் எப்படி துவண்டுதான் போனாள்? அவனும் விடாது மலரை இதழ் நோகாமல் முகர்வது போல் அவளை அப்படியே தன்னுடம்பால் தாங்கிக் கொண்டு எவ்வளவு மென்மையாய் உதடுகளால் அவளது சின்ன இதழ்களைத் தேடி முத்தமிட்டு...

நினைத்துப் பார்த்தவளுக்குக் கன்னம் சிவந்து விட்டது. காதல் எவ்வளவு பெரிய மாயை? அந்த மாயை யில் இருந்து... இன்னும் நான் மீளவே இல்லையா...? காதலிப்பது... அதிலும் போயும் போய் ஓர் ஏமாற்றுக் காரனைக் காதலிப்பது எவ்வளவு பெரிய தவறு...? அவனை மனதில் வைத்து பூஜித்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? லலிதா வரிசையில், ஏமாற்றுக்கார காதலிகளின் வரிசையில் என்னையும் ராஜா... சேர்த்து விட்டாரா...? அதனால்தான் இப்படி உரிமையாய் நடந்து கொண்டு.. நம்மை இப்படியெல்லாம் ஏமாற்றிக் கொண்டு... கொதிப்பாய் யோசித்தவளுக்கு பேசாமல் வேலையை ராஜினாமா செய்து விட்டு இனி ராஜாவின் முகத்திலே முழிக்க வாய்ப்பில்லாமல் சென்று விட்டால் என்ன என்று கூட தோன்றியது. மறுநாளே அந்த எண்ணம் தீவிரமாகியது. ராஜினாமா லெட்டர் கொடுக்கவும் வெண்ணிலா தீர்மானித்திருந்தாள்.

ஆனால் அன்று அலுவலகத்திற்குள் நுழைந்தவள் கேள்விப்பட்ட விஷயம் மிகவும் ஆச்சரியப்படுத்தியது. 'மினுக்குக்காரி லலிதா வேலையை விட்டுப் போய் விட்டாளாம். ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட் டாளாம். பக்கத்து ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் ஸ்டெ னோவாக வேலைக்கும் சேர்ந்து விட்டாளாம்.' கவிதாதான்

விஷயத்தைச் சொன்னாள். நம்ப முடியாமல் பார்த்த வெண்ணிலாவை, ''உண்மைதான்...! என்னிடம் இன்று காலை சொல்லிவிட்டுத்தான் சென்றாள். இந்த வேலை அவளுக்குப் பிடிக்கவில்லையாம். ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் அதிக சம்பளம் தருவதாய் சொன்னார்களாம். அதனால் அங்கு வேலைக்குச் செல்லப் போகிறேன். என்றும் சொன்னாள்.'' - கவிதா முடித்ததும் வெண்ணிலாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

''ஏன்... லலிதாவுக்கு... திடீரென்று என்ன.. ஆச்சு..? ஏன்.. பிடிக்காமல் போயிற்று...?''

வெண்ணிலாவின் கேள்விகளுக்குக் கவிதாவால் பதில் சொல்ல முடியவில்லை. உதடுகளைப் பிதுக்கினாள்.

வெண்ணிலா குழப்பமானாள். லலிதா.. ஏன் திடீரென்று வேலையை விட வேண்டும்...? மேலும் அவள் சாதாரண பெண் அல்லவே.. முதலாளியின் காதலியாயிற்றே..? அவளது... காதல் என்னவாயிற்று? ஒருவேளை ராஜா.. நம்மிடம் சொன்னது போல் லலிதாவிடம் நான் கட்டிக் கொள்ளப் போகிற காதலி அல்ல. என்று சொல்லியிருப்பாரோ..? அதனால்தான் லலிதா மனமுடைந்து வேலையை உதறி சென்று விட்டாளோ...? என்னதான் நடந்திருக்கும்?

விடை தெரியாமல் குழம்பியவளுக்கு அன்று மாலை விடை கிடைத்தது. அவளை ஏதோ ஒரு வேலைக்காக ராஜா ரூமிற்கு அழைத்தவன் வேலையைச் சொல்லி விட்டு கடைசியாய், ''வெண்ணிலா, விஷயம் தெரியுமா? லலிதா வேலையை விட்டுச் சென்று விட்டாள். உனக்கு... போட்டி.. ஒழிந்தது!'' என்றான் குறும்புச் சிரிப்புடன்.



வெண்ணிலாவும் சினம் எகிற அவனைப் பார்த்தாள். ''பழைய காதலி கசந்து விட்டாள். அவளை வெளியேற்றி விட்டால்.. புதுசாய் காதலி பிடிக்க வசதியாய் இருக்கும். எல்லாம் உங்கள் கைங்கரியம் தான். எனக்குத் தெரியும்...!''

அவள் குத்தலாய் பேசுவது கண்டு ராஜா அவசரமாய், ''இல்லை... வெண்ணிலா.. நீ.. தவறாகப் புரிந்து கொண்டாய். லலிதா வேலையை விட்டுச் சென்றதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நான் ஒரே ஒரு பொய்யைச் சொன்னேன். அதுதான் அவளை அப்படி விரட்டி விட்டது. என்ன 'பொய்' லலிதாவிடம் சொன்னேன் தெரியுமா...?''

ராஜா நிறுத்திவிட்டு வெண்ணிலாவின் முகத்தைப் பார்க்க. வெண்ணிலா வெறுப்பு பொங்க மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொள்ள.. ராஜா விடாது அவளைப் பார்த்தவன், ''லலிதாவிடம் ஒரு பொய் சொன்னேன். கம்பெனிக்கு திடீரென ஏற்றுமதி செய்ததில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகவும், இனி கம்பெனியே திவாலாகி விட்டது மாதிரிதான், என்றும் யாருக்கும் சம்பளம் கொடுக்கக் கூட பணம் இல்லை. ஆனால் விஷயம் வெளியே தெரியக்கூடாது. பாங்க் லோன், கடன் கிடன்... என்று ஏதாவது வாங்கி சமாளிக்க முடியுமா என்று பார்க்கப் போகிறேன்... என்றும், வருத்தம் பொங்க லலிதா நம்புகிற மாதிரி பொய்யைச் சொன்னேன்...''

''நீங்கள் அப்படிச் சொன்னதும்... கிளிப்பிள்ளை போல் லலிதா அப்படியே நம்பி விட்டாள் அப்படித்தானே?''

வெடுக்கென கேட்டவளை பார்த்து ராஜா அமைதியாய் சிரித்தவன், ''லலிதா முதலில் நம்பவில்லைதான்.

ஆனால் அவள் நம்புகிற மாதிரி சில லெட்டர்களை வங்கி கணக்குகளை பேலன்ஸ் ஷீட்டுகளை, நான் போலியாய் தயார் செய்து வைத்திருந்தேன்? அதையெல்லாம் காட்டினேன். அவள் உடனே நம்பி விட்டாள், தன்னுடைய சுயரூபத்தையும் காட்டி விட்டாள்...''

''சுயரூபமா... அது... என்ன... அப்படி..? எதும் நரசிம்ம அவதாரம் எடுத்து விட்டாளா... லலிதா...?'' துடுக்காய் கேட்டவளை ராஜாவின் உறுதியான பேச்சு திகைப் பூட்டியது.

''உண்மையில்... லலிதாவுக்கு தேவை. பணம்தான் பணக்காரனான ஒருவன்தான்! அதனால்தான் மினுக்கி குலுக்கி என்னை விரும்புவது போல் நடித்தாள். நானும் அவளது குணத்தை நன்கு புரிந்து கொண்டுதான் ஏமாற்றுக் காதலியாய் அவளை ஆக்கிக் கொண்டேன் ஆனால் கம்பெனி திவால்... நான் பணக்காரன் இல்லை யென்பது போல் அவள் உணர்ந்ததும். இனி காதலியாய் நடித்து பிரயோஜனமில்லை. வேறு வழி பார்க்க வேண்டியதுதான் என்ற முடிவிற்கு வந்து விட்டாள் அதனால்தான் உடனே வேலையை உதறி இன்னொரு கம்பெனியில் சேர்ந்து விட்டாள். என் யூகம் சரியானால் இந்நேரம் லலிதா அந்த ஷிப்பிங் கம்பெனி முதலாளியை மயக்கி தனது காதல் வலையை வீச ஆரம்பித்திருப்பாள் எனக்கு அவளைப் பற்றி நன்கு தெரியும். மலர் விட்டு மலர் தாவும் வண்டுவின் குணம்தான் அவளுக்கு...!

நீண்ட பிரசங்கம் செய்த அவனைப் பார்த்து பழிப்பு காட்டிய வெண்ணிலா அவசரமாய், ''நீங்கள் மட்டும் என்ன.. பெரிய உத்தமராக்கும்? நீங்களும் வருகிற பெண்களையெல்லாம் காதலியாக்கி ஏமாற்றும் வல்லவன்



தானே? ஒவ்வொரு மலராய் முகர்ந்து தேன் குடிக்கத் தானே. இந்த முதலாளிக் காதலன் வேஷம் போட்டிருக் கிறீர்கள்..?''

வெண்ணிலாவின் பேச்சை அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவனாய், ''நி...று...த்து.. வெண்ணிலா...!'' என்றான் உரத்த குரலில், தொடர்ந்து, ''வெண்ணிலா உனக்கு எப்படி புரிய வைப்பதென்றே தெரியவில்லை. உனக்கு சில விஷயங்களைப் புரிய வைக்கத்தான்... லலிதாவின் குணத்தை அறிய வைக்கத்தான் இப்படி ஒரு நாடகமிட்டு லலிதாவின் சுயரூபத்தைப் வெளிக் கொண்டு வந்திருக்கிறேன். இனியும் ஒன்றும் புரியாதவள் போல் முட்டாள் தனமாய் ஏன் பேசுகிறாய்? ஏன் விஷயங்களைப் புரிந்து கொள்ள மறுக்கிறாய்..?'' ஆதங்கமாய்க் கேட்ட வனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஆமாம்.. ஆமாம்... நான் முட்டாள்தான்! எனக்கு ஒன்றும் புரியாதுதான்..! புரியாமலே போகட்டும். என்னை விடுங்கள். நான் போகிறேன்...!'' அவனை நோக்கி ஒரு பெரிய கும்பிடு போட்டாள் வெண்ணிலா. திரும்பி மடமடவென வெளியேறிப் போனவளை டக்கெனப் பிடித்து தன் பக்கம் இழுத்த ராஜா அவள் கண்களை அழுத்தமாய்ப் பார்த்தான். ''நில்... வெண்ணிலா... நிஜமாகச் சொல்... என் மேல் உனக்கு ஆசையில்லை...? மனதுக்குள் நீ... என்னைக் காதலிக்கவில்லை...? சொல்... சொல் வெண்ணிலா...!'' அவளைப் பிடித்து உலுக்கி னான்.

''இல்லை..! இல்லவே இல்லை...!'' படபடவென வார்த்தைகளை உதறிவிட்டு அவனிடமிருந்து மீண்டு

வெண்ணிலா வெளியேறினாள். ராஜா திகைப்பு பொங்க யோசனையில் ஆழ்ந்தான்.

# 12

அதற்குப் பின் பத்து நாட்கள் எந்தவிதப் பிரச்சினையுமில்லாமல் கழிந்தது. வெண்ணிலா அவள் பாட்டுக்கு வந்தாள். வேலை பார்த்தாள். சென்று கொண்டிருந்தாள். ராஜாவும் அப்படியே... அலுவலகத்திற்கு வருவது போவது தெரியாத அளவுக்கு வந்து சென்று கொண்டிருந்தான். ஊடலின் உச்சக்கட்டம் போல் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. கண்களால் பார்க்கக்கூட இல்லை. அதற்கான முயற்சியோ சந்தர்ப்பமோ.. ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை. ஆனால் தனிமையும் இரவு நேரங்களும் அவர்களைப் பாடாய் படுத்தியது. தூங்க விடாமல் சதி செய்தது. ஏங்கித் தவிக்க விட்டது. இருவருமே வீராப்பாய் இருந்தாலும் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியவில்லை. அவர்களையறியாமலே ஒருவரையொருவர் தேட ஆரம்பித்தார்கள். சந்தர்ப்பங்களை எதிர்பார்த்தார்கள்.

சந்தர்ப்பம் கவிதா உருவில் வந்தது.

அன்று கவிதா உடம்பு சரியில்லை என லீவு எடுத்து விட அவள் பொறுப்பையும் சேர்த்து வெண்ணிலாவே கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கவிதா



சரக்குகளை சரி பார்த்துப் பட்டியலிடும் டெலிவரி பிரிவில் இருந்து வந்தாள். அந்தப் பிரிவில் சரக்குகளைப் பட்டியலிட்டு உடனுக்கு உடன் எம்.டி. ரூமிற்குச் சென்று ஒப்புதலும் பெற வேண்டியிருக்கும். வெண்ணிலா கவிதாவின் லீவு காரணமாய் அந்தப் பிரிவில் இருந்ததால் அடிக்கடி ராஜாவின் ரூமிற்குச் சென்று அவனிடம் ஒப்புதல் பெற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. வெண்ணிலாவும் இயந்திரமாய் நுழைந்து ஒன்றும் பேசாது அவன் கையெழுத்திட வேண்டிய பேப்பர்களை அந்நியன் போல அவனிடம் நீட்டுவாள். ராஜாவும் ஒன்றும் பேசாது அவளையொரு ஆழமான பார்வை பார்த்து விட்டு கையெழுத்திட்டு கொடுப்பான். விறுவிறுவென அவனது ரூமை விட்டு வெளிவந்ததும், என்ன... திமிர்... நாம்தான் பேசவில்லை... அவராவது ஒரு வார்த்தை பேசியிருக்கலாம் அல்லவா...? என்றும் நினைப்பாள். அவனை ஒரு பக்கம் பார்க்க பாவமாகவும் இருந்தது. அவன் முகத்தில் பழைய துறுதுறுப்பான உற்சாகம் இல்லாமல் ஒருவித கவலை இருப்பதாகத் தோன்றியது. ஒருவேளை காதலி லலிதா பிரிந்து போய் விட்ட கவலையாய்க் கூட இருக்குமோ? என்று துடுக்காய் கூட நினைத்தாள். ஆனால் கொஞ்ச நேரத்திலே அவளது நினைப்பு மாறிவிட்டது.

அவனது முகத்தில் கவலையின் ரேகை அழுத்தமான கோடாய்த் தெரிந்தது. போதாக் குறைக்கு ஜுரத்தைக் காட்டி கவிதா லீவு எடுத்திருந்தவள், ஜுரம் விடவில்லை. என்று லீவை பத்து நாளாய் உயர்த்திக் கொண்டாள். வெண்ணிலாவும் வழியில்லாது கவிதா ஸீட்டிலே இருக்க வேண்டியதாயிற்று. தினம் தினம் ராஜாவைப் பார்க்கும்

பாக்யம் இந்தப் பணியில்தானே இருக்கிறது என்று உள்ளூர சந்தோஷமாய்க் கூட அவளுக்கு இருந்தது. ஆனால் அவள் பார்த்த நான்கு தினங்களிலும் ராஜாவிடம் எந்த மாறுதலும் இல்லை. இயந்திரம் போல் வேலை பார்த்தான். அளவாய் ஒன்றிரண்டு வார்த்தைகளே பேசினான். எதையோ பறிகொடுத்தவனைப் போல் முகத்தில் எப்போதும் ஒரு சோகத்தைத் தேக்கி வைத்திருந்தான்.

தொடர்ந்து, மலர்ந்து கிடந்தவனை அப்படி சோகமாய்ப் பார்க்க வெண்ணிலாவுக்கு என்னவோ போல் இருந்தது. மனதைப் பாரமாக்கி பிழிந்தது. அடக்க முடியாமல் அன்று அவனது ரூமினுள் நுழைந்தவள் வந்த வேலை முடிந்ததும், ''சார்... உங்களிடம் ஒன்று கேட்கலாமா...?'' கேட்டு விட்டாள்.

ராஜா நிமிர்ந்து புருவம் விரியப் பார்த்தவன்... கண்களில் கொண்டிருந்த ஆச்சர்யம் விலகாமலே, 'ம்...' என்று தலையசைத்தான்.

''நானும்... ஐந்தாறு தினங்களாக... உங்களைக் கவனித்து வருகிறேன்... எதையோ... பறி கொடுத்தது போலவே சோகமாய் இருக்கிறீர்களே... என்ன விஷயம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா...?'' என்றபடி ஆவலாய் அவன் முகத்தை நோக்கினாள்.

ராஜா ஆழமாய் அவளைப் பார்த்தவன், ''நீ நினைப்பது சரிதான்... வெண்ணிலா!'' என்றபடி எழுந்து அவள் பக்கத்தில் வந்தான். உரிமையாய் அவளது கைகளையெடுத்து தன் கரங்களுடன் பிணைத்தவாறு அவளது கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

வெண்ணிலாவுக்கும் அவன் கரங்களின் பிடியிலிருந்து கைகளை விலக்கத் தோன்றவில்லை. அந்தப் பிணைப்பை விரும்பியவளாய் அவளும் கண்கள் விரியப் பார்த்தாள்.



''உனக்கு... நிஜமாகவே என்.. மேல் அன்பும் அக்கறையும் இருக்கிறதா.. வெண்ணிலா...'' மெல்லிய குரலில் முணுமுணுத்தவன் அவள் கைகளை விடுவித்தவாறு நடந்து மேஜையில் உட்கார்ந்து கொண்டான். அவனது முகம் மேலும் சோகமாகியது.

''வெண்ணிலா... நான் நம் லலிதாவிடம் விளையாட்டுக்குத்தான் சொன்னேன். கம்பெனி திவாலாகி விடும் என்று... ஆனால் நிஜமாகவே அப்படி நடந்து விடும் போல்... சந்தர்ப்பம் வந்து விட்டது...''

''என்ன... சொல்கிறீர்கள் சார்...?'' என்றாள் வெண்ணிலா. முழுவதும் திடுக்கிட்டவாறு.

''ஆமாம். வெண்ணிலா... நாம்.. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வோம் அல்லவா? அந்த வெளிநாட்டு கம்பெனி பிரதிநிதி இரண்டு தினங்களுக்கு முன் இங்கு வந்து என்னை சந்தித்தார். நாம் வர்த்தகம் செய்யும் முக்கியமான கம்பெனியின் முக்கியப் பிரதிநிதி அவர். அவர் தொடர்ந்து நமது பொருட்களை ஆர்டர் செய்து வெளிநாட்டில் விற்பதால்தான்... நமக்கு நல்ல லாபம் கிடைத்து வந்தது. அவருக்கு என்ன வந்ததோ... என்ன தோன்றியதோ... பொருள்கள் சப்ளை செய்யும் நமது காண்ட்ராக்ட்டை ரத்து செய்யப் போவதாகவும் வேறொரு கம்பெனியில் இதைவிட குறைந்த விலையில் பொருட்கள் கிடைப்பதால் அக்கம்பெனியில் ஆர்டருக்கான காண்ட்ராக்ட்டை ஏற்பாடு செய்யப் போவதாகவும் கூறிச் சென்று விட்டார். அதிலிருந்து எனக்கு ஒன்றும் ஓடவில்லை. தலைவலியே வந்துவிட்டது. ஏனெனில்

நமது உற்பத்தியின் பெரும்பங்கை அவர்தான் வாங்கி விற்பனை செய்கிறார். அவரை இழந்து விட்டால்... வெளிநாடு சென்று... நமது பொருட்களை தொடர்ந்து வாங்க... புதுக்கம்பெனிகளை தேர்ந்தெடுத்து... ஆர்டர்கள் வாங்கிக் கொண்டு வர வேண்டும்... தற்போது உள்ள அவசர சூழ்நிலையில் அதெல்லாம் முடியாத காரியம்... அதனால் தான் பயமாய் இருக்கிறது. கம்பெனிக்கு வெளிநாடுகளில் சரக்குகளை விற்க முடியாமல் முடங்கிப் போனால் நிறைய லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமாகி விடும். அப்படி நஷ்டமாகி விட்டால் கம்பெனியைத் தொடர்ந்து நடத்த முடியாமல்... மூட வேண்டிய அவசியம் கூட வந்து விடும்... அதனால் தான்... என்ன செய்வது என்று தெரியாமல்.... திகைத்துக் கொண்டிருக்கிறேன்...!''

வருத்தம் தோய்ந்த குரலில் ராஜா பேச... வெண்ணிலா வாய் பிளக்க அதிசயித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள் ''நிஜமாகவா... நிஜமாகவா.. சார்...?'' என்று நம்ப முடியாமல் கேட்டவளைப் பார்த்து ராஜா சோகமாய் தலையசைத்தான்.

வெண்ணிலாவுக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. என்ன சொல்ல... எப்படி அவனை ஆறுதல் படுத்த..? என்றெண்ணியவாறே வெளிவந்து விட்டாள். அன்று மாலை வேலை முடிந்து கிளம்பும்போது மணியைப் பார்த்தாள். மணி ஆறரை. கிட்டத்தட்ட எல்லோரும் வேலை முடிந்து சென்றாயிற்று. அவளும் அலுவலக வாட்ச்மேனும் தான் எஞ்சியிருந்தார்கள். கிளம்பியவள் ராஜா ரூமில் லைட் எரிவது கண்டு திடுக்கிட்டாள். பொதுவாக வேலை



முடிவதற்கு ஒரு சில மணிகளுக்கு முன்பே ராஜா கிளம்பிச் சென்று விடுவது வழக்கம். இன்று என்ன வாயிற்று..? சந்தேகம் பொங்க ராஜாவின் ரூமினுள் நுழைந்தாள். அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிட வைத்தது.

ராஜா நெற்றியில் கை வைத்தபடி... முகத்தில் கவலையின் ரேகைகள் பிழிய ஒரே சோக மயத்தில் இருந்தான். எங்கே அழுது விடுவானோ என்று கூட வெண்ணிலாவுக்குப் பாவமாக இருந்தது. ''சா...ர்'' என்றாள் கனிவாய் மெதுவான குரலில். அவள் குரல் கேட்டதும் தான் ராஜா நிமிர்ந்து திடுக்கிட்டுப் பார்த்தவன் சோகம் விலகாமல் சிரித்தான்.

''இன்னும் அதையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா..? எல்லாம் சரியாகி விடும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது சார்...'' என்றாள் உற்சாகத்தை வலிய குரலில் வரவழைத்துக் கொண்டபடி.

அவளது ஆறுதல் வார்த்தைகளைக் கண்டு நெகிழ்ந்து போனவனாய் ராஜா எழுந்து கொண்டவன், ''எனக்கும் கொஞ்ச நம்பிக்கை இருக்கிறது... வெண்ணிலா! திரும்பவும் அந்த வெளிநாட்டு பிரதிநிதியை சந்தித்து காண்ட்ராக்ட் விஷயமாய் பேச முடிவெடுத்திருக்கிறேன். அது பற்றித்தான் இப்போது தீவிரமாய் யோசித்துக் கொண்டிருக்கிறேன்...'' என்றபடி அவனும் நேரமாகி விட்டதை யுணர்ந்து கிளம்ப ஆரம்பித்தான்.

''இரு. வெண்ணிலா நானே உன்னை காரில் ட்ராப் செய்து விடுகிறேன்!'' என்று உரிமையுடன் ராஜா அழைத்தபோது வெண்ணிலாவுக்குத் தட்ட முடியவில்லை. சம்மதித்தாள். காரின் முன் இருக்கையிலே ஏறிக்

கொண்டாள். ராஜா எதுவும் பேசவில்லை. சாலையில் கவனம் வைத்தவாறு சிந்தனையுடனே ஓட்டினான். அவன் ஏதாவது பேசுவான் என நினைத்து அடிக்கடி ஆவலாய் அவன் முகத்தைப் பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சிறிது நேரம் அப்படித் தவித்தவள் அடக்க முடியாமல் கேட்டே விட்டாள். ''என்ன இப்போதெல்லாம் உங்களிடம் சிரிப்பையே பார்க்க முடியவில்லை. எப் பொழுதும் சீரியஸான முகத்துடன் ஏதோ சிந்தனையிலே இருக்கிறீர்களே?'' என்று கேட்டு விட ராஜா அவள் கேள்வியைக் கேட்டு தன்னை மறந்து ஒரு கணம் அடக்க முடியாமல் சிரித்து விட்டான். வெண்ணிலாவும் அவனது அந்த சிரிப்பில் மனமகிழ்ந்தவள் பாரம் விலகியவளாய் சிரித்தாள். அப்படி அவர்கள் இருவருக்கும் ஒரு கணம் தங்களை மறந்து சிரிப்பதை... சாலையில் நின்று கொண்டிருந்த அந்த உருவத்தின் ஒரு ஜோடிக் கண்கள் பளீரென பார்த்து விட்டது.

## 13

அந்த ஒரு ஜோடிக் கண்கள் லலிதாவுக்குச் சொந்த மானவை. தற்செயலாய் சாலையில் நடந்து கொண்டிருந் தவள் திரும்பிப் பார்த்த போது அந்தக் காட்சி பட்டு விட்டது. ராஜாவும் வெண்ணிலாவும் அடக்க முடியாமல் ஒருவரையொருவர் பார்த்து சிரித்த காட்சி. அதைக் கண்டதும் ஜீரணிக்க முடியாமல் ஆணியடித்தாற் போல் அப்படியே நின்று விட்டாள் லலிதா.



பொறாமைத் தீயில் அவள் முகம் முழுவதும் பற்றி எரிந்தது. என்ன ஒரு இளிப்பு..? இந்த இளிப்பு இவர் களுக்குத் தேவையா? கம்பெனி திவாலாகப் போகிறது என்று சொன்ன ராஜா கூட இந்த இளிப்பு இளித்துக் கொண்டு வெண்ணிலா முன் ஸீட்டில் எவ்வளவு நெருங்கி உட்கார்ந்திருக்கிறாள். இங்கு நடப்பதையெல் லாம் பார்த்தால்... ஒருவேளை...?

லலிதாவின் மூளை ஒரு கணம் கம்ப்யூட்டராய் மாறி படபடவென கணக்குகளைப் போட ஆரம்பித்தது. வெகு சீக்கிரமே அவளுக்குப் புரிந்து விட்டது. ராஜா அவளை கம்பெனியிலிருந்து வெளியேற்றவே. கம்பெனி திவா லாகி விட்டது என்று பொய் சொல்லியிருக்கிறான். அப்படி அவன் சொன்ன பொய்யை நம்பி லலிதா வெளி யேறியதும் வெண்ணிலாவை அவள் இடத்திற்கு கொண்டு வந்து விட்டான். காதலிக்க ஆரம்பித்து விட்டான். வெண்ணிலாவும் வலைவீசி காதலிக்க ஆரம்பித்து விட்டாள்! லலிதா அடக்க முடியாமல் நினைத்துப் பார்த்தாள். அவளுக்கு நெஞ்சே விம்மி விடும் போல் இருந்தது.

'என்ன... என்னை ஏமாற்றி விட்டு ஒரு காதல் நாடகம் ஆடுகிறார்களோ...? நான் சும்மா விடமாட்டேன். அதுவும் அந்த வெண்ணிலாவுக்கு ராஜா கிடைக்கவே கூடாது. கிடைக்கவும் விடமாட்டேன். இந்த லலிதா யார் என்று அவர்களுக்குக் காட்டுகிறேன்...'

சினம் பொங்கத் தலையை விரித்துப் போடாத குறையாய் சூளுரைத்துக் கொண்டாள் லலிதா. அவளுக்கு உடனடியாய் அவளது ஏரியாவில் பெரிய பிஸ்தாவாய் விளங்கும் 'கபாலி' ஞாபகம் வந்தது. 'கட்டை பீடி கபாலி

என்றுதான் அவன் பிரசித்தம், கட்டைப் பீடியும் உயர்த்தி கட்டிய லுங்கியுமாய் சாராய வாடை வீச உட்கார் திருப்பான். அவனுக்குத் தேவை பணம்தான். பண கொடுத்து விட்டால் போதும். பிணம்போல் வாயை பிளந்து காரியத்தை முடித்து விடுவான். லலிதா இறுக் மாய் கறுவி தீர்மானமாய் முடிவெடுத்தாள். கபாலியை சந்தித்து தனது திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொண் டாள். கபாலியின் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

வெண்ணிலா ரூமிற்கு வந்தவளுக்கு மனமே ச யில்லை. ராஜாவின் சோகமயமான முகம் திரும்ப திரும்ப நினைவிற்கு வந்து அவளை பாடாய் படுத்திய எப்படி இருந்த முகம். எப்படி ஆகிவிட்டது என்றெல்லா வருந்தினாள். இந்தச் சூழ்நிலையில் நாம் வேறு அவருக் பக்கபலமாய் இல்லாமல் சண்டை போட்டுக் கொ டோமே என்ற கவலையும் அவளை வாட்டியது. லலித மட்டும் ராஜாவின் வாழ்க்கையில் குறுக்கிடா விட்டா எப்படி இருந்திருக்கும் என்றெல்லாம் அவளுள் நினைப் மாறியது. அன்று கடைசியாய் ராஜா தன்னிடம் கோப பொங்க கேட்டதை நினைத்துப் பார்த்தாள். சொ வெண்ணிலா... உனக்கு என்மேல் ஆசையில்லை... என்னை.. நீ.. காதலிக்கவில்லை..? எவ்வளவு துல்லி மாய் கேட்டு விட்டார்..? அப்படி கேட்டதில் இருந்தே ஒ விஷயம் புரிகிறது. அவரும் என்னை விரும்புகிறார். அ ஆதங்கத்தில்தானே அப்படி கேட்டிருக்க வேண்டும். ஒரு வேளை ராஜா நிஜமாய் என்னை விரும்புகிறாரா இல்லை லலிதாவின் இடத்தை நிரப்பும் இன்னொ ஏமாற்றுக் காதலியாய் என்னை நினைக்கிறாரா...? எ நம்புவது. எப்படி ராஜா மேல் நம்பிக்கை கொள்வது...



திரும்பவும் ஒரு முடிவிற்கு வராதவளாய் குழம்ப ஆரம்பித்தாள் வெண்ணிலா.

மறுநாள் வழக்கம் போல் அலுவலகம் சென்றாள். இரண்டு நாட்கள் அப்படியே ஓடி விட்டது. ராஜாவும் கொஞ்சம் பாரம் குறைந்தது போல் தெளிச்சியாய் இருந்தான். வெண்ணிலாவைப் பார்த்ததும், ''வெண்ணிலா அந்த வெளிநாட்டு பிரநிதியிடம் விரிவாய் விளக்கமாய் பேசினேன். நம் கோரிக்கையை பரிசீலித்து காண்ட்ராக்ட் கிடைக்கும்படி செய்வதாக உறுதியும் கூறியிருக்கிறார். இனி நமக்கு பயமில்லை...!'' என்றவன், ''முக்கியமாக உனக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.. வெரி.. வெரி.. தாங்க்ஸ்... வெண்ணிலா..!'' முகம் முழுவதும் புன்னகை மலர ராஜா சொன்னான்.

கேட்ட வெண்ணிலா கன்னம் சிவக்க பார்த்தவள், ''எனக்கு... எதுக்கு... சார்...? நான் என்ன அப்படிச் செய்து விட்டேன்? அன்று கவலையில் ஒரே சோகமயமாய் நீங்கள் இருந்தீர்கள். ஆறுதலாய் இரண்டு வார்த்தைகள் பேசினேன். அவ்வளவுதான்..! சொல்லியவாறு வெகுளி போல் சிரித்தாள்.

ராஜா அவளையே நேராய் பார்த்தவன் சிரிப்பு விலகாமல், ''வெண்ணிலா.. அவை வெறும் ஆறுதல் வார்த்தைகள்.. இல்லை.. அதற்கு மேல் ஒன்று. அதில்.. பின்னிப் பிணைந்து கொண்டிருப்பது எனக்குத் தெரியும்..?!'' என்றவாறு குறுகுறுப்புடன் அவனது பார்வை அவள் மீது செல்ல.. வெண்ணிலா குனிந்து கொண்டாள். தன் சிவந்த முகத்தில் ''அப்படியா? அப்படியா சார்?' என்று போலி வியப்பு காட்டி அங்கிருந்து அகலவும் செய்தாள்.

அன்று மாலை வழக்கம் போல் வேலை முடிந்து கிளம்பினாள். நேரம் ஆறு மணியைத் தொட்டிருந்தது. எல்லோரும் சென்று விட்டனர். ராஜா கூட ஏதோ மீட்டிங் இருப்பதாய் கூறி சீக்கிரமே சென்று விட்டான். வெண்ணிலா பஸ்ஸுக்கு ரொம்ப நேரம் காத்திருந்தவள் பஸ் வராமல் போகவே விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள். அப்பொழுது அவள் எதிரே... அசிங்கமாய் சிரித்தபடி கட்டை பீடி கபாலி தோன்றினான். நேராய் வெண்ணிலாவை குறி வைத்து நடக்க ஆரம்பித்தான் கபாலி.

# 14

வெண்ணிலா திடீரென தன் முன் தோன்றிய கபாலியைக் கண்டு திடுக்கிட்டாள். கபாலி அசிங்கமாய் இளித்தபடி அவளைப் பார்த்தான். ''நான் ராஜா சார் வீட்லே தோட்டக்காரனா வேலை பார்க்கேன். ராஜா சார் என்னை அனுப்பி வைச்சாங்க. உங்க பேரு தானே... வெண்ணிலா?'' என்றான் பவ்யமாய் உடம்பை நெளித்துக் கொண்டு.. லலிதா சொன்ன பெயர்களை மறக்காமல் சொல்லிவிட்ட திருப்தி அவன் முகத்தில் எதிரொளிக்க விகாரமான பற்கள் சிரிப்பதை அடக்க முடியாமல் தவித்தான். வெண்ணிலா ஒரு கணம் அவன் தோற்றத்தைக் கண்டு பயந்தவள் 'ராஜா சார்' என்ற வார்த்தையைக் கேட்டதும் ஸ்விட்ச் தட்டியது போலப் புன்னகைத்து விட்டாள்.



''அப்படியா..? என்ன விஷயம்..?'' என்றாள் கொஞ்சமும் சிந்திக்க மறந்தவளாய்.

அவள் தன்னை நம்பி விட்டாள் என்பதை அறிந்ததும் கபாலிக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. அந்த உற்சாக போதையில் வார்த்தைகள் வராமல் தடுமாறி, ''வந்து.. வந்து.. கம்பெனி விஷயமா.. ஒருத்தர் பேச வந்திருக்காங்க.. கூடப் பேசணும்னு உங்களை ராஜா சார் உடனே கூட்டி வரச் சொன்னாங்க..!'' என்று சமாளித்தான்.

வெண்ணிலா அவன் நடிப்பைக் கொஞ்சமும் உணரவில்லை. 'கம்பெனி விஷயமாய் பேச வந்திருக்காங்க' என்பதைக் கேட்டதும் அவளுக்கு ராஜா காண்டிராக்ட் விஷயமாய்ச் சொல்லிய வெளிநாட்டுப் பிரதிநிதியின் ஞாபகம் தான் வந்தது. ஒருவேளை அவரிடம் திரும்பவும் ராஜா பேச முயற்சித்து ஏற்பாடு செய்திருக்கலாம். தானும் உடனிருந்தால் கம்பெனி பற்றிய சில புள்ளி விபரங்களை கணக்குகளை எடுத்துச் சொல்ல வசதியாயிருக்கும் என்று நினைத்திருக்கலாம். அதனால்தான் ராஜா தன்னை கூட்டி வரச் சொல்லியிருக்கிறார் என்றும் உடனே நம்பி விட்டாள். வேறு எதையும் நினைத்துப் பாராதவளாய், ''எங்கே... ராஜா சார் இருக்காங்க..?'' என்று வினவ.. கபாலி வசமாய் மான் வலையில் சிக்கிவிட்ட சந்தோஷத்தில் ''இதோ... இங்கேதான்... பக்கத்து ஹோட்டல்லதான் ரூமில பேசிகிட்டு இருக்காங்க...!'' என்றபடி வழிகாட்டி நடக்க ஆரம்பித்தான்.

அப்போதுகூட வெண்ணிலா... ராஜா... ஏன் ஹோட்டல் அறையில் சந்திக்க வேண்டும். அலுவலகத்தில் அல்லது வீட்டில் வைத்துதானே... பேசுவார் என்பதை நினைக்கவில்லை. பலி ஆடாய் அவனைத் தொடர்ந்தாள். கபாலி

சந்து பொந்தெல்லாம் தாண்டி அவளைக் கூட்டிப் போனான். வெண்ணிலாவும்.. கம்பெனி விஷயங்களில் என்னென்ன பேசுவது, எதையெல்லாம் கோடிட்டுக் காட்டுவது என்பது பற்றிய சிந்தனையில் இருந்து விட்டாள். கபாலி ஒரு மூன்றாம் தர ஹோட்டல் முன் நின்றான். ''இங்குதான் வாருங்கள். ரூம் மேலே இருக்கிறது!'' என்று அழைக்க... அப்போதுதான் வெண்ணிலாவுக்கு அந்த பாழடைந்த ஹோட்டலைப் பார்த்து லேசான சந்தேகம் துளிர்த்தது. ஹோட்டலைச் சுற்றி விடலை ஆசாமிகளின் நடமாட்டம் வேறு கண் கூடாய் தெரிந்தது. அடடா.. முன் பின் யோசிக்காமல் இவன் பேச்சை நம்பி வந்து விட்டோமே? போயும்.. போயும்.. இந்த ஹோட்டலிலா ராஜா பேச்சு வார்த்தை நடத்தப் போவார்? திகைத்து யோசித்தவள் என்ன செய்ய.. இவனிடமிருந்து எப்படித் தப்பிக்க... என்று விரைந்து சிந்தித்தாள்.. எதிரில் டெலிபோன் பூத் தென்பட... வெண்ணிலா பிரகாசமானாள். ''வீட்டிற்கு வர லேட்டாகும் என்று தகவல் சொல்ல வேண்டும் போன் செய்து சொல்லி விடுகிறேன்'' என்று கபாலியிடம் சொல்லியவாறு டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தாள். கபாலியும் மான் தன் வலையில் தன் ஏரியாவில் மாட்டி விட்டது. இனி.. என்ன பயம் என்ற தைரியத்தில் தலையசைத்து பூத்தின் வெளிப்புறம் நின்று கொண்டான். வெண்ணிலா பூத்தின் கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தாள். வயதான பெரியவர் ஒருவர் மூக்கு கண்ணாடி சரி செய்தபடி, ''எந்த நம்பர் டயல் செய்யணும்.. சொல்லுங்கம்மா...'' என்றார் மெல்லிய குரலில்.

வெண்ணிலா அவசர அவசரமாய் ஹாண்ட் பேக்கில் வைத்திருந்த சின்ன டயரி ஒன்றைத் தேடி எடுத்துப்



பார்டியவள் ராஜாவின் வீட்டு போன் நம்பரைக் கண்டு பிடித்துச் சொன்னாள். பெரியவர் டயல் செய்தார், லைன் கிடைக்கவில்லை. திரும்பவும் டயல் செய்தார். திரும்பவும் லைன் கிடைக்காமல் அந்த எண் உபயோகத்தில் இருப்பதாய் தகவல் வர.. பெரியவர் 'லைன் கிடைக்கவில்லையம்மா' என்று உதடுகளைப் பிதுக்கினார். வெண்ணிலாவுக்குப் பதட்டம் பரபரப்பு அதிகமாகி விட்டது. என்ன செய்வதென்று திகைத்தாள். கபாலியும் திரும்பித் திரும்பி கண்ணாடி வழியாய் பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் பதட்டத்தைப் பார்த்ததும் சந்தேகப்பட்டு விட்டான். 'இனி தாமதித்தால் கிளி தப்பிவிடும்.. ஆபத்து..' என்று அவன் மூளையில் அலாரம் அடிக்க ஆரம்பித்து விட்டது.

படபடவென பூத்தின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன், ''வாருங்கள் லாட்ஜ் ரூமிலே டெலிபோன் இருக்கிறது... அங்கிருந்து போன் பேசிக் கொள்ளலாம்!'' என்றபடி உரிமையாய் அவளது கரங்களைப் பற்றியவன் இழுத்துப் போகாத குறையாய் அவளை அழைத்துச் செல்ல... அந்த திடீர்... அதிர்ச்சியில் ஒரு கணம் வெண்ணிலா செயலிழந்து போனாள். வேகமாய் அவன் கைகளை உதற நினைத்தாள். முரட்டுத்தனமான அவனது பிடி அதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. ஓங்கி, 'காப்பாற்றுங்கள்..! காப்பாற்றுங்கள்...!' என்று கத்த நினைத்தவளுக்குக் கூட தொண்டையடைத்து சதி செய்தது.

திமிற நினைத்து முயற்சி செய்தவளை கோழிக்குஞ்சு போல் அமுக்கி... லாட்ஜில் மாடிக்கு கொண்டு போய் ஒரு ரூமின் கதவை அவசரமாய்த் திறந்து உள்ளே வீசினான். தடுமாறி கீழே விழுந்த வெண்ணிலா... திடுக்கிட்டு எழுந்து நிமிர்ந்து பார்த்தவள் மேலும் திடுக்கிட்டுப்

போனாள். அங்கு எதிரே கை கட்டியபடி கம்பீரமாய் பொறாமைக்காரி 'லலிதா' நின்று கொண்டிருந்தாள்.

## 15

வெண்ணிலா ஒரேயடியாய் திடுக்கிட்டுப் போனாள் லலிதாவை அந்த இடத்தில் அவள் கொஞ்சமு எதிர்பார்க்கவில்லை. திடுக்கிட்டவளைப் பார்த்து அகம்பாவச் சிரிப்பு சிரித்தபடி பக்கத்தில் வந்தாள் லலிதா தன்னைப் பார்த்து பவ்யமாய் கைகட்டிய கபாலியை பார்த்து, ''சபாஷ் கபாலி.. காரியத்தை கச்சிதமாய் முடித்து விட்டாய்...!'' என்று பாராட்டவும் செய்தாள். அப்போது தான் வெண்ணிலாவுக்கு மின்னலாய் எல்லாம் விள கியது. இந்த பொறாமைக்கார லலிதா தான் ஏதோ ச செய்து நம்மை வலையில் வகையாய் சிக்க வைத்திரு தாள் என்பது புரிந்தது. என்ன... செய்ய..? என்று திகைத் சிந்தித்தவளை மேலும் நோகடிக்கும் வகையில் லலித முகத்தை அருவெறுப்பாய் வைத்துக் கொண்டவ கோபம் பொங்கி வெடித்தவளாய் வெண்ணிலாவி செவிட்டில் ஓங்கி அடிக்கவும் செய்தாள். வலியா கன்னத்தைப் பிடித்து துடித்தவளை... ''ஏண்டி.... நீயும் ராஜாவும்... சேர்ந்து... என்னை ஏமாற்றி நாடகமா ஆடினீர்கள்...? இருங்கள். இப்போது என்ன செய்கிறே பார்!'' என்று கறுவினாள். திரும்பி கபாலியைப் பா தாள்.



''கபாலி... இனி.. நீ வேலையைத் தொடங்கி விடலாம்.. இவளை நன்றாக... நுகர்ந்து விட்டு எங்காவது கூவத்தில் கொண்டு போய் வீசிவிடு! புரிகிறதா?'' என்றபடி சில நூறு ரூபாய் நோட்டுகளைக் கைப்பைக்குள் இருந்து அள்ளி கபாலியிடம் திணித்தாள். கபாலி அத்தனை பற்களையும் காட்டி கரும்பு தின்ன கிடைத்த கூலியை வாங்கிக் கொண்டான். நடப்பதைப் பார்த்த வெண்ணிலாவுக்கு மூர்ச்சையே வந்துவிடும் போல் இருந்தது. அடக்க மாட்டாதவளாய், ''ல...லி...தா...'' என்று... ஓங்கி கத்தியவள், ''நீயெல்லாம் ஒரு பெண்ணா...? உனக்கு அப்படி.... என்ன தீங்கு நடந்து விட்டது? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' கோபமாய் வெண்ணிலா வெடிக்க ஆரம்பிக்க... லலிதாவின் ஆத்திரம் அதைக் கண்டு அடங்காமல் பன்மடங்காயிற்று. கண்களை உருட்டி, கோபம் கொப்பளிக்க வெண்ணிலாவைப் பார்த்தவள், ''கபாலி... இவளுக்கு இன்னும் திமிர் அடங்க வில்லை. இவள் கைகளைப் பிடித்துக் கொள்...!'' என்று கபாலிக்குக் கட்டளையிட கபாலி இயந்திரமாகி வெண்ணி லாவின் கைகளுக்குப் பின்னுக்கு வளைத்து இறுகப் பற்றிக் கொண்டான்.

கோழிக்குஞ்சு போல் சிக்கியிருந்த வெண்ணிலாவை பெரிய அரக்கி போல் அனைத்துப் பற்களையும் விளித்து அகோரமாய் லலிதா நெருங்கியவள், வெறி உடம்பு முழுவதும் பரவியவளாய் வெண்ணிலாவின் செவிட்டில் ஓங்கி படபடவென அடிக்க ஆரம்பித்தாள். ஏற்கனவே இருந்த அதிர்ச்சி... அடிவாங்கிய அதிர்ச்சி எல்லாம் சேர்ந்து கொள்ள... வெண்ணிலா வலுவிழந்து அக்கணமே மயக்கமாகிப் போனாள்.

# 16

வெண்ணிலா கண் விழித்தபோது சூழ்நிலையே முற்றிலும் மாறியிருந்தது. தான் வலுவான தோள் ஒன்றில் முகம் புதைத்து மார்போடு ஒண்டிக் கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது. மெல்ல மெல்ல சுய நினைவுக்கு வந்தவளாய்... நிமிர்ந்து தன்னைத் தாங்கியிருந்த கரங்களுக்குச் சொந்தக்காரனைப் பார்த்தாள். கனிவுப் பார்வையும் குறும்புச் சிரிப்புமாய்.. அவளை அப்படியே வாரியணைத்து அவளது கூந்தலை மெல்ல வருடி விட்டபடி.. ராஜா. அவளுக்குக் குழப்பம் அதிகமாகியது.

''நீ... நீங்கள்... நீங்களா..? எப்படி..?'' என்று திணறியவளை, திடுக்கிட்டவளைப் பார்த்து ஆழமாய் புன்னகைத்தவாறு மேலும் தன்னோடு இறுக்கியவன், ''எல்லாவற்றையும் சொல்கிறேன். முதலில் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்...!'' என்றான் கிசுகிசுப்பாய்.

அப்பொழுதுதான் வெண்ணிலா முழு சுயநினைவுக்கு வந்தவளாய் தான் எங்கு இருக்கிறோம் என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். அழகும் ஆடம்பரமுமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த... ரூமின்... நடுவே... பஞ்சு போன்ற மிருதுவான படுக்கையில் புஷ்பம் போல் அவள் மிரண்டவளை ''பயப்படாதே... என் வீட்டில் என் ரூமில் தான் நீ இருக்கிறாய்...'' என்று ராஜா சாந்தமாய் பார்க்க நிம்மதி கொண்டாள்.



''என்ன நடந்தது... நான் எப்படி இங்கு வந்தேன்..?'' என்றவளை நீளமான பெருமூச்சுடன் ராஜா பார்த்தான்.

''அது... பெரிய கதை வெண்ணிலா...'' என்றபடி ராஜா ஆரம்பித்தான். ''லலிதா உன்னை வெறி கொண்டு அடி அடியென்று அடித்ததும் நீ... அப்படியே அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டாய். லலிதாவுக்கு அப்படியும் ஆத்திரம் அடங்கவில்லை. கபாலியிடம் உன்னை சின்னா பின்னமாக்கி இரவோடு இரவாய் கூவத்தில் வீசும்படி சொல்லிவிட்டு வெளியேறி விட்டாள். கபாலியும் கெட்ட எண்ணத்துடன் உன்னை நெருங்க ஆரம்பித்தான். அப்போதுதான் ரூம் கதவை உடைத்து கதாநாயகன் போல் நான் வந்தேன். கபாலியை அடித்து துவைத்தேன். போலீசில் ஒப்படைத்தேன். உன்னைக் காப்பாற்றினேன்?''

''நீங்கள்... நீங்கள்... எப்படி வந்தீர்கள்? உங்களுக்கு எப்படி நான் கபாலியிடம் சிக்கிக் கொண்டது தெரியும்...?'' ஆச்சரியமாய் கேட்டவளை அணைத்தபடி ராஜா சிரித்தான்.

''எல்லாம்... உன்னால்தான்.. அந்த பாழடைந்த லாட்ஜ முன் இருந்த டெலிபோன் பூத் மூலம் என்னுடன் பேச முயன்றாயே... அதனாலதான்! அந்த டெலிபோன் பூத் பெரியவர்தான கபாலி உன்னை வலுக்கட்டாயமாய் அழைத்துச் செல்வதைப் பார்த்து உனக்கு ஏதோ ஆபத்து என்பதை புரிந்து கொண்டு... நீ... முயற்சித்த எனது போன் நம்பருக்கு தொடர்ந்து டயல் செய்து என்னிடம் தொடர்பு கொண்டார். உனது அங்க அடையாளங்களைச் சொல்லி உனக்கு ஆபத்து போல் தான் சந்தேகிப்பதாகவும் கூறினார். உடனே.. இடம் கேட்டு.. மறு நிமிஷமே.. நான் ஓடிவந்து விட்டேன். உன்னைக் காப்பாற்றி விட்டேன்.

ஆனால்... அந்த பொறாமைக்காரி லலிதா.. இருக்கிறாளே... அவளுக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டது... உன்னை அப்படி வெறிகொண்டு அடித்தாளே அதற்கு கடவுள் சரியான தண்டனை கொடுத்து விட்டார்.''

''தண்டனையா?''

''ஆமாம்.. அந்த திமிர்க்காரி... லலிதா.. உன்னை கபாலியிடம் சிக்க வைத்துவிட்டு வெறி பிடித்தவள் போல் லாட்ஜை விட்டு வெளிவந்து அவசர அவசரமாய் சாலையை கடக்க முயன்றிருக்கிறாள். எதிரே படு வேகத்தில் வந்த லாரியை கவனிக்கவில்லை. விளைவு..? லாரியில் மோதி அடிபட்டு அவள் கால்கள் இரண்டும் அந்த இடத்திலேயே நசுங்கி விட்டது. ஆஸ்பத்திரியில் பாதி உயிரோடு துடித்துக் கொண்டிருக்கிறாள்... அவளுக்கு வேண்டியதுதான்.''

ராஜா சொல்லியதும், ''என்ன லலிதாவுக்கு கால்கள் நசுங்கி விட்டதா..? பாவம் தான்!'' என்று அந்த நிலையிலும் வெண்ணிலா வருத்தப்பட ராஜா தடுத்தான். ''அந்த மோசக்காரிக்காக கொஞ்சமும் இரக்கப்பட வேண்டாம் வெண்ணிலா! எவ்வளவு திமிராய்... பெண் என்றும் பாராமல் உன்னை கபாலியிடம் ஒப்படைத்து சின்னாபின்ன படுத்தச் சொல்லியிருக்கிறாள். போதாக் குறைக்கு உன்னை அடிக்க வேறு செய்திருக்கிறாள்? அவளுக்கு... கடவுள் மட்டும் தண்டனை கொடுக்காதிருந்தால்.. நானே.. அவளைத் தண்டித்து இருப்பேன். கொலைகூட... செய்திருப்பேன்...'' என்றவனை புருவம் விரிய வெண்ணிலா பார்க்க, ''பின் இருக்காதா..? என் இதயக் கண்மணியை என்னமாய் அடித்து விட்டாள். என்னமாய்..



துன்புறுத்தி விட்டாள்..?'' என்றபடி அவள் கன்னங்களை வருடி மெல்ல. அதில் இதழ் பதிக்கவும் ஆரம்பித்தான்.

சிலிர்த்துப் போன வெண்ணிலா ஒருகணம் அவன் தோளோடு சாய்த்து.. இறுக அவன் கரங்களுக்குள் சிறைப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். திடீரென நிமிர்ந்து துணுக்குற்றவளை... இதமாக வருடி புன்சிரிப்பு சிரித்தான் ராஜா. ''இனியும் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்காதே.. உன் காதல் இங்கு வெட்ட வெளிச்சமாகி விட்டது...''

கண் சிமிட்டலுடன் பேசி இறுக்கியவனிடம், இனியும் தன் வாதம் எடுபடாது உண்மை வெளிவந்து விட்டது என்பதை புரிந்து கொண்டு, வெட்கத்தில் குங்குமமாய்ச் சிரித்தாள். ஆனாலும் அவள் முகத்தில் சில குழப்ப ரேகைகள் ஓடுவதைக் கவனித்த ராஜா, ''உனக்கு சில சந்தேகங்கள் எழுகிறது.. தெளிவு படுத்தி விடுகிறேன்..'' என்றபடி ராஜா பேசியவன், ''வெண்ணிலா முதலில் ஒன்றைத் தெரிந்து கொள். உன்னை முதன் முதலாய்ப் பார்த்தேனே அப்போதே.. அந்தக் கணமே. உன் அழகில் நான் விழுந்து விட்டேன்... கட்டினால் அது... நீதான்... நீதான்.. என் இதயக் கண்மணி..! என்றெல்லாம் அப்போதே முடிவு செய்துவிட்டேன்.''

''நிஜமாக...வா...? சும்மா கதை விடாதீர்கள்...!'' என்று அவசரமாய்க் கேட்டு பழிப்பு காட்டியவளை ''நிஜம் தான்...! உன்னை... பார்த்ததுமே கிறங்கி விட்டேன். உன்னை அந்த நிமிடத்தில் இருந்தே காதலிக்க ஆரம்பித்து விட்டேன். வெண்ணிலா...'' என்று சமாதானப் படுத்தியவன், ''உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். வேலை பார்க்கும் பெண்களை நான் மட்டம் தட்டி பேசியது,

கலியுக கற்புக்கரசிகள் என்று வர்ணித்தது, லலிதாவை வேண்டும் என்றே ஏமாற்றுக் காதலி என்று சொல்லிக் கொண்டது. எல்லாவற்றுக்கும் ஒரு காரணம் ஒரு கதை இருக்கிறது.''

''அப்படியென்ன பொல்லாத கதை..? என்னிடம் சொல்லுங்கள் பார்ப்போம்..'' என்றவளை மேலும் இறுக்கியவன், ''பொல்லாத கதைதான்..! என்னைக் காதலித்த என்னை ஏமாற்றிய ஒரு காதலியின் கதை..!'' என்றான் அணைப்பை விடாமல்.

''என்ன.. இன்னுமொரு காதலியா?'' வெகுண்டு கேட்டவளை காந்தப் பார்வையுடன் பார்த்தவன், ''கோபப்படாதே... எல்லாம் உன்னை.. உன் அழகை பார்ப்பதற்கு முன் நடந்த கதை...! அப்போது நான் கம்பெனியின் நிர்வாகத்திற்கு வந்த புதிது. அப்பாவும் சுமார் பணக்காரர்தான். அப்போதுதான் அந்தக் காதலி தேடி வந்தாள்...?''

''என்ன காதலி தேடி வந்தாளா?''

''ஆமாம்... தேடித்தான் வந்தாள். அவளுக்கு காதலிப்பதற்கு கல்யாணம் செய்து கொள்வதற்கு ஒரு பணக்கார இளிச்சவாயன் தேவைப்பட்டிருக்கிறான். அதற்காக வலைவீசித் தேடிக் கொண்டிருக்கையில்தான் நான் அகப்பட்டுக் கொண்டேன். என் மீது காதல் வலையை வீசி உருகி உருகி காதலிக்க ஆரம்பித்தாள். நானும் உண்மையென நம்பிக் காதலை ஆரம்பித்தேன். ஆனால் கொஞ்ச நாளிலே அவளது சாயம் வெளுத்து விட்டது. என்னைவிட பெரிய பணக்காரன் ஒருவன் அவளுக்குப் பழக்கமாக.. உடனே தனது சுயரூபத்தைக் காட்டி விட்டாள். எனது காதலுக்கு டாட்டா சொல்லிவிட்டு



அவனை காதலிக்க ஆரம்பித்து அவனையே கல்யாணம் செய்து கொண்டாள். நான் இடி விழுந்தது போல் துடித்துப் போனேன். இந்தப் பெண்களே மோசம்.. காதல் என்ற பெயரில் சுயநலம் தேடும் மோசக்காரிகள் என்னும் முடிவிற்கு வந்தேன். அப்படி அலையும் பெண்களை பழி வாங்க வேண்டும் என்றும் என்னுள் கோபம் துடித்தது. அப்போது தான் நம் அலுவலகத்தில் மினுக்குக்காரி லலிதா வந்து வேலைக்குச் சேர்ந்தாள். சேர்ந்தவள் வழக்கம் போல் என்னை மயக்கி காதல் வலை வீச... என்னுள் இருந்த பழி வாங்கும் உணர்ச்சி தலை தூக்கியது. அவள் வலையில் சிக்கி.. நானும் அவளைக் காதலிப்பது போல் நடிக்கவும் செய்தேன். அப்போதுதான் நீ வந்து சேர்ந்தாய், உன்னைப் பார்த்ததும் என் பழிவாங்கும் உணர்வு எல்லாம் ஓட்டம் பிடித்து விட்டது. உன்னைப் போன்ற ஒரு பேரழகியை மணமுடிப்பதை விட்டு விட்டு... இப்படி காதலி.. ஏமாற்று என்றெல்லாம் ஏன் அலைய வேண்டும் என்று தோன்றியது. ஆனால்.. அதற்கு முன்.. முக்கியமாய் ஒரு விஷயமும் எனக்குத் தெரிந்து விட்டது....''

சொல்லிவிட்டு குறும்புச் சிரிப்புடன் நிறுத்தியவனை செல்லமாய் தட்டியவள், ''சொல்லுங்கள் என்ன விஷயம் தெரிந்தது..?'' என்றாள் வெண்ணிலா ஆவலாய்.

''நீ... காதலிக்கும் விஷயம்... அதாவது... நீயும் என்னைப் பார்த்ததும் மனதுள் சலனப்பட்டு உடனே என்னை... காதலிக்க ஆரம்பித்த விஷயம்..! அதை.. உன் நடவடிக்கைகளில்.. உன் படபடப்பு செய்கைகளில் எளிதாய் கண்டுபிடித்து விட்டேன். இருந்தாலும் அதைக் கொஞ்சம் உறுதிப்படுத்தவே லலிதாவை என்னுடைய

காதலியென்று சொல்லி உன்னைச் சீண்டி விட்டுப் பார்த்தேன். நான் நினைத்த மாதிரியே நீ கோபம் கொண்டு.. நம்.. காதலை உறுதிப்படுத்தியும்.. விட்டாய்.. அப்படித்தானே..?

சந்தேகம் விலகாமல் கேட்டவனின் மூக்கைக் கிள்ளி வெண்ணிலா தலையசைப்புடன் சிரித்தவள், ''பெரிய கண்டுபிடிப்புதான்..! போகட்டும்..! லலிதா விஷயம் என்னவாயிற்று..? அவள் உங்களை நிஜமாக... விரும்ப வில்லை... காதலிக்கவில்லை...?'' என்றவளை சாந்தமாய் பார்த்தவன், ''இன்னுமா... உன் சந்தேகம் தீரவில்லை..? அவள் விரும்பியது என்னையல்ல.. என் பணத்தைதான். கம்பெனி திவாலாகப் போகிறது என்று டூப் விட்டதும் நம்பி விட்டாள். தனது சுயரூபத்தை காட்டி விட்டாள். ஆனால் உன்னை... என்னுடன் சேர்ந்து காரில் பார்த்ததும் தான் அவளுக்கு சந்தேகம் வந்துவிட்டது. தான் ஏமாற்றப் பட்டு விட்டோம் என்பதைப் புரிந்து உன்னை பழி வாங்க திட்டம் தீட்டி விட்டாள்.''

ராஜா முடித்ததும் வெண்ணிலா பொறி தட்டியவளாய், ''அது.. சரி... நம் கம்பெனி விஷயம் என்னவாயிற்று..? காண்டிராக்ட் விஷயம் சரியாகி விட்டதா?'' கவலையுடன் கேட்டவளின் முகத்தை விரல்களால் வருடியவன், ''எல்லாம் சரியாகிவிட்டது. அவரிடம் திரும்பவும் பேசி நம் கம்பெனியின் தயாரிப்புத் தரத்தை விளக்கி ஒப்பந்தம் நீடிக்க சம்மதிக்கவும் வைத்துவிட்டேன். இனி நமக்கு ஒரு கவலையும் இல்லை.. எல்லாம்.. மகாராணி வந்த ராசிதான்..!''

''இந்தக் காதல் நிஜம்தானே..? பழி வாங்கும் தொடர்ச்சி யல்லவே...?'' குறும்பாய் சந்தேகம் கேட்டாள் அவள்.



''நீ... இப்படி சந்தேகம் கொள்வாய் என்று தெரியும். அதனாலே உடனே கல்யாண ஏற்பாடுகளையும் பண்ணி விட்டேன். என் வீட்டில் சம்மதித்து விட்டார்கள். விரைவில் உன்னைப் பெண் கேட்க வர நாளும் குறித்து விட்டார்கள்!'' ராஜா சொல்லிவிட்டுச் சிரித்தவன், ''அப்படியா..?'' என்று விழிகள் விரிய வியந்து முகம் சிவந்தவளை மேலும் இறுக்கமாக்கி தழுவிக் கொண்டான். அவன் அணைப்பில் அப்படியே கட்டுண்டு அவன் மார்பில் முகம் புதைத்து வெட்கம் படர கண்கள் மூடி கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள் வெண்ணிலா. சுகமான காதல் காற்று அவர்களைத் தழுவியது. தங்களை மறக்க ஆரம்பித்தனர் இருவரும்.